# மானிட சமூகவியல் படிப்பினைகள்

(க.பொ.த (சா.தர), (உ.தர) மாணவர்களின் கட்டுரைகளுக்கு உகந்தது.)



JPL
C13930
னா

ஜன . எம்ஜஎப்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிட சமூகவியல் படிப்பினைகள்

13930 CC

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

ஜனாபா மதீனா உம்மாஹ் எம்.ஐ.எம்
(ஓய்வு நிலை ஆசிரியர்)
128/02, கல்முனை வீதி,
அக்கரைப்பற்று - 02.
0752619804
2020.06.22

KOHA JPL

288284



288284 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

82
894.8114

## மானிட சமூகவியல் படிப்பினைகள் :

| | |
|---|---|
| நூல் | : மானிட சமுகவியல் படிப்பினைகள் |
| நூல் ஆசிரியர் | : ஜனாபா எம்.ஐ.எஷ். மதீனா உம்மாஹ் |
| பதிப்புரிமை | : ஜனாபா எம்.ஐ.எஷ். மதீனா உம்மாஹ் |
| மொழிமூலம் | : தமிழ் |
| முதற்பதிப்பு திகதி | : 2020 ஜுன் |
| பக்கங்கள் | : 148 |
| விலை | : ரூபா 400.00 |
| ISBN இல. | : 978-955-38622-3-5 |
| Bar Code | : 9789553862235 |
| கணனி வடிவமைப்பு | : மனா பிரின்டர்ஸ், அக்கரைப்பற்று. |
| அச்சுப் பதிப்பு | : நியூ செலக்ஷன் ஓப்சட், அக்கரைப்பற்று |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

என்னிரட்சகனே!
என் பெற்றோரென்னைச்
சிறு வயதில் வளர்த்துச்
சீராக்கிப் பாராட்டி
ஆற்றுப் படுத்தி அறிவூட்டி
அன்பைக் கலந்து உணவூட்டிப்
பசித்திருந்து வெறு வயிறாய்
விழித்திருந்து பகலிரவாய்
வெற்றிக்கு வித்திட்ட வித்தகர்
ஒழுக்கமும் பண்புமூட்டிய - என்
உயிர் போன்ற பெற்றோரின்
பாவங்களை மன்னித்து,
பவ வழியை விட்டகற்றி,
நேர் வழியிற் சேர்த்து வைக்க
நித்தியமாயருள் புரிவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்கள் எழுதுவது ஆரோக்கியமான பணி!

எழுத்து ஒரு முக்கியமான ஆயுதம். அது மனிதனை வசப்படுத்தக் கூடியது. பரவசம் தரக்கூடியது. அந்த எழுத்தினை எழுதுகின்றவனும் அதனை வாசிப்பவனும் ஆறுதலடைவதோடு அறிவுபூர்வமான அநுபவங்களையும் பெறுகின்றான். அத்தகையதொரு ஆற்றுப்படுத்தல் மதீனா உம்மாவால் நிகழ்ந்திருக்கிறது.

எழுத்து என்பது உண்மையில் ஒரு வலியின் பிரசவம்தான். நிரம்பிய சிந்தனைகளைக் கொண்டவன் அதனை ஏதோ ஒருவகையில் வெளிப்படுத்த முனைந்து பேசுகிறான். அல்லது எழுதுகிறான். அவை நூலாகவும் உருப்படுவதுண்டு. அவ்வாறான சிந்தனைகளின் வலியினை நூலாகப் பிரசவம் செய்திருக்கிறார் மதீனாஉம்மா.

எழுத்தும் பேச்சும் சிந்தனையும் இயல்பாக வருவதில்லை. அதற்கு ஆக்கபூர்வமான வாசிப்பு அவசியப்படுகின்றது. மனிதனைச் செம்மைப்படுத்துவது வாசிப்புத்தான். வாசிப்பின் மூலம்தான் சிந்தனைகள் பெருகுகின்றன. எழுத்தும் பேச்சும் உருவாகின்றன. ஆகவேதான் ஆக்கபூர்வமான எழுத்து என்பது வாசிப்புப் பயிற்சியின் மூலம் உருவாவதுதான். மதீனா உம்மா ஓர் இளைப்பாறிய ஆசிரியை. நல்லாசிரியை. பாடசாலைக் காலத்திலும் பின்னரும் ஆக்கபூர்வமான கல்விப் பணிகளில் ஈடுபட்டவர். ஒருசிறு பொழுதேனும் சோர்ந்திருக்காது தன் வாழ்க்கையைக் கடத்தியவர் என்பதற்கு அவர் எழுதிய நூல்கள் ஆதாரமாகும்.

இந்த வருடத்தின் (2020) ஆறு மாதங்கள் கடந்திருக்கின்றன. அதற்குள் அவர், ஆறு நூல்களை எழுதியுள்ளார். ஒரு சாதாரண மனிதரால் சாத்தியமாகாத பணியினை மதீனாஉம்மா நிறைவேற்றி இருக்கிறார். இவ்வாறு அவசரமாக நூல்களை எழுதுவதும் வெளியிடுவதும் அவ்வளவு ஆரோக்கியமானதா? என நூல்களின் செம்மை குறித்து நாம் கேள்வி எழுப்ப முடியும். ஆனால், மதீனா உம்மாவைப் பொறுத்தவரையில் மிகக் கவனமாக அந்தப்பணியினை நிறைவேற்றியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தக் காரியத்தையும் கவனமாக நிறைவேற்றுவதில் அவர் வல்லவர். அவருடைய வாசகர் உலகம் மாணவர்கள்தான். மாணவர்களுக்கு உகந்த கட்டுரைகளை, கவிதைகளை அவர் எழுதியிருக்கிறார். அவ்வகையில் அவரது 'கனவுமகன்' என்ற கவிதை நூலும் இந்தக் கட்டுரை நூலும் குறிப்பிடத்தக்கன. ஆனால் இப்போதிருக்கிற பிரச்சினை இந்த சமகாலத்து மாணவர்கள் இவற்றை எல்லாம் வாசிக்கின்றார்களா? என்பதுதான். உண்மையில் இந்த மானிட சமூகவியல் படிப்பினைகள் என்ற நூலினை வாசிக்கின்ற ஒரு மாணவன் கட்டுரையியல் பரீட்சைத் தேவையினை மிக இலகுவாகப் பூர்த்தி செய்து கொள்ளமுடியும். அவ்வகையிலேயே இந்நூலின் கட்டுரைகள் அமைந்துள்ளன. கட்டுரை வடிவிலும் உரையாடல் வடிவிலும் சிலகதைகளும் சேர்த்து இவற்றினை அவர் தொகுத்திருக்கிறார்.

தோல்வி அடைந்தவர்களெல்லாம் வெற்றி அடைந்த கதைகளும், யாரையும் இழிவாகக் கருதிவிடக் கூடாது என்பதுவும், அறம் செய்து வாழ்வதன் முக்கியத்துவமும், ஊக்கமும் மன்னிப்பும் உதவியின் பேறும், வாழ்வின் அழகும், முயற்சியும் நவீன உலகும், கொடுமையான கொரோனாவின் அறிமுகமும், சமாதானத்தின் தேவையும், அனர்த்தங்களை எதிர்கொள்வதும், விண்வெளிச் சாதனைகளும், ஊடகம், வனவளம், சித்தம், கனிவு, இளமை, இலக்கியம், வாசிப்பு, நல்ல உள்ளம், சுய கட்டுப்பாடு முதலானவையெல்லாம் இந்நூலில் நமது சிந்தனையைத் தூண்டியிருக்கின்றன.
இக்கட்டுரைகளில் முதிர்ச்சியடைந்த ஒரு எழுத்தாளரின் இறுக்கம் இல்லாவிட்டாலும் தகவல்களை அறிந்து கொள்வதற்கும் மாணவர்களைத் தூண்டுவதற்கும் வாசிப்பதற்கு உற்சாகத்தைத் தரவல்லதுமான பண்புகள் மிகைத்திருக்கின்றன.

மதீனா உம்மா சுமார் 15 நூல்களைத் தந்துள்ளார். இவ்வாறான கவிதை கட்டுரைகளைத் தவிர மாணவர்களுக்கு ஆங்கில, சிங்கள, சித்திர தத்துவ அடிப்படை அறிவினைத் தருகிற நூல்களையும் தந்துள்ளார். மதீனா உம்மா நமக்கு நம்பிக்கை தருகிற எழுத்தாளர். அவரது எழுத்துலகம் சிறக்கவேண்டும். அவருக்கு நமது பாராட்டுக்களும் பிரார்த்தனைகளும் என்றும் உண்டு.

பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ்,
மொழித்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலைப்பற்றி .....

இந்நூலில், சமூக மானிடவியலுக்கான வாழ்வியலின் பல அம்சங்களைத் தேர்ந்துள்ளேன். அவற்றின் பயன்பாடுகள் மானிடக் கடப்பாடுகளாய் அமையும். இது எனது 15 ஆவது நூல். இதுவரை எழுதியிருக்கும் 15 நூல்களும் சமூகப் பயன்பாடு கருதியவைதான். இவ்வருடம் (2020ல்) ஜூன் மாத இறுதி வரை 6 மாதங்களுக்குள் 6 நூல்களை எழுதினேன். அதிலொன்றுதான் இது.

இதிலுள்ள ஒவ்வொன்றும் எமது வாழ்வின் படிப்பினையாகவே சிந்திக்க வைக்கிறது. மானிடவியலின் செயற்பாடுகள், மனித வாழ்வுக்கு எத்தகைய பங்களிப்பை ஏற்படுத்துகின்றன; அதனால் எமது வாழ்வையும் எவ்வாறு ஒழுங்குபடுத்தலாம் என்பதைத்தான் இந்நூல் எடுத்துக் கூறுகிறது. குறிப்பாக, இளையோர்க்கும், இளைஞர்களுக்கும் மிகவும் ஏற்புடையதாய் அமைந்துள்ளது.

மட்டுமல்ல, படிக்கும் மாணாக்கரின் தமிழ் மொழிப் பாடத்திற்குப் பொருத்தமான கட்டுரை, சிறு கதை, உரையாடல், போன்றவற்றை எழுதுவதற்கும் இந்நூல் மிகவும் துணை புரியும். இதனை வாசிக்கும் அன்பர்கள் இதிலுள்ள பிழைகளைந்து நோக்குமாறும், அபிப்பிராயம் தெரிவிக்குமாறும் அன்பாய் வேண்டுகிறேன்.

இதற்குப் பொருத்தமானதும், மதிநுட்பமானதுமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரையை அளித்த தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ் அவர்களுக்கும் தகை மிகு அறிமுக உரையை அன்பளித்த கலாநிதி ஸாதியா பௌசர் (மொழித் துறைத் தலைவர், தென்கிழக்கு பல்கலைக் கழகம்) அவர்களுக்கும் மற்றும் கணனி வடிவமைப்பு மனா பிரின்டர்ஸ் எம்.எஸ்.எம். நஜீப் - JP (BA, MA in Pub.Admin.) அச்சுப் பதிப்பு நியூ செலக்ஷன் ஓப்செட் ஜே. சிறாஸ் ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

ஜனாபா. எம்.ஐ.எம். மதீனா உம்மாஹ், *(0752619804)*
128/02, கல்முனை வீதி,
அக்கரைப்பற்று *02.*
*2020.06.22*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளிருக்கும் படிப்பினைகள்...


| | பக்க இல. |
|---|---|
| 01. வழிகள் சறுக்கும் வீழ்ந்திடாதே! | 09 |
| 02. நீங்காத நினைவுகள். | 18 |
| 03. வழியிழந்த வாசுகி. | 24 |
| 04. ஆனந்தக் கண்ணீர். | 30 |
| 05. அவர்கள் அன்று பதித்த வடு. | 36 |
| 06. கண்ணனை உருவாக்க... | 42 |
| 07. பெண்களைக் கண்ணியப்படுத்துவோம். | 47 |
| 08. முயற்சி தந்த உயர்ச்சி. | 52 |
| 09. ஆசிரியப் பணி அறப்பணி. | 58 |
| 10. நீருக்குப் போராடுவதா. | 62 |
| 11. நவீனமும் நாட்டு மக்களும். | 67 |
| 12. கொரோனா வைரஸ் மானிட சமூகத்துக்குப் படிப்பினை. | 72 |
| 13. தேசிய ஒருமைப்பாடும் சமாதானமும். | 80 |
| 14. அநர்த்தங்களை முறியடிக்க... | 84 |
| 15. விண்வெளியும் மனித சாதனையும். | 89 |
| 16. ஊடகமும் சமூக உணர்வும். | 93 |
| 17. வனவளம் உயிரினங்களுக்கு வளம். | 98 |
| 18. அழுக்ககற்றுவோம். | 103 |
| 19. இளஞ் சிறாரும் இரட்சிப்பும். | 108 |
| 20. இளமையின் இரகசியம். | 113 |
| 21. ஒரு இலக்கிய கர்த்தாவின் எண்ணக்கரு. | 119 |
| 22. எழுத்துக்கு, இலக்கியமா, பேச்சு வழக்கா சிறந்தது. | 124 |
| 23. கட்டிளமைப் பருவமும் இலத்திரனியல் ஊடகங்களும் | 129 |
| 24. வாசிப்பு நிரந்தரப் பதிவை ஏற்படுத்தும். | 134 |
| 25. திருந்திய உள்ளம். | 139 |
| 26. சுய கட்டுப்பாடு தேவை. | 144 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01

## வழிகள் சறுக்கும் வீழ்ந்திடாதே!

"கண்ணீரும் கம்பலையுமாக வாழ்ந்துகொண்டிருக்கும் என தன்பு நண்பியே!" என்று விழித்த உமாமதி தொடர்ந்தும் உரைக்கிறாள். புத்திமதிகளைக் கூறியவளாகத் தொடர்ந்தாள். குற்றம் இழைக்கையில் கூறித்தடுப்பவனைச் சற்றும் விலகாமல் சார்ந்திருக்கலாம். ஆபத்து வருங்கால் அகன்று நிற்பவனைச் சீவியத்திலும் சினேகங் கொள்ளக் கூடாது. உமா முகம் மலர்ந்து பேசும் உண்மையான நண்பி என்பதால், அவளது உற்ற நண்பியின் வாழ்வில் ஏற்பட்ட சறுக்கலைச் சரி செய்ய முற்படுகிறாள். அதற்காகச் சில ஆறுதல் வார்த்தைகளை அள்ளி வழங்கினாள்.

"சசி, உன் உற்ற நண்பியாக என்னைக் கருதிவிட்டாயென்பதால், உன் வாழ்வோடு இணைந்து வழிகாட்டும் நிலை ஏற்பட்டுவிட்டது. நான் இம்முறை விடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் வீட்டுக்கு வந்தபோது உன் செய்தியறிந்து உள்ளம் துடித்துப் போனேன். நடந்து முடிந்த விடயங்களை நினைத்து நாளும் துயரத்தில் மூழ்கிக் கிடப்பது நல்லதல்ல சசி". என்று ஆறுதல் வழங்கினாள். "நீ, என் அம்மாவிடம் வேதனைப்பட்டு அழுது அங்கிருந்து வந்ததாகவும் அதற்கான காரணத்தின் முழுமையான விளக்கத்தையும் எனதம்மா வினவினார். நடந்த கதை சொல்வதா? முடிந்த கதை சொல்வதா? வண்டறுத்த மரமாக, வளர்த்தியில்லாப் பயிராக வாடிச் சோர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் என் நண்பியின் நிலையை யாரிடம் நான் எடுத்துரைப்பேன்." என்றாள் உமா. எதுவுமே பேசாதிருந்த சசியைப் பார்த்து உமா தொடர்ந்தாள்.

'என் தோழியின் இதயப் பூங்காவில் செழித்து மலர்ந்திருந்த செம்மையான வாசமலர் தடங்கல்களால் முடங்கி முகிழ்ந்து போய்விட்டது. வசந்த காலத்தில் வண்ண இசையெழுப்பும் கோகிலமாய், சிறகடித்துச் சிங்காரமாய், வாழச் சித்திரித்த என் தோழியின் வாழ்வில், பிரிவு எனுங் காரிருள் படர்ந்து வந்து பிசகு செய்த நிலையைச் சொல்வதா? அல்லது பிஞ்சு மனத்தில் பதித்த வஞ்சகத் தடயத்தை வரையறுத்துக் கூறுவதா? என்னென்று சொல்வேன் என் அவல நிலையை." என்று உமா கூறும் போது சசி தேம்பித் தேம்பி அழுதாள். ஆறாய் ஓடிய கண்ணீரை அவளருகிலிருந்த உமா துடைத்துவிட்டு, முகத்தைப் பரிவோடு வருடிவிட்டாள். உமா தொடர்ந்தும் அறிவுரைகளை அள்ளி வழங்கினாள்.

"அமைதியின் சாயலாய் ஆற்றொழுக்காய்த் தவழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த ஜீவ நதி உடைப்பெடுத்துப் பெருகுவதை ஒருவருமே உணர்ந்திருக்க முடியாது. மனித நேயமற்றவனின் உள்ளத்தில் புனிதத் தன்மையே இருக்காது. அதனால் கொள்கையிலும் குணத்திலும் அறிவிலும் சிறந்தவனைக் கொள்ளுதலே அரிய நட்பாகக் கருத வேண்டும். ஆபத்து வருங்கால் அகன்று நிற்பவனைச் சீவியத்திலும் சினேகங் கொள்ளக்கூடாது. இது உனக்கொரு படிப்பினையாயிருக்கட்டும் சசி. அதனை விடுத்து, ஆத்திரப் புத்தியால் அவசரப்பட்டு அநர்த்தமான முடிவுகளை எடுக்கக் கூடாது". என்று சற்றுக் கடினமாகக் கூறினாள் உமா, அவ்வாறு கூறும்போது உமாவின் கன்னங்களிலும் கண்ணீர்த் திவலைகள் உருண்டோடின. என்றாலும் குனிந்த நிலையிலிருந்த சசிக்கு அது விளங்கவில்லை. சமாளித்துக் கொண்டு மீண்டும் உமா தொடர்ந்தாள்.

"இனி நான் படிப்பைத் தொடரப்போவதில்லை." "என்றாயே! அந்த அவலப் போக்கை விட்டு விடு இதற்காகத்தான் படித்துப் படித்து உன்னிடம் பல தடவை கூறியுள்ளேன். கல்வி கற்கும் காலமெல்லாம் கண நேரத்தையும் பராக்கில் கழித்துவிடாதேயென்று. அவரவர் வயதுக்கு ஏற்றாற்போலதான் அந்தந்த வயதிற் கடமையாற்ற வேண்டும். வாழும்போது வழிகள் சறுக்கும். வழுக்கும், வீழ்ந்திடக்கூடாது உன்னிடமுள்ள நிதானம் நேர்வழிக்கு இட்டுச் செல்லும்." என்று உமா கூறியதும் தைரியம் வந்துவிட்டவள் போல சசி தன் தலையைத் தூக்கி உமாவை ஆர்வத்தோடு பார்த்தவாறு தன் இருகைகளாலும் தன் கன்னங்களைத் துடைத்துக் கொண்டு "என்னுடைய தவறுதான் உமா இது எனக்கொரு படிப்பினை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நீண்ட அமைதியுடனிருந்தவள் மெதுவாகக் கூறிவிட்டு மீண்டும் அமைதியானாள்.

"இளைதாக நீ உன் குடும்பத்திலிருப்பதால் எல்லோரும் செல்லப்பிள்ளையாக உன்னைக் கருதலாம். என்றாலும், எதிர்கால நல்வாழ்வுக்குத் தரமான விதையிடுவதாற்தான் வழமான வாழ்க்கைத் தருவை வளர்த்துக் கொள்ள முடியும். கல்வியைப் பயிலும் காலத்தில் எம்மிடம் வந்தடைகின்ற, கல்விக்குப் புறம்பான காரியங்களை உடனுக்குடன் அவ்விடத்திலேயே நறுக்கி விடவேண்டும். சென்று கொண்டிருக்கும் காலமும் வயதும் திரும்பி வராது. அது முன்னோக்கியே செல்லும். அதனால், பருவத்தே பயிர்செய்யப் பழகிக் கொள். கடந்த கால நிகழ்வுகளைக் களைந்தெறிந்துவிட்டுக் கல்வியைத் தொடர். அறிவால் உயர்த்திடும் உள்ளம் அமைதி குடிகொள்ளும் இல்லம். உன் படிப்பில் பாரிய கவனஞ் செலுத்தி அறிவைத் தொடரும்போது உன் மனம் அமைதி குடிகொண்டு விடும்.

நல்லவரோடு சார்ந்து நட. உன் பொல்லாவினையும் பொசுங்கிவிடும். நல்லவரோடு கொள்ளும் நட்பு தீய வழிக்குக் கொண்டு செல்லாது சசி. புரியுதா?" எனக்கேட்ட உமாவின் கேள்விக்கு உற்சாகம் ஏற்பட்டவளாய்க் கண்களைத் துடைத்தாள் சசி. "எனக்குக் கிடைத்த நல்ல நண்பியால் என் உள்ளம் ஆறுதலடைந்தது. என்துன்பத்தைக் களைந்தாய் உமா. நல்ல நட்பு வளர்ந்து கொண்டே வரும். தீய நட்பு, தேய்ந்து கொண்டே செல்லும்." என்று இடைக்கிடை இரண்டொரு வசனங்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் பேசிக்கொண்டாள் சசி. சசியின் மனம் பாறாங்கல்லாய் ஆகியிருந்தது.

"மாணவர்களாகிய நாம் மகழ்ச்சியுடன் கல்வியைத் தொடர வேண்டும் சசி. பெற்றோரும் உற்றோரும் கூறும் அறிவுரைகளைச் செவிசாய்த்து நடக்க வேண்டும். கடிந்து அறிவுரை வழங்குபவன் திருந்தி வாழ்வதற்கு உதவுபவன் அறியாத் தனமாக நீ விட்ட தவறை முற்றாக மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். எம் பிழைகளைத் திருத்திக் கொள்ள நாம் பின்வாங்கக் கூடாது. பிழையைத் திருத்திக் கொள். சரியை வளர்த்துக் கொள்."

"நாம் காணப்போகும் உலகம் ஒரு புதிய உலகம். புதிய கருத்துக்கள், சிந்தனைகள், செயற்பாடுகள், எல்லாமே எம்மிடம் புதிதாய்த் தளிர்விட்டு வளர வேண்டும். சரித்திரத்தைப் படைப்போர் மக்கள் அதில் நாமும் பங்கெடுத்துக் கொண்டு முன்னுக்கு வர முயல வேண்டும். சரித்திரத்தை உருவாக்கும் சக்தி படைத்தோர் எத்தனை பேர். அத்தனை பேரிலும் ஒருத்தியாக ஆகிவிட நாமும் அவாக்கொள்ள வேண்டும். அறிவை வளர்க்கப் பரந்த சிந்தனையும் சிறந்த ஆற்றலும் எம்மிடையே இருக்க வேண்டும். அவ்வாறிருந்தால் மட்டுமே புதிய ஆய்வுகளை மேற்கொண்டு தன் திறமைகளை வெளிக்கொணரலாம்."

"சம காலக் கொள்கைகள் எம்மிடையே பல தாக்கங்களை ஏற்படுத்தலாம். ஆனால், அவை



13930 cc
KOHA JPL
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்படாதளவில் இருக்கத்தக்கதாய்ப் பார்த்துக் கொள்ள வேண்டும். எதிர்காலத்திற்கு முகங்கொடுக்க எம்மைத் தயார்படுத்த வேண்டாமா? ஊர்ந்து செல்லும் எறும்பின் பாதையை மூடிவிட்டாலும், சுறுசுறுப்பான எறும்பு தொடர்ந்தும் தொழிற்பட்டு முன்னேறி வெற்றிபெறும். தொடர்ந்து வரும் தோல்வியைக் கண்டு தளர்ந்துவிடக்கூடாது. துணிவுடன் முயன்று சென்றால் தோல்வி பறந்தோடும் சசி." என்று நீண்டதொரு விரிவுரையைப் பேசினாள் உமா. பெரிய பேராசிரியைபோல. உண்மையிலே உமா பெரும் கெட்டிக்காறிதான். எத்தனையோ நல்லபல காரியங்களைச் சாதித்து வெற்றி கண்டிருக்கிறாள். நேர்மையும், ஒழுங்கும் அவளிடம் நிறைந்துள்ளது. துன்பப்பட்டோர்க்கு அநுதாபமும் ஆலோசனையும் வழங்கித் துயர் துடைப்பாள், தவறு விடும் சரித்திரமே அவள் வாழ்க்கையில் இருந்ததில்லை. ஒழுக்கமானவளுங் கூட. அறிவும் ஒழுக்கமும் உடையவனிடம் ஆற்றலும் ஒழுங்கும் நிறைந்திருக்கும். அறிவுரைகள் அடுக்கடுக்காக உமாவின் வாயிலிருந்து வெளிவந்த வண்ணமிருக்கும் இங்கே சசியையும் இலகுவில் விட்டபாடில்லை உமா. பாரிய விளைவால் பாதிப்புற்ற நண்பியின் மனத்தை நல்ல பக்கம் திருப்ப ஆவேசமாய் முயன்றாள்.

"1860ம் ஆண்டில், ஜனாதிபதித் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்ற ஆபிரகாம் லிங்கனின் வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்விக்கு மேல் தேல்விகளை நீ அறிந்திருப்பாயோ தெரியாது. அறிந்திருந்தால் இவ்வாறு நீ ஒதுங்க எத்தனித்திருக்கமாட்டாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரறிஞரும், பிரபல்யமானவருமான ஆபிரகாம் லிங்கன் என்னென்ன கைங்கரியங்களைச் செய்திருக்கிறார் தெரியுமா? அவர் ஆர்வத்துடன் நடாத்திக் காத்து வந்த தொழில் 1831ல் பெரும் நட்டமடைந்து சரிந்துவிட்டதால் தோல்வியைத் தழுவினார். இது அவருக்கேற்பட்ட முதற் தோல்வியாகத்தான் கருதினார். அதனையடுத்த வருடம் 1832ல் சட்ட சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற முயன்றார். வெற்றி பெற்றாரா? இல்லை. அதிலும் தோல்வியடைந்தார். அது அவரது இரண்டாவது தோல்வி. அதனைத் தொடர்ந்து வியாபாரத் தொழிலை மீண்டும் ஆரம்பித்து நடத்தினார். புதிய நுட்பங்களை அதிற் புகுத்தி வழி நடாத்தியும் மீண்டும் வியாபாரத்தில் தோல்வி கண்டார். இது அவரது மூன்றாவது தோல்வி.”

“1834ல் சட்ட சபைத் தேர்தலில் திரும்பவும் போட்டியிட்டுத் தோல்வி கண்டார். அது நாலாவது தோல்வி. அவரது ஐந்தாவது தோல்வி தான் 1836ல் சட்ட சபைத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தது. ஆறாவது, 1840ல் “எலக்டர்” தேர்வில் தோல்வியடைந்தார். பின், 1843ல் காங்கிரஸ் தேர்தலிலும், தோல்வியுற்றார். 1848ல் மீண்டும் இதில் தோல்வி. மனமுடைந்து வாழாதிருந்தாரா? இல்லை. 1855ல் செனட் தேர்தலில் போட்டியிட்டார். வெற்றி பெறவில்லை. இவ்வாறு ஒன்றன் பின் ஒன்றாகப் பத்துத் தோல்விகளையும் ஏற்றுச் சித்தம் தடுமாறாதிருந்தார். நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனும் கிஞ்சில் அளவும் குன்றாத ஆபிரகாம் லிங்கன் 1860ல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு மாபெரும் வெற்றியை ஈட்டிக்கொண்டார். அமெரிக்க ஜனாதிபதியானார். அவரும் எம்மைப் போன்ற மனித இனம்தான். தெய்வமல்ல. அதனால் துன்பத்தைக் கண்டு துவண்டுவிடாதே. தொடர்ந்தொரு வெற்றிவரும்."

"கடந்த கால, இன்பத்தை நினைவு கூர்வது நிகழ்காலத் துன்பத்தை அதிகப்படுத்தும்.

'நல்லாரெனத் தாம் நனி விரும்பிக் கொண்டோரை
அல்லாராயினும் அடக்கிக் கொள்ள வேண்டும்.'

என்பது திருக்குறள். தெளிவான அறிவிருந்தால் எளிதாகக் காரியமாற்றலாம். திடீரெனத் தீர்மானம் எடுக்கக்கூடாது. உனது எதிர்காலம் சீரும் சிறப்புமாய் அமையுமென்பதே எனது முழு நம்பிக்கை. நம்பிக்கையைத் தளரவிடாதே. கோடையின் கோடியில் வசந்தம் வருவதற்கு வழியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் என்பது தான் இயற்கையின் நியதியென்பதை உனக்கு நினைவூட்டுகிறேன்." என்று கூறி முடித்தாள் உமா. சசியின் மனத்தை இறுக்கிப் பிடித்திருந்த பழுவான பாறை துகள்களாய் உடைந்து சாம்பலாகியது. புத்துணர்வும், புதுத் தெம்பும் ஏற்பட்டவளாய் இலகுவாய்ச் சிரித்தாள் சசி, உமாவைப் பார்த்து.

"செருக்கற்றவன் கூறும் ஆலோசனை
உருக்கமுடையதாயிருக்கும்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 01. | முகிழ்ந்து | - குவிந்து |
| 02. | சித்திரித்த | - அலங்காரமாய்ப் பேச |
| 03. | பிசகு | - தவறு |
| 04. | ஆற்றொழுக்காய் | - ஆற்றின் நீரோட்டம் |
| 05. | அநர்த்தம் | - அழிவு, கலகம் |
| 06. | அவலம் | - துன்பம் |
| 07. | தரு | - மரம் |
| 08. | கிஞ்சில் | - சிறிதான / கொஞ்சம் |
| 09. | கோடியில் | - எல்லையில் / நுனியில் |

—*—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02

# நீங்காத நினைவுகள்

பால கிருஷ்ணன் என்பது இவனது பெயராக இருந்தாலும் "பாலன்" என்று சுருக்கமாயிவனை எல்லோரும் அழைப்பார்கள். பாலன் ஒரு நாள் பஸ் நிலையத்தில் சீலனைச் சந்திக்க நேர்ந்தது. சீலன் அவனுடன் சக வகுப்பு மாணவனாய்ப் படித்து இப்போது பிரபல்யம் வாய்ந்த தொழிலதிபராயிருக்கிறான். தொண்ணூறுக்கு மேற்பட்ட தொழில் வல்லுநர்களின் சிறந்த அதிபராயுமுள்ளான்.

"என்ன பாலன் பலமாய் யோசிக்கிறாய்." என்றான் சீலன். "என்னோடு நேர்முகப் பரீட்சைக்குச் சென்ற பன்னிருவரும் தெரிவு செய்யப்பட்டு நான் மாத்திரம் விடுபட்டுப்போனேன். இன்னுமிரு தினங்களில் நியமனக் கடிதங்களும் அவர்களுக்கு வந்து சேரும். எனக்கும் முப்பது வயதாகிறது. அடுத்த வருடத்திலிருந்து முப்பது வயதுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பட்டோர் அரசாங்கப் பதவி வழங்கலுக்கு உட்படுத்தப்படமாட்டார்கள். அதைத்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்." என்று கவலை தோய்ந்த முகத்துடன் கூறினான் பாலன். "ஏனிதை என்னிடம் முன்கூட்டியே சொல்லவில்லை." என்றான் சீலன். "உன்னிடம் கூறுவதற்கு வெட்கமாயிருந்ததுடா," எனப் பகர்ந்தான் பாலன். "சரி, சரி நேரத்தைக் கழிக்காதே உனது தஸ்தாவேஜுகளில் மும்மூன்று பிரதியெடுத்துக்கொள். இன்றே என்னுடன் கொழும்புக்குப் புறப்படு" என்று கூறி, பாலனை அழைத்துக் கொண்டு சென்றான்.

அடுத்த நாட்காலை உரிய திணைக்களத்துக்குப் பாலனுடன் சென்றான் சீலன். மேலதிகாரியிடம் விபரத்தைத் தெளிவாகக் கூறினான். சிங்கள மொழியில் வர்த்தமானியில் வெளியான விளக்கத்தைத் தமிழில் மொழிபெயர்த்துப் பிரசுரமாக்கப்பட்டபோது விட்ட மொழிபெயர்புத் தவறைத் தருக்க ரீதியாகவும் நீதமாகவும் கதைத்துப் பாலனுக்கு நியமனம் பெற்றுக் கொடுத்தான் சீலன். பாலனுக்குப் பெரும் மகிழ்ச்சி. இருவரும் வந்து சீலனின் தங்குமறையை அடைந்தனர்.

"சிறிது ஓய்வெடுத்துக்கொள்" என்று கூறி சீலன் அரைமணித்தியாலத்திற்கு வேலையொன்று இருப்பதாகக் கூறி வெளியே சென்றுவிட்டான். பாலன் தன் கடந்த கால நினைவுகளை இரைமீட்டினான். சீலன் வறிய குடும்பத்தில் பிறந்தவன். அமைதிப் போக்குடையவன். படிப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமாராகத்தானிருப்பான். ஏனைய மாணவர்கள் வசதியான குடும்பத்திற் பிறந்தவர்கள். படிப்பிலும் கெட்டிக்காரர்கள். அதனால், சக மாணவர்களும் ஆசிரியர்களும் சீலனை ஏளனம் செய்வார்கள். இருந்தாலும் சீலன் ஆசிரியர்களை மதிக்கும் நல்லொழுக்கமுள்ளவன். மட்டுமல்ல, தன் வகுப்பிலுள்ள சக மாணவரிடத்திலும் இரக்கசுபாவமுள்ளவனாய் இருந்தான்.

வகுப்பில் எல்லோரும் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு உணவுகளைக் கொண்டுவந்து உண்பார்கள். ஆனால் சீலன் எந்நாளும் தயிர்ச் சாதம் மட்டுமே எடுத்து வருவான். பாலன் ஒரு நாள் சீலனுக்காகத் தயார் பண்ணிய விஷேட உணவுப் பொதியொன்றைக் காலை உணவுக்காக யாருக்குந் தெரியாமல் கொடுத்து உண்ணவைத்தான். ஆயினும் எல்லோருடனும் சேர்ந்து கொண்டு சீலனை நையாண்டி பண்ணுவான். வகுப்பில் எல்லோரும் முதலிரு வரிசையிலிருந்து கொண்டு உயரம் குறைவான சீலனைக் கடைசி வரியில் அமரவைப்பார்கள். இதனை வகுப்பாசிரியரும் கண்டுங் காணாமலிருந்து விடுவார்.

பாடசாலைச் சிரமதான வேலைகளுக்கு மட்டும் சீலனை முன்னுக்கு அனுப்பிச் சிறப்பாக வேலை வாங்குவார்கள். விடா முயற்சி விறல் பெற வைக்குமென்று வலிந்துழைப்பவன் சீலன். ஒரு சிரமதான வேலையின் போது குழுக் குழுவாகக் கொடுத்த வேலையில் தன் குழுவுக்குக் கொடுத்த வேலையைத் திறமையாய் முடித்துவிட்டு சீலன் அடுத்த குழுவுக்கும் உதவி செய்தான் அதனால் அவர்களின் வேலையும் முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த குழுவிலிருந்த அஜித் என்பவனின் ஐந்நூறு ரூபா நோட்டு, தொலைந்துவிட்டது. சீலனிற் சந்தேகப்பட்டனர். “இதற்காகத்தான் சீலன் எமது குழுவினர்க்கு உதவிசெய்ய வந்தான்.” என்று கூறி சிலர் அவனுக்கு அடித்துவிட்டனர். வகுப்பாசிரியர் அதிபரிடம் அவர்களை அழைத்துச் சென்றார். அதிபர் நடந்த செயல்களைத் தெளிவாகக் கேட்டறிந்தார். அதிபரின் நுண்ணறிவைப் பயன்படுத்தி மாணவர்கள் சிரமதானம் செய்த இடத்துக்கு அழைத்துச் சென்றார். அவர்கள் அங்கே குவித்து வைத்திருந்த புற்குவியலைச் சாவதானமாய்க் கிளறி அதனுட் கசங்கிக் கிடந்த ஐந்நூறு ரூபா நோட்டைக் கண்டு பிடித்துக் கொடுத்தார். பார்த்து நின்ற ஏனைய மாணவர்களும், ஆசிரியரும் வெட்கத்தால் தலை குனிந்தனர். மாணவர்களைச் சீலனிடம், அதிபர் மன்னிப்புக் கேட்க வைத்தார். மாணவர்களுக்கு அறிவுரை கூறி அனுப்பிவைத்தார்.

அந்த வகுப்பு மாணவர்கள் இந்தத் தலைகுனிவைச் சரிப்படுத்த அடுத்த வழியைக் கையாண்டனர். சீலனுக்கு ஆதரவாக இருந்த ஒரேயொரு ஆசிரியர் சிவராம். பாலன் ஒருநாள் சிவராம் ஆசிரியரிடம் சீலனைப்பற்றித் தவறாக, இல்லாத பொல்லாத கதைகளைக் கூறி வைத்தான். சீலன் மிகுந்த பொய் கூறுவதாகவும், சிவராம் ஆசிரியரின் உதவிகைளப் பெற்றுக் கொண்டும் அந்த ஆசிரியருக்கு அவதூறு கூறி இழிவு படுத்தியதாகவும், வதந்தியைப் பாடசாலையிற் பரப்பி விட்டான். “ஏழை சொல் அம்பலம் ஏறாத”ல்லவா. எடுத்துரைத்தும் எவருமே ஏற்றுக்



288284
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவில்லை. சீலனை அவ்விடத்திலும் அவமதித்துத் தள்ளினார்கள்.

சீலன் தனித்து விடப்பட்டான். என்றாலும் இவையத்தனையும் அவனுக்குச் சவாலாக இருந்தன. இவை, துன்பத்திற் பிறக்கின்ற நம்பிக்கை. வாதாடி வெல்வது வழக்கின் வெற்றியானால் போராடி வெல்வதுதான் புகழுக்குரிய வெற்றியென நினைத்து ஓயாது உழைத்தான். முடிவில் முகந்தாழ்த்திச் செல்லும் கதிரவன் விடிவில் மறுநாள் மகிழ்ச்சியாய் வருவான். க.பொ.த உயர்தரத்துடன் கல்வியை நிறுத்தித் தொழிலில் ஈடுபட்டான். எட்டு வருடங்கள் கழிந்தன. ஒன்பதாம் வருடத்தில் ஒரு பெரும் கம்பனியை உருவாக்கினான் சீலன். அல்லுபகல் உழைத்தால் தொல்லுலகை வெல்லலாமென உறுதிகண்டான் அவன். எடுத்த முயற்சி கொடுத்தது பயனை. இப்போது சீலன் ஒரு தொழிலதிபர். எல்லோராலும் மதிக்கப்படுபவன். அவ்வாறிருந்தும் அகங்காரங் கொள்ளாமல், பழைய காலச் சம்பவங்களை என்னுடன் எடுத்து நோக்காமல் என்னிடம் மனிதாபிமானமாய் நடந்து கொள்கிறானே இந்தச் சீலன். இவன்தான் மனிதனில் உயர்ந்தவன்.

எப்படிப்பட்டோரையும் இழிவாய் நடாத்தக்கூடாது. காலமும் முயற்சியும் எல்லோருக்கும் கைகொடுக்கும் என்ற படிப்பினையை இப்போதுதான் உணர்ந்து கொண்டான் பாலன். காலங்களைப் பின்னோக்கி நடந்து பார்த்த பாலனின் கண்களிலிருந்து கண்ணீர்த் தாரை கரை புரண்டோடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவில் இருக்க வேண்டியது வாய்மை.
நடத்தையில் இருக்க வேண்டியது நேர்மை.
உள்ளத்தில் இருக்க வேண்டியது தூய்மை

01. பகர்ந்தான் - கூறினான்
02. சாதம் - சோறு
03. இரைமீட்டுதல் - அசைபோடுதல்
04. நையாண்டி - சிரிப்புப் பேச்சு
05. விறல் - வெற்றி
06. சாவதானம் - விரைவின்மை
07. அவதூறு - பழிச்சொல்
08. இழிவு - தாழ்வு, இகழ்ச்சி
09. அம்பலம் - சபை
10. தாரை - நீரொழுக்கு

—*—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03

# வழியிழந்த வாசுகி

கணவனை இழந்த முதலாம் வருடச் சடங்குகளை அன்று பூரணமாய் முடித்துவிட்ட வாசுகிக்குத் தனிமையும் அமைதியும் தேவைப்பட்டது. அவளுக்கு இப்போது எழுபத்தைந்து வயது. அவளிருக்கும் விடுதிக் கட்டிடத்தின் முன்னாலிருந்த பரந்து வளர்ந்த மாமரத்தடியில் "கொங்க்றீற்" இருக்கையில் அமர்ந்துகொண்டாள். கடந்த கால நிகழ்வுகளெல்லாம் ஒரு கதையாக முடிந்திருந்தது வாசுகிக்கு.

அவளுக்கு மூன்றுபிள்ளைகள். மூன்றும் ஆண்பிள்ளைகள். வாசுகியின் கணவன் ரவி. தன் குழந்தைகள் சிறு பிள்ளைகளாயிருக்கும் போதே கனடா சென்று அங்கே தொழில் புரிந்து வந்தான். மாதாந்தம் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் செலவுக்குப் பணம் அனுப்பிக் கொண்டிருப்பான். நல்ல வருமானம். குடும்பத்தின் செலவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக மீதிப்பணத்தை ரவி அவனது ஊரான வத்தளையில் வங்கியொன்றில் சேமித்து வந்தான். அவர்கள் குடியிருக்கும் வீடு சாதாரணமானது. அதனால், சேமிப்புப் பணத்தில் வீட்டைப் பெரிதாக்கிக் கொண்டார்கள்.

பிள்ளைகளின் படிப்புக்காகப் பணம் செலவழிப்பதுடன் ரவியின் கடமை முடியும். ஆனால் இப்பிள்ளைகளுடன் சீர் தூங்குவதும் முயற்சியெடுப்பதும், சிரமப்படுவதெல்லாம் வாசுகியின் விதியோடு சேர்ந்திருந்தது. குழந்தைகளினருகிலிருந்து அவர்களின் படிப்பில் தந்தை கவனமெடுப்பதற்குப் பதிலாக வாசுகிதான் வருடக் கணக்காகப் பிள்ளை வளர்ப்பதுடன் நின்றுவிடாது, படிப்புடன் சேர்ந்த எல்லாத் தேவைகளையும் பூரணப்படுத்திக் கொடுத்துத் தன் வாழ்க்கையே இந்தக் குழந்தைகள்தான் என்றளவுக்கு ஆகிப்போயிருந்தது வாசுகிக்கு.

அதிகாலை எழுந்ததிலிருந்து அவளுக்கு வேலைதான். காலை உணவுகளைத் தயார் படுத்தவேண்டுமல்லவா. அதனால் தான் வீட்டிலுள்ள வேலைக்காரியையும் வேலை செய்ய உதவிக்கழைத்துக் கொண்டு பறபறவென்று தொழிற்படுவாள். காலையுணவை வெவ்வேறு பெட்டிகளில் அடைத்து மூவருக்கும் தயாராக்கிவிடுவாள். அதன் பின் குழுந்தைகளைக் குணமாக நித்திரையிலிருந்து எழுப்பியெடுத்து, குளிக்க வைத்து, உடையணிவித்து, சிறிது உணவூட்டித் தேனீரும் கொடுத்து முடிக்க நேரம் சரியாகிவிடும். நேரத்தைப் பார்ப்பாள் வாசுகி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழுமணியைத் தாண்டியிருக்கும். தன் பிள்ளைகளைப் பாடசாலை வரை அழைத்துச் சென்று விட்டுவருவாள்.

வீடு வந்தாலும் வாசுகிக்கு ஓய்வில்லை. பிள்ளைகளின் உடைகளைக் கழுவி, அலங்கோலமாய்க் கிடக்கும் புத்தகங்களை அடுக்கி, குழந்தைகளின் படுக்கைகளைச் சீர்செய்து அறையையும் தூய்தாக்கிய பின் அடுத்து ஆரம்பிப்பாள் மற்ற வேலைகளை. பாடசாலை முடிந்து வீடு வரும் பிள்ளைகளை அன்புடன் அரவணைத்து, உறவாடிக் கைகால் முகங்கழுவிப் பகற்போசன மூட்டுவாள். பற்று வைத்துக் கற்றாலே யன்றி, படிப்புத்தளிர் விட்டு வளராது. அதனால் மாலை நேரமானதும் அன்றையத் தினம் பாடசாலையில் பிள்ளைகள் படித்தவற்றை மீட்டி வாசுகி பாடம் சொல்லிக் கொடுத்துப் படிப்பில் பற்றையேற்படுத்துவாள். பாடசாலையில் கொடுத்திருக்கும் வீட்டு வேலைகளை ஒழுங்குமுறையாகக் குழந்தைகளுடன் துணையாயிருந்து முடித்துக் கொள்ள உதவுவாள்.

இரவானதும் சமய வழிபாடுகளைச் சொல்லிக் கொடுத்து அதிற் சிறிது நேரம் ஈடுபடச் செய்வாள். இராவுணவை ஊட்டி அன்புடன் அரவணைத்து நித்திரையாக்குவாள். ஒரு தாய் குழந்தையைப் பெற்று உணவூட்டி உடையணிவிப்பதெல்லாம் பெரிய விடயமல்ல. அவனுக்கு நற்பண்பு, நல்லறிவு, நேர்மைகளை ஊட்டி வளர்ப்பதுதான் பெரியது. அதனால், தன் குழந்தைகள் நேர்வழியைத் தவறிவிடக்கூடாதென எல்லா விடயங்களிலும் நேர்மையைக் குழைத்து அறிவூட்டுவாள். அதனால் அந்த மூன்று பிள்ளைகளும் ஊரார் பாராட்ட வளர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனர். "அல்லும் பகலும் அதுவே சிந்தையானால் கல்லும் பிளந்து கனிந்துருகும்." வாசுகி இவ்வாறு பிள்ளைகளோடு தினமும் இயந்திரமாகத்தொழிற்பட்டதால் பிள்கைள் முன்னேற்றமடைந்தனர்.

இரவு பகலாக இறையைத் துதி செய்து தன் குழந்தைகளின் எதிர்கால உயர்வுக்கு மன்றாடுவாள். அவர்களுக்காகவே தன்னை அர்ப்பணித்திருந்தாள். உரிய வேளைக்கு உண்பதற்கும் இவளுக்கு வாய்ப்பிருக்காது. தினமும் பகற்போசனம் உண்ணும் போது மாலை மூன்று மணியைத் தாண்டிவிடும். தாய் படும் கஷ்டத்தையும், ஓய்வற்ற நிலையையும் குழந்தைகளாற் கண்டு கொள்ள முடியாத இளம் பருவம். என்ன செய்யலாம். "அழுதாலும் பிள்ளை அவளே பெறவேண்டும்." பெற்றோர் பிள்ளைக்குக் கொடுக்கும் சொத்து அவனை நல்லவனாய் வளர்ப்பதை விடப் பெறுமதி வேறில்லையென வாசுகி நினைப்பாள்.

இத்தகைய இக்கட்டான காலங்கள் கடந்து செல்கையில், பிள்ளைகளும் பெரியவர்களானார்கள். இத்தனை நிகழ்வுகளுக்குமிடையில், ரவி இரண்டு வருடங்களுக்கொரு தடவைதான் வீடுவருவான். அவ்வாறு வந்தாலும் இரண்டு மூன்று மாதங்கள் மட்டுமே வீட்டிற் தங்கிவிட்டு மீண்டும் சென்றுவிடுவான்.

ஒருமுறை ஊர் வந்தபோது இருபத்தாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதையடைந்திருந்த மூத்த மகன் மகேஷை நல்லதொரு சம்மந்தத்தில் சிறப்பான முறையில் திருமணம் முடித்துக் கொடுத்தார்கள். அதற்கடுத்த இரண்டுவருடங்களில் இரண்டாவதுமகன் சுரேஷையும் அதனையடுத்து மூன்றாம் மகன் தினேஷையும் மணம் முடித்துக் கொடுத்தார்கள். மகேஷ் வெளிநாட்டிலும், சுரேஷும், தினேஷும் உள்நாட்டிலும் தொழில் புரிந்தார்கள்.

தந்தைக்கு வயதாகிவிட்டதால், வெளிநாடு சென்று உழைக்காமல் ஓய்வெடுத்துக் கொண்டு வீட்டிலிருக்குமாறும், தாங்கள் நன்கு கவனிப்பதாகவும் கூறித் தந்தையை வீட்டில் வைத்துக் கொண்டனர். பெற்றோரை அவர்கள் நல்ல முறையிலும் கவனித்து வந்தனர். பெற்றோருக்குத் தேவையான உணவு, உடை ஏனைய செலவுகள் மருந்து போன்றவற்றைக் கவனித்து வந்ததுடன் தந்தையின் தனிப்பட்ட செலவுக்கும் பணம் கொடுத்து வந்தனர். என்றாலும் ரவி பணத்தாசை பிடித்தவன்.

பிள்ளைகள் கைச் செலவுக்காகக் கொடுக்கும் பணம் போதாதென்று தருக்கம் செய்வான். பொருளாசை கொண்டவனுக்குப் போதுமென்ற மன நிலையிருக்காது. ஆசையிருக்க வேண்டும் அளவோடுதான் அதனை மீறினால் அழிவுதான். அதனால் பிள்ளைகளோடு முரண்பட்டு, சென்ற வருடம் வாசுகியை அழைத்துக் கொண்டு முதியோர் பராமரிப்பு விடுதியில் அடைக்கலமாகியிருந்தான். ஆயினும் வாசுகி ஏழையல்ல ஆனால் அவளைப் பராமரிக்க இப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருமில்லை.என்றாலும், தன் பிள்ளைகளின் நலனுக்காக இன்னும் பிரார்த்தனை செய்கிறாள் வாசுகி. ஏனென்றால் அவர்களை ஆளாக்க அவள் பட்டபாடு அப்பப்பா! கொஞ்சமல்ல பணத்தாசை பிடித்த கணவனால், பாசமாய் வளர்த்த பிள்ளைகளைப் பிரிந்தேனே என்ற படிப்பினை வாசுகியின் உள்ளத்தைக் கலங்க வைத்தது.

ஆசை, பொறாமை, கடுஞ்சொல் அகற்றி வாழ்பவன்
ஆறம் செய்து வாழ்பவனைப் போன்றவன்.

01. வழி - சந்ததி, கிளை, சுற்றம், இடம்
02. சடங்கு - சாஸ்திர வழக்கக் கிரியை
03. பற்று - விருப்பு
04. அல் - இரவு
05. அர்ப்பணித்தல்- ஒப்பித்தல்
06. தருக்கம் - நியாய வாதம்
07. முரண்பாடு - மாறுபாடு

—*—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04

# ஆனந்தக் கண்ணீர்

தூக்கத்திலிருந்த சீமாவைத் தட்டியெழுப்பினாள் அன்னை மீனா. சீமா என்ன செய்வாள் அவள் சிறுமி. பெரியவர்களென்றால் தட்டியெழுப்பும் போது துயில் விட்டெழுந்து துணிந்துவிடுவார்கள். சிறயவளால் முழுமையாக எழுந்து நிற்க முடியவில்லை. அதைப்பற்றிப் பெற்றோரும் **துளக்கம்** கொள்ளத் தேவையில்லை. துணிவதுமில்லை. அரைகுறையாய் விழித்தெழுந்தாள் ஐந்தாம் வகுப்புப் படிக்கும் சீமா.

மீனாவின் தோழிலே பழையதொரு பிரயாணப் பை தொங்கியது. அதனுள் ஒவ்வொருவருக்கும் தேவையான இரண்டொரு உடைகளை நிரப்பி வைத்திருந்தாள். மீனாவின் இடையிலே அவளது இளைய மகளை இருத்திக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது கணவன் கார்த்தி அன்றாடம் உழைக்கும் பணத்தில் ஒரு கிழமைக்குத் தேவையான உணவுப் பொருட்களைச் சேகரித்து வைத்திருந்தான். அதனைச் சிறியதொரு மூட்டையாக்கித் தூக்கிக் கொண்டு முன்னே நடந்தான். சீமாவின் கையைத் தனது ஒருகையால் பிடித்துக் கொண்டு பின்னே நடந்தாள் மீனா.

இரவு பதினொரு மணியைத் தாண்டியிருந்தது. இருள் கவ்விக்கொண்ட ஒற்யைடிப் பாதையில் ஓட்டமும் நடையுமாகச் செல்கிறார்கள். "அம்மா! என் புத்தகங்களை எடுத்தாயா?" என்று கேட்ட சீமாவின் வாயைத் தன் உள்ளங்கையால் மூடியவாறு "ஆம் எடுத்துள்ளேன். சத்தம் போடாமல் வா." எனக் கூறிக்கொண்டு மீனா நடக்கிறாள். கார்த்தி என்றுமில்லாதவாறு அன்று கடும் யோசனையுடன் நடக்கிறான். அவனது ஆழமான சிந்தனை அவனை அமைதியாக்கிவிட்டிருந்தது. டுமீல்! டுமீல்! என்ற துப்பாக்கி வேட்டுச் சந்தம் தொடர்வதைக் கேட்டுத் துடியாய் துடிக்கிறாள் சீமா. " பெரும் யுத்தம் நடக்கிறது. உயிரையாவது தப்பித்துக்கொள்வோம்." என்று கார்த்தி கூறிக்கொண்டு நடக்கிறான்.

இரவு முழுவதும் அவர்கள் நீண்டதூரம் நடந்த களைப்பினால் ஓரிடத்தில் நடையை நிறுத்திக் களைப்பாறினார்கள். சரமாரி பொழிந்த வேட்டுச் சத்தங்கள், குண்டு வெடிப்புச் சத்தங்களெல்லாம் குறைந்திருந்தன. நித்திரை அவர்களை விட்டு நீண்ட தூரம் போயிருந்தது. ஏழையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம் என்றாலும் இரவு முழுவதும் நிம்மதியாய்த் துயின்று எழும்பும் பழக்கமுள்ளவர்கள். அன்று நித்திரையை மட்டுமல்ல நிம்மதியையும் சேர்த்துத் தொலைத்து விட்டார்கள். பாவம். சுற்றுப் புறம் சற்று அமைதியாயிருந்தாலும் இதயங்கள் இன்னும் அமைதி பெறவில்லை. காலைக் கதிரவன் அப்போதுதான் கண் விழித்து அடக்கமாய் நடக்க ஆரம்பித்தான். அது, வேட்டுச் சத்தங்கள் கேட்காத தூரம். சுமார் பதினைந்து கிலோமீற்றர் நடந்திருப்பார்கள். சீமாவின் கால்களிரண்டும் வீங்கிப் போயிருந்தன. நிலத்தில் அடிவைக்கக் கூட அவளால் முடியாதிருந்தது. கூடவே காய்ச்சலும் பிடித்திருந்தது. அவ்வூர் வைத்திய சாலையில் சேர்த்தார்கள்.

வைத்திய சாலையில் இருந்து கொண்டே அவள், தான் பாடசாலைக்குச் செல்வதுபற்றியும், படிப்புப் பற்றியும் பெற்றோரிடம் வினவிக் கொண்டிருந்தாள். சில நாட்களில் நோய் குணமாகியதும் அவர்கள் தற்காலிகமாய்க் குடியிருக்கும் அவ்வூர்ப் பாடசாலையிற் சேர்த்தார்கள். அவர்கள் வந்து சேர்ந்த ஊர் ஒரு கிராமமாயினும் அங்கே வசிக்கும் மக்கள் மிகவும் நல்லவர்களாயிருந்தனர். அவர்களிடம் இரக்க சிந்தை நிறைந்து காணப்பட்டது. பிறர் துன்பத்தில் பங்கு கொள்பவன் குறைவின்றிய வாழ்க்கையைப் பெறுவான். அவர்களின் ஊரில் வசிப்பதற்கு ஒரு இடத்தையும் கொடுத்து ஆதரித்து வந்தனர்.

சீமாவும் மிக ஆர்வத்துடன் கற்றாள். ஆரம்பத்திலிருந்தே அவளது சொந்த ஊரிலும் திறமையாகத்தான் கற்றவள். அவளோடு எல்லா ஆசிரியர்களும் இரக்கமாயிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது பாடசாலைச் சீருடையில் ஒன்று தான் எடுத்து வந்திருந்தனர். உடனே இன்னொன்றை வாங்கிக் கொள்வதற்கும் முடியாத நிலை. சீமாவும் அதைச் சிறிது அறிந்திருந்தாள் தன் பெற்றோரிடம் அடம்பிடிக்கமாட்டாள். ஆனால் அந்த ஒரு சீருடையையும் எப்போதும் நன்கு கழுவி,அழுக்கின்றி, துர்நாற்றமின்றித் தூய்மையாகவே தினமும் பாடசாலைக்கு அணிந்து செல்வாள். உடன் பிறந்தோர் வீட்டுக்குச் செல்லும் போதும் உடல்,உடை சுத்தமாயிருக்கவேண்டும்.

புலமைப் பரிசில் பரீட்சைக்கு இன்னும் ஆறு மாதங்களே இருந்தன. அவளது வகுப்பாசிரியை மேலதிக வகுப்புக்களை மாலை நேரங்களில் நடாத்துவார். அதற்காகப் பிரத்தியேகமாகப் பணம் செலுத்துவதற்கும் முடியாத குடும்ப நிலையாயிருந்தாள். அதனை எதிர்பார்க்காத ஆசிரியை தன் வீட்டில் சீமாவையும் அழைத்துக் கல்வியூட்டினார். குடும்ப வறுமை நிலையை அறிந்திருந்த சீமா மாலை நேர வகுப்புக்குச் செல்லும் போது ஆசிரியைக்குச் சிற்சில வேலைகளைச் செய்து கொடுப்பாள். ஆசிரியையின் சிறு குழந்தையை அரவணைப்பாள். சீமாவின் அன்னை மீனாவும் சேர்ந்துதான் செய்வார்கள்.

இவ்வாறு பகற்பொழுதுகள் கழிவதால் இரவு வேளையிற் தான் பாடசாலையிற் படித்ததை மீட்டிக் கொள்ள நேரம் இருந்தது. பத்து வயதுப் பிள்ளையாயிருந்தாலும் இரவு பத்து மணிவரை விழித்திருந்து படிப்பாள். சுயமாகப் படித்துத் தன் அறிவை வளர்த்துக் கொள்ளும் முயற்சி அவளிடம் நிறையவே காணப்பட்டது. அதிகாலை ஐந்து மணிக்கு எழும்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா செய்த இடியப்பங்களை இரண்டு மூன்று கடைகளுக்கு அம்மாவுடன் சென்று கொடுப்பாள். மள மள வெனக் காலைக் கடன்களை முடித்து, முன் கூட்டியே பாடசாலைக்குச் சென்றுவிடுவாள்.

சொந்த ஊரில் செய்த தொழில் போன்று வந்த இடத்தில் கிடைக்கவில்லை கார்த்திக்கு சுமாரான உழைப்போடு சுழன்று கொண்டிருந்தது வாழ்க்கை. தொழில் சிறிதெனினும் தூய்மையும் நேர்மையுமதில் தோய்ந்திருக்க வேண்டும் கார்த்தி நேர்மையோடு வேலை செய்பவன்.ஆனால் அவன் சொந்த ஊரைவிட்டு வந்ததை நினைத்துத் தினமும் உள்ளரவம் வாட்டும். ஆறு மாதங்களும் ஆறாத் துயரமாகக் கழிந்தன.சீமாவுக்கு அரசாங்கப் பரீட்சைக்குரிய தினம் நாளை.அவளது பழைய சீருடையைப் பழுதின்றிக் கழுவி வைத்தாள் மீனா.அதையணிந்து சென்று பரீட்சையும் எழுதிவிட்டாள் சீமா.

பரீட்சை முடிவு வந்தது. சீமா சித்தியடைந்திருந்தாள். அதுவும் அகில இலங்கை மட்டத்தில் முதலாம் இடமாக. சீமா அடைந்த மகிழ்ச்சியை விட மீனா அடைந்தது அதிகம். கார்த்தியும் சேர்ந்து களிப்படைந்ததில், கடந்த காலக் கஷ்டங்களெல்லாம் கழிந்தே போயின. இன்று நடைபெற்றுக் கொண்டிருப்பது சீமாவின் பாராட்டு விழா. அவையின் முன்வரிசையில் அமர்ந்திருந்த சீமாவின் பெற்றோர் தம் ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தனர். பார்வையாளர்களுக்கும், ஏனையோருக்கும் சீமாவின் வாழ்க்கை வரலாறு தெரிந்த விடயந்தான். "குப்பையில் கிடந்தாலும் குன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி மங்காது.'' அறிவுக்கு ஏழை பணக்காரன் என்ற பாகுபாடில்லை. கல்வி எவ்விடத்திலிருந்தாலும் பிரகாசமாய்த் தானிருக்கும் என்ற படிப்பினை எல்லோரையும் சூழ்ந்து கொண்டது.

ஊக்கமே உனது வெற்றிக்கு உதவும் காரணி.

01. துளக்கம் - கலக்கம்
02. பிரத்தியேகம் - தனியான
03. அரவணைப்பு - ஆதரிப்பு
04. களிப்பு - மகிழ்ச்சி
05. உள்ளரவம் - மனக்கலக்கம்
06. தோய்ந்து - கலந்து, படிந்து, செறிந்து

—*—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05

## அவர்கள் அன்று பதித்த வடு

நுவரெலியா, வட்டவளை, கண்டி, கம்பளை தேயிலையால் பொன் விளையும் பூம் பொழில் சோலை. அத்தகைய இயற்கையின் வளத்திலும், சிவனொளி வனப்பிலும் இலங்குகின்ற எங்கள் மலை நாட்டைப் பார்வையிட, எங்கள் பாடசாலை மாணவிகள் கல்விச் சுற்றுலா சென்றிருந்தோம்.

செல்லும் வழியில் சீகிரிய வந்தடைந்தோம். உள்ளமெல்லாம் மகிழ்ச்சி வெள்ளமாய்ப் பாய்ந்தது. எமது நாட்டவரை விட, அதிகமாகப் பிற நாட்டு ஆண் பெண்கள் சிறுவர் என்றெல்லாம் சீகிரியப் பாறையின் உச்சியையடைய உற்சாகமாய் ஏறிக்கொண்டிருந்தனர். எங்களுக்கு எங்களின் தாய்மார் கூறித் தந்த நற்பண்புகளை விடவும் எம் ஆசிரியை கூறித் தரும் அறிவுரைகளும் நேர்மையும் ஒழுங்கும் எங்களிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்தே இருந்தன. அதனால் ஏறிக் கொண்டிருக்கும் ஏனையோரை நெருக்கியடிக்காதவாறு நாங்கள் அமைதியாகவும் அருகாகவும் சீரான வேகத்தில் ஏறினோம். மெல்லெனப் பாயும் நீர் கல்லையும் உருக்கிப் பாயும். ஆவேசமாக அடியெடுத்து வைத்து நடந்தவர்கள் சற்று நேரத்தில் களைப்படைந்து சிறிது ஆறுதல் எடுத்தனர். எங்கள் பாடசாலை மாணவிகளனைவரும் உச்சியையடைந்தோம்.

பிற நாட்டு மக்கள் எங்களைப் பார்த்து இன்பமாய்ப் புன்னகைத்தனர். “நீங்கள் நல்ல நற்பண்புகளையுடையவர்கள். உங்களிடத்தில் ஒழுங்குகள் உள்ளன. நீங்கள் மிக்க நல்லவர்களாக உள்ளீர்கள். நீங்கள் இலங்கையின் எந்த இடம். “என்பதையும் ஆங்கில மொழியிற் கேட்டனர். நாங்கள் பாடசாலையில் மும்மொழியும் கற்பதால் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு ஆங்கிலத்திற் பதில் கூறினோம். பாராட்டினார்கள். அவர்களோடு எங்களையும் சேர்த்துச் சீகிரிய பாறையினழகைப் படம் பிடித்தனர். அவர்களைச் சேர்த்து நாங்களும் படம் எடுத்துக் கொண்டோம். ஆதரவாகவும், மிகப் பாசமாகவும் எங்களோடு நடந்து கொண்டார்கள்.

அங்கிருந்து நுவரெலியாவுக்குச் சென்றோம். தேயிலைச் செடிகள் தளிர்த்து வளர்ந்திருந்த வடிவங்கள் மனங்களை வென்றன. அவை எங்களை வாவென்றழைத்தன. தேனாயினித்தது. பார்த்துக் கொண்டே பட்டறையை அடைந்தோம். கொழுந்து நிறுக்கும் படிமத்திலிருந்து தேயிலையைப் பெட்டிகளில் அடைக்கும் படிமுறை வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சாலையில் ஒருவர் எங்களை அழைத்துச் சென்று காட்டி விளக்கினார். தொழிலாளரின் அரவணைப்பும், பரிவும், எங்கள் இதயங்களை வருடிச் சென்றன. அன்புடன் வழியனுப்பினார்கள்.

அதனையடுத்து, ஹக்கல பூந்தோட்டத்தையடைந்தோம். பற்பல நிறங்களைத் தம்மில் சுமந்து வைத்துக் கொண்ட பளிங்கு போன்ற ரோஜாச் செடிகள் பளிச்செனச் சிரித்து எம்மை வரவேற்றன. அங்கிருந்த எல்லாவிதமான பூக்களும் எங்களைக் கவர்ந்திருந்தன. ஆனால், எங்கள் ஆசிரியை ஏற்கனவே பகர்ந்திருந்த பண்புகள் எங்களிற் பதிவடைந்திருந்ததால் எதையும் நாங்கள் கையடக்கவில்லை. நேரம் செல்கிறேன் என்றது. சில்லென்று பூத்திருந்த சிங்காரச் சோலையைவிட்டு மெல்லெனப் புறப்பட்டோம்.

(Gragary Lake) "க்றகறி" வாவி அங்கிருந்துமிகச் சிறிய தூரத்திற்தானிருக்கிறது. அங்கே பதுங்கும் நதியிலே படகோட்டி மகிழ்ந்தோம். அங்குள்ள குளிராற் கொடுகிப் போனோம். இதமாயிருந்தது. எல்லா இன மக்களும் இன்ப வெள்ளத்திற் குளித்தோம். அங்கே அமைந்திருந்த தொங்கும் விளையாட்டு, எங்குமே ஆனந்தம். எல்லாம் நுகர்ந்த களிப்போடு கண்டியை வந்திறங்கினோம்.

தலதா மாளிகை என்பது மக்கள் தரிசிக்கும் பொதுத்தலம். இலங்கையென்னும் எமது தாய்த் திருநாடு எமக்குக் கையடையாய்த் தந்த பொதுச் சொத்து அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த மக்கள் கடவுள் வணக்கத்தை அதில் கையாண்டாலும், எல்லா இன மக்களும் அதனைப் பக்குவமாய்ப் பார்வையிட்டுச் செல்ல முடியும். இவ்வாறிருப்பதால் நாங்களும் பார்வையிடச் சென்றோம்.

"மாளிகாவ" வளவின் உட்செல்லும் வழியில் இரு பெண்காவல்கள் நின்று கொண்டிருந்தனர். உட்செல்ல அனுமதி கேட்டோம். எங்களின் தலையையும் உடலையும் மறைத்து முகம் தெரிய அணிந்திரிந்த "பர்தா" சீருடையைக் கழற்றிவிட்டுச் செல்லுமாறு பணித்தனர். "நாங்கள் முஸ்லிம்கள், வளர்ந்த பெண்கள், உடல் தெரிய, தலை தெரிய இதனைக் கழற்றுவதில்லை அதனால், தயவு பண்ணி எங்களைப் பரீட்சித்த பின் சென்று பார்வையிட அநுமதி தாருங்கள்." என்று எங்களது ஆசிரியை சிங்கள மொழியில் பரிவாகக் கேட்டபோதும் "பர்தா உடையைக் களையாமல் அனுமதியில்லை" யென மறுத்து விட்டனர். அவர்களிடம் தர்க்கிக்காமல் திரும்பிவிட்டோம். கல்வி பயிலும் இளம் சிறுவர்கள் நாங்கள். இந்த தலதா மாளிகையைப் பார்ப்பதற்கு எங்களின் "பர்தா" உடையைக் கழற்றுமாறு கூறினார்களே. இது எங்களுக்கொரு படிப்பினையாயிருக்கும்.

இதுதான் இனவாதம். பொதுத் தலமொன்றைப் பார்வையிடப் பொது மக்களுக்குத் தடைபோடுவது சுதந்திரத்தைக் கெடுப்பது. "முழுச் சுதந்திரமும் செல்வமுமுள்ள இந்நிலத்தில் பிறந்த எல்லோருக்கும் இங்குள்ள எல்லாமே சொந்தம்." என்ற சிங்களப் பாடலொன்று நினைவு வருகிறது. "மகே றட்டட்ட தலதா ஹிமி செவணய்..."என்று ஆரம்பிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடலது. இந்தக் குடியரசு நாட்டில் வசிக்கும் குடியுரிமையுள்ள சகலரும் இந்நாட்டிற்தான் பிறந்திருக்கிறோம். தலதா மாளிகாவயை "பர்தா" களைந்துதான் பார்வையிடவேண்டும் என்ற வாதங்களை அரசாங்கமோ மந்திரிமார்களோ உருவாக்கியதில்லை. காவலாளர்களும், சிற்றூழியர்களும் உண்டாக்கும் இந்தச் சங்காரமான சட்டங்களாற்தான் இலங்கையில் இனவாதம் ஏற்படுகின்றது.

பர்தாவைக் கழற்றுவது, பாதணி கழற்றுவது போலல்ல. பர்தாவைக் கழற்றி அரைகுறை ஆடையுடன் அந்த மங்கலமான தலத்தினுள் நுழைந்தால், அதன் மகிமை குறைந்துவிடாதா? என்பதால் திரும்பி விட்டோம். எனவே, இவ்வாறான பேதங்களை அடியோடு அறுத்தெறிவதற்கு அரசாங்கம் வழியமைத்தால் இனவாதம் தலை தூக்காது. ஒருமைப்பாடு வளரும். அன்று, இளம் உள்ளங்களில் அவர்கள் பதித்த வடு இன்னுமே ஆறாமலிருக்கிறது.

**மாற்றான் செய்த தீங்கை மன்னித்து விடுபவன்**
**மாந்தரில் வீரனாவான்.**

01. வடு - புண், குற்றம்
02. பொழில் - சோலை, நாடு
03. பட்டறை - தொழிற்சாலை
04. படிமம் - வடிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. கையடக்குதல் - கைக்குள் அடங்குதல்
06. நுகர்ந்த - அனுபவித்த
07. கையடை - பாதுகாக்க ஒப்பித்த பொருள்
08. சங்காரமான - ஒடுக்குகை, அழிக்குகை

—*—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06

# கண்ணனை உருவாக்க ...

கண்ணன் இப்போது என்னைக் கண்டு கொள்வதில்லை. ஏனென்றால், கண்ணன் இப்போது பிரதேசச் செயலாளராகக் கடமையாற்றுகிறான். மட்டுமல்ல, ஆசிரிய கல்லூரியில் பகுதி நேர விரிவுரையாளராகவும் இருக்கிறான். சொத்துக்களுக்கும் அதிபதியாக இருக்கிறான். பெரிதாக "பிஸி" இல்லாவிட்டாலும் இருப்பதுபோல் நடந்து கொள்கிறான். அவன் இரு குழந்தைகளுக்குத் தந்தையாகவுமிருக்கிறான். இன்னுமின்னும் சொத்துச் சேர்க்க வேண்டுமென்ற பேராசையைத் தவிர வேறொன்றும் அவனது கவனிப்பிலில்லை. மொத்தமாக அவனை ஆளாக்கப்பாடுபட்ட என்னை முழுமையாகவே மறந்து விட்டான்.

கண்ணன் அப்போது எனது வகுப்பு மாணவர்களுடன் வந்து சேர்ந்தபோது மற்ற மாணவர்களைப் போல் படிப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றமிருக்கவில்லை. பண வசதியுமில்லை. "அன்றாடம் சாப்பாட்டுக்கே வழியில்லாதபோது உன்னைத் தொடர்ந்து படிப்பிக்க என்னிடம் பணமில்லை. அதனால் நீ தொடர்ந்து படிப்பதில்லை. நின்று கொள்." என்று கண்ணனின் தாய் திட்டவட்டமாகக் கூறிவிட்டாள். இதனை நான் கேள்வியுற்று மிகுந்த கவலைப்பட்டேன். வறுமைப்பட்ட குடும்பம் தொடர்ந்தும் வறுமைக் கடலில் மூழ்க வேண்டுமா? முடிந்தளவில் அவர்களைக் கரைசேர்த்து விட்டால் அவர்களின் வாழ்க்கையில் விடிவை ஏற்படுத்தலாமென ஆழமாகச் சிந்தித்துத் தீர்க்கமான முடிவெடுத்தேன்.

கண்ணனின் வீடு தேடிச் சென்று அவனது தாயிடம் கதைத்தேன். "கண்ணனின் படிப்புக்குத் தேவையான எல்லாவற்றையும் நான் செலவழித்து அவனைப் படிப்பிக்கிறேன். உங்களுக்கு அதில் எந்தக் கவலையுமிராது." என்றேன். கண்ணனின் தாயும் இசைந்து கொண்டாள். கண்ணனை விடுதியொன்றிற் சேர்த்தேன். மாதாந்தம் அவனுக்குத் தேவையான பணத்தை ஒழுங்காகச் செலுத்தியும் வந்தேன். விடுமுறையில் வீடு வரும் போதெல்லாம் அவன் என்னை வந்து பார்த்துச் செல்லத் தவறுவதில்லை.

நான் அடிக்கடி அவனது படிப்பைப் பற்றியும் ஏனைய விடயங்கள் பற்றியும் கேட்டறிந்து கொள்வேன். எனது வாழக்கையைப் பற்றியும் கரிசனை பாராது, கண்ணனின் வாழ்க்கையிலேயே கவனஞ்செலுத்தினேன். என் பாடசாலைக் காலம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் அவனுக்கு அறிவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்டினேன். அல்லும் பகலும் அவனது படிப்பில் கவனஞ்சலெலுத்திக் கொண்டிருந்தேன். இடையிடையே கண்ணனின் தாயையும், சென்று கவனித்து வருவேன். அப்போதெல்லாம் அவர்கள் என்னைக் கண்டதும் குதூகலித்து என்னை மெச்சிக் கொள்வார்கள். அன்பாக அளவளாவுவார்கள். அவை பகட்டுப் பொன்னாடை போர்த்தும் படலமாகத்தான் இருந்திருக்கிறது. நன்றிக்குப் பின்னணிதான் பகட்டுப் பொன்னாடை. இது பாரோர் ஏற்றி வைக்கும் பயங்கர மேடை.

விடுதியிலிருந்த கண்ணனை விடுமுறையில் அழைத்து வருவதற்கு நான் சென்ற சமயம் பெருமழையில் அகப்பட்டதால் கடுமையான சுரமும் இருமலும் ஏற்பட்டு இரு வாரங்கள் படுக்கையிற் கிடந்தேன். இவை எவற்றையும் நான் பெரிதுபடுத்தவில்லை. கண்ணனின் உயர்வில் கண்ணுங் கருத்துமாயிருந்தேன். எனது நோக்கம் கண்ணனைப் படிப்பித்து ஆளாக்கிக் கொடுத்தால் அந்த வறுமையில் வீழ்ந்த குடும்பம் எழுந்திருக்க வாய்ப்பிருக்குமல்லவா. அதுதான்.

கண்ணனுக்குக் கல்லூரியின் இறுதிப் பரீட்சை நெருங்கியது. நன்றாகப் படிப்பதற்கான வழிகளையேற்படுத்தினேன். உற்சாகமூட்டினேன். பரீட்சையை எழுதினான். முடிவு வந்தது. அவன் சித்தியடையவில்லை. இத்தனைக்கும் அவனுக்கு ஒரு குறையும் வைக்கவில்லை. ஆனால் அவன் படிப்பில் பின் தங்கியவனாக இருந்ததுதான் காரணம். பேராவலுடன் பெறத் துடிக்கும் பொருள் வளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றிச் சரிந்தும் விடலாம். என் மனத்திலேற்பட்ட கவலையைக் கண்ணனின் குடும்பத்தாரிடம் நான் காட்டிக் கொள்ளவில்லை. கண்ணனும், குடும்பத்தாரும் உள்ளம் தளராதவாறு ஆறுதல் வழங்கினேன். இரண்டாம் முறை நன்கு ஆர்வத்துடன் படிக்க, மேலும் ஆலோசனை வழங்கினேன். சிலந்தியின் விடாமுயற்சியைக் கூறினேன். வாழ்வில் நாம் விடும் தவறுகள். அவை அறிவுக்கு வித்திடும் படித்தரங்கள். என்று கூறி உள்ளத்தையும் உற்சாகத்தையும் வலுப்படுத்திக் கொடுத்தேன். இரண்டாம் முறையில் சித்தி பெற்றுவிட்டான்.

அவனது பட்டமளிப்பு விழாவுக்குத் தேவையான செலவையும் கொடுத்தனுப்பினேன். அதுவும் சிறப்பாக நடந்தேறியது. ஒருவருட இடைவெளியில் கண்ணனுக்குப் பதவி கிடைத்தது. இரண்டொரு வருடங்கள் கழிந்தன. கண்ணன் ஒரு பெண்ணை விரும்பிக் காதலித்தான். சில வருடங்கள் சென்றும் என்னிடம் அதைக் கூறவில்லை. நானாக ஒருநாள் கண்ணனிடம் இவ்விடயத்தைப் பற்றிக் கேட்டதும் மறுத்துவிட்டான். அவனது வீட்டாரும் என்னிடம் மறைத்துவிட்டனர். இப்போதெல்லாம் என்னைப் பற்றிய எந்தக் கரிசனையும் அவர்களுக்கில்லை. நான் இருக்கிறேனா என்பதைக் கூட அவர்கள் கண்டு கொள்வதில்லை. என் வீட்டுப் பக்கமே வருவதில்லை. காணும் இடங்களில் கையசைப்பார்கள். அவ்வளவுதான்.

திருமணத்தையும் திருப்தியாய் முடித்தனர். நன்றி மறந்தவர்கள் ஞாபகத்தையிழந்திருப்பார்கள். ஏன் இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்தனர் என்பதே கேள்விக் குறி. பிள்ளை பட்டம் பெற்றுச் சிறப்பாக வாழ்கிறான். அதற்கு முக்கிய காரணமே எனது உதவிதான் என நினைப்பது அவர்களுக்கு இழுக்காயிருக்கலாம். ஆனால் நான் இவற்றைப் பெரிதுபடுத்தவில்லை. ஏனென்றால், அவர்கள் என்னை நினைவில் வைத்திருக்க வேண்டுமென நான் எதிர்பார்க்கவில்லை. வீழ்ந்து கிடந்தவரை எழுப்பிவிட்ட மனநிறைவுதான் எனக்கு. கண்ணன் பதவியில் சேர்ந்த நாளுடன் எனது வேலை இனிதே நிறைவடைந்தது. என நினைத்து நிம்மதியடைகிறேன். வறுமையில் வாடுவோரைக் கை கொடுத்துத் தூக்கிவிட வேண்டும். கைம்மாறு கருதக் கூடாது என்பது, இதனைப் படிப்போர்க்கும் படிப்பினையாயிருக்கட்டும்.

ஒரு மணலளவு செய்த உதவியையும்
ஒரு மலையளவாய்க் கொண்டு மதிக்க வேண்டும்.

01. இசைந்து - பொருந்தி
02. மெச்சி - புகழ்ந்து
03. பகட்டு - வெளிவேடம்
04. தளர்ச்சி - சோர்வு
05. இழுக்கு - தாழ்வு
06. கைம்மாறு - பிரதியுபகாரம்

—*—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13930 cc

# 07

# பெண்களைக் கண்ணியப்படுத்துவோம்

மகளிர் தினத்திற்காக மக்கள் திரண்டிருந்தனர் மட்டற்ற மகிழ்ச்சியோடு. பெண்கள் கூட்டம் பெருந்திரளாய்ப் பிரவாக மெடுத்தது. பேச்சாற்றல்மிக்க பெருந்தலைவர்கள் மேடையை அலங்கரித்தனர். உண்மையிலே அந்தப் பெரியவர் பேசிய உரை என்னையும் ஏனைய பெண்களையும் ஈர்க்க வைத்தது.

"தருவொன்று வளர்வதற்குக் கருவாயிருப்பது ஒரு வித்து. அது என்ன இனத் தருவாக இருந்தாலும் சரியே. ஒரு குழந்தை எவ்வினத்திற் பிறந்தாலும் அக்குழந்தையை ஆளாக்கி உயர் நிலைக்குக் கொண்டுவர முழு முயற்சி செய்பவள் பெண். தினமும், ஆண்கள் காலையிலிருந்து கடன்களை முடித்துக் கடமைக்குச் சென்று விடுவோம். உழைப்பதிற்தான் ஊக்கங் காட்டுவோம். மனையிலிருக்கும் மகளிர்தான் குழந்தைகளின் எதிர்கால நிலைக்கேற்ற அத்திவாரமிடுபவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் இளம்பருவத்தையடையும் போது எதைச் சுமந்து வந்திருக்கிறானோ, அந்தச் சுமை சமூகத்தை ஆக்குவதற்கா? அல்லது அழிவுபடுத்துவதற்கா? என்ற கலையைத் தன் குழந்தைகளிடத்தில் உருவாக்குபவள் பெண்.

ஒருவன் எதிர்காலத்தில் நேர்மையும் நேர்த்தியுமுள்ளவனாக வளர்ந்திருப்பது அவனது மூன்று வயதினுள் அன்னையிட்ட அத்திவாரம். அவனது கட்டிளமைப் பருவமான பன்னிரண்டு வயதுக்கும் பதினெட்டு வயதுக்கும் இடைப்பட்ட காலத்தில் வளப்படுத்திச் செய்த, வனிதையரின் வல்லபச் செயல். பாதாளத்தின் மேல் போடப்பட்ட ஓரடிப் பாதையில் நடந்து செல்வதைப் போன்றதுதான் கட்டிளமைப் பருவ வாழ்க்கை. கால் சறுக்காமல் நடக்கும் முறையைக் காட்டிக் கொடுத்து வளர்ப்பவள் அன்னை. தன் மகன் கால் சறுக்கிப் பாதாளத்தில் வீழ்ந்து விடக்கூடாதென்று பத்திரமாய் வளர்ப்பதும் அன்னை.

குழந்தைகளை வளப்படுத்துவதுடன் அவர்கள் நின்றுவிடவில்லை. குடும்பப் பொறுப்பிலும் பெரும் பங்கு வகிக்கிறார்கள். பெண்கள் சமூகத்தின் உயிர்த் துடிப்பான பங்காளிகளாய்த் தொழிற்படுகிறார்கள். தாயாக, சகோதரியாக, தாரமாக, மகளாக என்று பல வடிவங்கள் எடுத்து வாழ்ந்தாலும் அந்தந்த நிலைகளில் அவர்களாலான ஆக்க ஊக்கங்களை அள்ளி வழங்குகிறார்கள். தாங்கள் பொறுப்பெடுத்துக் கொள்ளும் எந்த வேலையையும் நேர்த்தியாகவும், சரியாகவும் முடித்துச் சாதிக்க வேண்டுமென்ற உறுதிப்பாட்டையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்திற் கொண்டவர்கள். ஆண்களை விட அடக்கத்தையும் அன்பையும் அதிகமாய் வைத்திருப்பவர்கள். இவ்வாறான மென்மையான உள்ளங்களை வன்மையால் ஆள்வதற்கு ஆண்கள் முயலக்கூடாது.

பெண்கள் நீதியை நிலைநாட்டத் துடிப்பவர்கள். போதையை ஒழிக்க போராடுபவர்கள். பெண் சமூதாயத்திற்குப் பேரிடியான தருக்கங்கள் தலைதூக்கினால் அதனைத் தாங்கிக் கொள்ளத் திராணியற்று அனைத்துப் பெண்களையும் திரட்டி அணிதிரண்டு போராடும் துணிவும் தைரியமும் அவர்களுக்குண்டு. எனவே அவர்களைப் பாதுகாப்பதை விடுத்து, பயிரையே மேயும் வேலிகளாய் ஆண்கள் மாறிவிடக்கூடாது.

பாரதியார் முயற்சிக்கு முற்பட்ட காலத்தில் பெண்கள் வீட்டிலே முடங்கிக் கிடந்து அறிவிழந்திருந்த காலங்களெல்லாம் மறைந்து ஆணுக்குப் பெண் அறிவிலே பேதமில்லை. பெண்கள் பேதைகளுமில்லையென்பதை அகிலமே உணரும்படி ஆக்கியிருக்கிறார்கள். ஏனெனில் இன்று பெண்கள் உலகிலே பரவலாகத் தலைசிறந்த தலைவிகளாகத் திகழ்கிறார்கள். நுணுக்கமான தம் அறிவுகளைப் பயன்படுத்தி நுட்பமான சாதனைகளை நிலைநாட்டியிருக்கிறார்கள். ஆண்கள் மட்டுமே செய்து வந்த விமானமோட்டும் தொழிலைக் கூட இப்போது பெண்கள் புரிகிறார்கள். சந்திர மண்டலத்தைத் தரிசிக்கச் சென்று வந்தவர்களும் பெண்களில் உள்ளனர். இவற்றால் நாடுகள் பெருமையடைகின்றன. சமூகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டியெழுப்பப்படுகின்றன. அதனால் எல்லோருக்கும் படிப்பினையாக அது விளங்குகிறது.

பெண்கள் உழைப்பதால் வீடுகளிலும் சிறப்புத்தான். குழந்தை வளர்ப்பு, வீட்டு நிருவாகம், போன்றவற்றையும் கவனித்துக் கொண்டு தொழிலிலும் ஈடுபடுகிறார்கள். ஏனென்று கேட்டால், "இருவர் உழைத்தாற்தான் இந்நாளில் செலவுகளைச் சமாளிக்கலாம், காலங்கள் நகரும்போது பொருட்களின் விலைகளும் செலவுகளும் கூடிக்கொண்டு செல்வதால் அதனை ஈடு செய்யலாமல்லவா" என்கிறார்கள்.

இத்தகைய இதயம் படைத்த இந்த மகளிரை எத்தனை நாக்களாற் புகழ வேண்டும். இவர்களின் பணி ஆண்களுக்கு அணியாகவே தென்படுகின்றது. அதனால் மகளிரை மதிப்போம். அவர்களை ஆதரிப்போம். எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களை இதயத்தில் வைத்துக் காப்போம்." என்று கூறி அவர் நிறைவடையும் போது மகிழ்ச்சி பொங்க ஆரவாரித்து அவரை மறைத்து நின்றனர் மக்கள் வெள்ளமாய்.

வீடும் நாடும் போற்ற வாழ்வது
ஈடும் எடுப்பும் அது.

01. பிரவாகம் - வெள்ளம்
02. தரு - மரம்
03. வல்லபம் - திறமை
04. பத்திரம் - பாதுகாப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. தருக்கம் - நியாயவாதம்
06. திராணி - சக்தி
07. பேதம் - வித்தியாசம்
08. பேதை - அறிவிலி
09. அணி - பெருமை

—*—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08

## முயற்சி தந்த உயர்ச்சி

பாடசாலைவிட்டு வீடுவந்து சேர்ந்த வனிதாவுக்குக் காத்திருந்தது பேரிடியொன்று. அவள் குடியிருந்தது ஒரு சிறிய வீடு. ஆறு சகோதரிகளுடன் பிறந்த வனிதா ஐந்தாவது பிள்ளை. அவளது தந்தை பெரும் பணக்கார வீட்டுப் பிள்ளையாய் ஒரு காலத்தில் வாழ்ந்தாலும் ஆறு பெண் மக்களைப் பெற்று வளர்த்ததில் ஆறாய் ஓடி மறைந்தது செல்வம்.

“ஐந்து பெண் பிறந்தால் அரசனும் ஆண்டியாவான்.” என்பது பழமொழியல்லவா. ஆனாலும் எல்லாமக்களையும் எந்தக் குறையும் வைக்காமல் வளர்த்திருந்தார் அந்தப் பெரியவர். அவர் பிள்ளைகள் வளர்த்த ஒழுங்கையும், சீரையும் ஊராரே பாராட்டிக் கதைப்பர். எல்லாப் பிள்ளைகளையும் படிப்பித்தார். ஆனாலும் வனிதா மட்டுந்தான் ஆசிரியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலிலிருக்கிறாள். மற்றவர்கள் இளம் வயதிலேயே திருமண பந்தத்தினுள் நுழைந்துவிட்டனர். வனிதாவுக்கு அடுத்துப் பிறந்த தங்கையும் கூடத்தான்.

ஐந்து பெண்களையும் வாழவைத்த தந்தை இறந்து விட்டார். தந்தையிடமிருந்த சொத்துக்களை வனிதாவைத் தவிர்ந்த ஏனைய ஐவரும், தாயும் பிரித்து எடுத்துக்கொண்டனர். வனிதா தொழில் புரிபவள்தானே என்பதால் அவளைப் பற்றிய கரிசனமே இல்லாமற் போனது தாய்க்கும், ஏனைய சகோதரிகளுக்கும். குடியிருக்கும் வீட்டையும் ஒருவருக்கு ஏற்கனவே விற்பதற்காக விலைபேசி வைத்திருக்கிறாள் வனிதாவின் தாய். இது வனிதாவுக்குத் தெரியாது.

அன்று வனிதா பாடசாலையிலிருக்கும் நேரத்தில் குடியிருந்தஇடத்தை விற்றுப் பணத்தைப் பற்றிக் கொண்டு வீட்டிலிருந்த தளபாடங்கள், உபகரணங்களையும் எடுத்துக் கொண்டு வனிதாவின் தாய் சென்றுவிட்டாள். வனிதாவுக்குரிய உடைகளடங்கிய பெட்டியொன்றைத் தவிர வேறெதுவுமே அங்கிருக்கவில்லை. அதனாற்தான், பாடசாலைவிட்டு வீடு வந்தவள் நிலையையறிந்து பதறிப்போய் நின்றுவிட்டாள். இறந்துபோன தந்தையை நினைத்து ஏக்கப் பெருமூச்சு விட்டாள். ஆற்றொணாத் துயரத்தால் அழுது வடித்தாள்.

அருகில் குடியிருந்த அவளது அக்கா, வனிதாவை யரவணைத்து ஆறுதல் வழங்கினாள். அன்றிலிருந்து வனிதா துன்பக் கடலினுட் தூர எறியப்பட்டவளாய்த் துடித்தாள். அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்வாள் பாவம். உண்ணும் கலத்தையும் பறித்துக் கொண்டு உதைத்துத் தள்ளிவிடும் குடும்பம். சொந்தமாய் ஒரு இடம் தேடிக்கொள்ள அவளது மாதச் சம்பளம் போதாது. அவளது மாதச் சம்பளம்தான் தந்தை இறந்த பின் குடும்பம் பராமரிக்கப் போதுமாயிருந்தது. இப்போது முழுச் சம்பளமும் இவளுக்குக் கிடைக்குமாயிருந்தாலும் அது குடியிருக்கும் இடமொன்றைத் தயார் செய்வதற்குப் போதாது.

வனிதாவுக்குத் தையல் வேலை நன்கு தெரிந்திருந்ததால் அக்கம் பக்கத்திலுள்ளோர்க்கு மாலை வேளை, இரவு வேளைகளில் உடைகள் தைத்துக் கொடுத்து வருமானத்தைச் சற்றுக் கூட்டிக் கொண்டாள். இரவு வேளையில் ஒழுங்கான நித்திரையில்லை. அடுத்த நாளுக்குத் தேவையான சமையல் வகைகளைத் தயார் பண்ணி வைத்த பின் உறங்குவாள். அதிகாலை எழுந்து இறையைத் துதித்து, தயாராக்கி வைத்திருந்த உணவுவகைகளை அவசர அவசரமாகச் சமைத்து முடித்துப் பாடசாலை செல்ல ஆயத்தமாவாள். ஆதவன் எழும்புமுன் எழுந்து அவன் சென்று உறங்கிய பின் உறங்கும் பழக்கங் கொண்டவள். ஊக்கமே உனது வெற்றிக்கு உதவும் காரணியென நினைத்து ஓயாது உழைத்தாள்.

இளைஞர் சேவைக் கழகத்தினால் இரண்டாம் மொழியான சிங்களம் கற்பிப்பதற்கு வனிதா தெரிவு செய்யப்பட்டாள். வனிதாவிடம் உற்சாகம் மட்டுமல்ல திறமையுமிருந்தது. அலுவலகம் செல்லும் முப்பது அரச ஊழியர்களுக்கு வார இறுதி நாட்களில் சிங்களம் கற்பித்ததால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சம்பளமும் கிடைத்தது. ஆனால், அவளுக்கு ஓய்வே இல்லை. பாடசாலை விட்டு வீடு வந்ததும் ஒரு மணித்தியால ஓய்வு கிடைக்கும். அதனையடுத்து பாடசாலை மாணவர்களுக்கு மாலை வேளையில் ஆங்கிலம் சொல்லிக் கொடுப்பாள்.

இவ்வாறு முழு நாளிலும் ஓய்வின்றி உழைத்தாள். ஒரு காலத்தில் ஸ்கொட்லாந்து மன்னரான றொபர்ட் புரூஸ், மன்னராவதற்கு முன் ஆங்கிலேயரிடம் பல தடவைகள் தோல்வியடைந்தும் வருந்தவில்லை. ஒரு முறை, சிலந்தி தன் வலையை உருவாக்கிக் கொண்டிருந்ததை உற்று நோக்கினார். பற்பல தடவைகள் வலை உடைந்தும் சிலந்தி பின்வாங்காது மீண்டும் மீண்டும் முயற்சியைத் தளர விடாது முன்னேறிப் பின்னிப் பூரணப்படுத்திய பின்புதான் சிலந்தி வலையில் உட்கார்ந்திருந்தது. கேவலம், இந்தச் சிறிய சிலந்தியை விடவும் இளக்காரமானவனா மனிதன். என நினைத்து ஆவேசம் பூண்டவராய்ப் படைதிரட்டி வெற்றி கண்டார். எனவே, நோக்கங்கள் நிறைவேற வேண்டின் வரும் தாக்கங்களைத் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். என வனிதாவும் நினைத்தாள்.

வனிதாவைத் திருமணம் முடிப்பதற்கு அவளது பாடசாலை ஆசிரியர்கள் ஆர்வத்துடன் முன் வந்தனர். அவள் மறுத்துவிட்டாள். ஊரிலுள்ள எத்தனையோ படித்தவர்கள் அவளை மணம் முடிக்கக் கேட்டனர். அத்தனைக்கும் அவள் செவிசாய்க்கவில்லை. குடியிருக்க வீடில்லாத போது மணமுடித்து என்ன செய்வதென வேண்டா வெறுப்பாய்,விரக்தியடைந்தவளாய்க் காணப்பட்டாள். வனிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருடனும் அன்பாகவும், பணிவாகவும் அணுகுவாள். பிறர் மனத்தைப் புண்படுத்தாமல் நடப்பவள். அத்தோடு அழகும் ஒழுக்கமும் நிறைந்தவளும் கூட.

அவளது அயரா உழைப்பு முயற்சியாலும், ஆர்வ மேலீட்டாலும் சிரமப்பட்டு உழைத்துச் சேகரித்துத் திரட்டிக் கொண்ட பணம் அவளுக்கு வீடமைத்துக் கொள்ள நல்லதொரு வழியேற்படுத்தியது. வீட்டையமைத்துக் கொண்டு திருப்தியடைந்தாள். முடங்கிக் கிடக்காமல் முயற்சி செய்ததால், முன்னேறினாள். அல்லுபகல் முயற்சித்தால் தொல்லுலகை வெல்லவாம். பேராற்றலோடு தொழில்புரிந்ததால் பெரிய வளம் திரண்டு வந்தது. விடாமுயற்சியால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை என்பது சோம்பிக் கிடப்போர்க்கு இது ஒரு சிறந்த படிப்பினையாகும்.

அதன் பின் திருமணம் முடித்துக் கொண்டாள் வனிதா. பல துன்பங்களையும் பார்த்துவிட்டு வந்த வனிதாவின் உள்ளத்தில் சகிப்புத் தன்மையும், பொறுமையும் தியாகமும் கூடியது. அவள் தொட்டதெல்லாம் பொன்னாக மாறியது. ஆனாலும் அவள் ஆடம்பரமின்றியே வாழ்கிறாள். அடக்கம் அவளோடு ஒட்டிப்பிறந்த சுபாவம். அறிவுள்ளவன் அடக்கத்தை இளக்கக் கூடாது. செல்வமுள்ளவன் தர்மத்தை இளக்கக்கூடாது. வீரமுள்ளவன் பொறுமையை இளக்கக் கூடாது.

இப்போது வனிதாவின் சகோதரிகளும், அவர்களின் பிள்ளைகளும் தேவையானவற்றை வனிதாவிடம் வசிகரித்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்கின்றனர். வனிதா, துன்பத்தாற் துடிக்கும் சோதரிகளுக்கும், அவர்களின் பிள்ளைகளுக்கும் மட்டுமல்ல, ஏழைகளுக்கும் இரங்கி வழங்கிக் கொண்டிருக்கிறாள். அவள் உழைப்பதைத் தொடர்ந்தும் வறியோருக்கும், வறியோர் பிணி நீக்கவும் வாரி வழங்கிக் கொண்டிருக்கிறாள். அந்தளவுக்கு அவள் வசதி படைத்திருந்தாலும் ஆடம்பரமற்ற வாழ்க்கையே வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

தகவுள்ள மாந்தரைத் தம் செயலிலே அறியலாம்.

| | | |
|---|---|---|
| 01. | ஆண்டி | - வறியவன் |
| 02. | கரிசனம் | - சிரத்தை, அன்பு |
| 03. | ஆதவன் | - சூரியன் |
| 04. | இளக்காரம் | - தாழ்நிலை |
| 05. | வசிகரித்தல் | - தன்வசப்படுத்தல் |
| 06. | பிணி | - நோய் |

–∗–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09

# ஆசிரியப் பணி அறப்பணி

"இன்றைய ஆசிரிய தின விழாவை அலங்கரித்துக் கொண்டிருக்கும அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களைக் கலை பயிலும் நாங்கள் களிப்புடன் வரவேற்கின்றோம். உங்களைப் பணிந்தவனாக, சக மாணவர்களை விழித்தவனாக ஆரம்பிக்கிறேன்." என்று மேடையில் நின்று கூறினான் சிரேஸ்ட மாணவத் தலைவன்.

தந்தை, தாய், ஆசான், அரசன்,தெய்வம் ஆகிய ஐங்குர வரை நாம் தினமும் போற்றிப் பணிந்து நடந்துவர வேண்டும். அவர்களின் ஆசிகளைப் பெறுவதால் தூசியளவும் துன்பமேற்படாது,இதய நேசர்களாய் நாம் ஆகலாம். ஏனென்றால், எம் அறிவுக் கண்களைத் திறந்துவிட்ட ஆசான்கள் அவர்கள் நாம் ஒவ்வொருவரும் உயர்வடைந்து நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தஸ்த்தில் வருவதற்காக எமது வளர்ச்சிக்கு அவர்கள் ஏணிப்படிகளாயிருந்து உயர்த்தி விடுபவர்கள். அதுமட்டுமல்ல ஆசிரியர்கள் தெய்வத்திற்குச் சமமானவர்கள் என்றே கருதலாம். ஏனென்றால், எழுத்தறிவித்தவன் இறைவனுக்குச் சமன். அத்தகைய தெய்வம் போன்றோரை நாம் கண்ணியத்துடன் மதிக்க வேண்டும்.

நாம் நல்வழியிற் செயற்பட்டு ஒன்றாய் வாழ்வதற்கு உருவமைத்துத் தந்தவர்கள் எமது ஆசான்கள். அவர்கள், செய்யுந் தொழிலைத் தெய்வமாய் நினைத்துச் செயற்படுவதாற்தான் எங்களின் அறிவுக்கும் திறனுக்கும் புத்துணர்வூட்டித் தட்டியெழுப்பி விடுகிறர்கள். அறிவுள்ள ஆசான்களின் உதவிகளை அடைவதே எமது பிரதான கடமை. கல்வி, எமக்கு உயிரென்றும் அது கடமை காக்கும் பயிரொன்றும் எம் உள்ளத்திலே ஆழமாயதனை விதைத்துவிடுகிறார்கள். நூல்கள் எமக்கு நெறியென்றும். அதன் நுண்மை உணர்வது அறிவென்றும் எம்மை எழுச்சி பெறச் செய்கின்றார்கள். எல்லாத் துறைகளையும் அறியும் பொருட்டு வாசித்தறிவதற்கு எம்மைத் தூண்டிவிடும் தூண்டுகோல் நீங்கள்.

தாயைவிட இருமடங்கு, நேர்மை, ஒழுக்கம், ஒழுங்கு முறைகளை எமக்கு இளமையிலிருந்தே உணர வைத்த உத்தமமான ஆசான்கள் நீங்கள், “அறிவை ஆராய்ந்தறிவது உங்கள் திறன். அதனை அன்புடன் வழங்குவதே ஆசானின் அறன்.” என்று அடிக்கடி எம்மிடம் வலியுறுத்துவீர்கள். அதனை எங்களின் இதயங்களில் ஊன்றிப் பதித்தோம். நீங்கா நினைவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேறிச் செல்கின்றோம். அத்தகைய சிறந்த சித்தமுள்ள ஆசான்களை எத்தனை முறை வாழ்த்தினாலும் போதாது. அதிபர் அவர்களுட்பட எம் அனைத்து ஆசான்களுக்கும் இன்றும், என்றும் நாங்கள் கடமைப்பட்டவர்களாவோம்.

எமது ஆசான்கள் புரியும் புனிதமான சேவையை நாங்கள் புரிந்து வைத்திருக்கிறோம். பிரதியுபகாரம் கருதாது பிரவாகமாய் அறிவை அள்ளி வழங்கும் எம் ஆசான்களை வாழும்போதே வாழ்த்த வேண்டும். வையகமும் அதையேற்க வேண்டும். ஆசான்களை மதித்து வாழ்ந்தால் அகிலம் போற்ற வாழலாலம். "யானை இறந்தாலும் ஆயிரம் பொன்." என்பதுபோல ஆசான்கள் இருந்தாலும் இறந்தாலும் உலகில் பெயர் கூறி மதிக்கப்படுவீர்கள்.

அன்பு நிறைந்த அதிபர் அவர்களே! ஆதரவை வழங்கும் எம் ஆசான்களே! என்றும் நீங்கள் திகழ வேண்டும். குன்றா ஒளி சுடர வேண்டும். உங்களின் சேவை தரணியெங்கும் சுழன்று வந்து சிறக்கவேண்டும். உங்கள் பணி உயரவேண்டும். நீங்கள் பெற்ற அருங்கல்வி நாங்கள் பெற்ற பெருஞ்செல்வம். பரம்பரையாய்க் கலை பரப்பி நீங்கள் மணம் பெற வாழ்த்துகிறோம். எங்களிடத்தில் நற்பழக்கவழக்கங்களை நலமாக வளர்த்தீர்கள். அந்த அற்புதமானவை அரும்பெரும் தானமாகும். நீங்கள் எட்டிவைக்கும் ஒவ்வொன்றும் ஏணியாய் உயரவேண்டும. ஆசான்களே! நீங்கள் செய்யும் கடமையினிமித்தம் சமூகத்துடன் என்றும் சங்கமித்துக் கொண்டிருப்பீர்கள். பாசமானோரின் நேசர்களாயிருப்பீர்கள். இது ஒரு சிறந்த படிப்பினையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களையும் ஊக்குவிக்கும்.

மாணவச் சிறார்கள் வேணவாவாய்ப் பயில வாய்ப்பளித்த எம் ஆசான்களே! உங்கள் எதிர்காலம் எழுச்சி பெற்று மிளிர நாங்கள் எல்லோரும் சேர்ந்து நல்மனத்தாய் வாழ்த்துகிறோம். உங்களின் மூலமான சமூகப் பங்களிப்பு எங்களுக்கும் படிப்பினையாகி எங்களிலுமது உதயமாகி, விரிவடைந்து இன்னுமின்னும் சமூகத்தைச் சரளமாய் வளப்படுத்தும் என்பதே உறுதி. ஆசிரியப் பணி அறப்பணி! அதற்கே உம் வாழ்வை அர்ப்பணி! வாழ்க.! வளர்க! உங்கள் நற்பணி" என்று கூறி நிறைவு செய்தான். கைதட்டல் வானைப் பிளந்திருக்கும்.

நூலறிவு மட்டும் நுண்ணறிவாகாது
செயற்றிறனும் சேர்ந்து செவ்வையுற வேண்டும்.

| | | |
|---|---|---|
| 01. அந்தஸ்து | - | நிலைமை, உயர்வு, ஒழுங்கு |
| 02. பிரவாகம் | - | வெள்ளம் |
| 03. எழுச்சி | - | எழுகை, முயற்சி |
| 04. உத்தமம் | - | முதன்மை, நன்மை |
| 05. வேணவா | - | பற்றுள்ளம், வேட்கை |
| 06. சரளம் | - | சுலபம், ஒழுங்கு |

—*—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10**

# நீருக்குப் போராடுவதா

"மாரி காலம் முழுவதும் மழைபெய்து வழிந்தாலும் மற்றையக் காலங்களில் நீருக்குத் தட்டுப்பாடுதான். கட்டுப்பாடும்தான். கட்டுப்பாடில்லையென்றால், நீர் வெட்டுத்தான்" என்று ஆரம்பித்த மேடைப் பேச்சாளர் தொடர்ந்தார். "மனித சமூகம் புரியும் மறுக்க முடியாத உண்மையென்னவென்றால், எந்தப் பொருளும் தாராளமாய்க் கிடைக்கும் போது, எள்ளளவும் சிந்தனையில்லாமல், கண்டபடி கண்ணுக்குத் தலை தெரியாதவாறு, அவற்றைக் கையாண்டு ஊதாரித் தனமாகச் செலவழித்து விடுகிறார்கள். அப்பொருள் தட்டுப்பாடடையும் வேளையில், தலையிற் கை வைக்கிறார்கள். உண்ணலாம், பருகலாம். ஆனால் வீண் விரயம் செய்யக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் நீர் முக்கிய பங்கு வகிக்கிறது. எமக்கு இறையளித்த அருங்கொடைகளில் இதுவுமொன்று. மக்களின் அத்தியாவசியத் தேவைகளிலொன்றான நீர் உலக உயிர்களின் வாழ்வாதாரமாக விளங்குகிறது. ஆனால், மக்கள் நீரை மாசுபடுத்துவதுடன் வீண்விரயமும் செய்கிறார்கள். இவ்வாறான காரணங்களாற்தான் நீர் தட்டுப்பாடான கோடை காலங்களில் வரட்சியைச் சமப்படுத்த, வரையறைக்குட்பட்ட அளவிலேதான் நீர் கிடைக்கிறது.

இந்த நிலையைத் தவிர்ப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். மக்களுக்கு விழிப்புணர்வை யேற்படுத்தும் முகமாக, ஒவ்வொரு காலாண்டுக்கொரு தடவையாவது சிறப்பு நிகழ்வுகளையேற்படுத்தி, நீரைச் சுத்தமாகவும், விரயமாக்காமலும் பாவனைக்குட்படுத்த வலியுறுத்துவதுடன், வழியமைத்தலும் செயற்படுத்தப்பட வேண்டும். நீரைத் தேவைக்கு மட்டும் செலவழித்து, தேவை முடிந்தவுடன், வீணே ஓடிக்கொண்டிருக்க விடாமல் உடனுக்குடன் நிறுத்திவிட வேண்டும். தேவையில் நீதியும் நேர்மையும் பொதிந்திருக்கும், அழிவில், அநீதியும் கெடுதியும் நிறைந்திருக்கும்.

இன்று இலங்கை மாத்திரமல்ல, உலக நாடுகளும் எதிர்கொள்ளும் அதிமுக்கிய பிரச்சினையாகவிருப்பது இந்த நீர் பற்றாக்குறையாகும். இதனால் வாழ்க்கையின் அபாயகரமான நிலைகளைச் சந்திக்கும் நிலையும் தோன்றுகிறது. குடிநீர் பெறுவதற்கும் பெருமளவிற் சிரமப்படுகிறார்கள். இந்த நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இல்லையாயினும் நீரைப் போராடிப் பெறும் நிலை உருவாகக் கூடாது.

உயிரினங்களுக்கே கேடு விளைவிக்கும் வகையில் நீர் நிலைகளில் அழுக்குகளைக் கொட்டுதல், இரசாயனத் திரவக் கழிவுகளான பயிர்களுக்குரிய கிருமி நாசினி அடைத்திருந்த வெற்றுக் கலன்கள், போத்தல்கள், பொலித்தீன்கள் போன்ற கழிவுகளை நீர் நிலைகளில் வீசுதல், ஆறு, ஏரியிலுள்ள நீரில் இவற்றைக் கவனமின்றிக் கழுவிவிடுதல், நீரோடு நச்சுப் பொருட்கள் கலத்தல் போன்ற இவ்வாறான நீருக்குக் கெடுதி விளைவிக்கும் செயற்பாடுகளை முற்றாக விலக்குதல் வேண்டும்.

நீர் வழங்கல் அமைச்சினால் தற்போது அனேகமானோர்க்குப் பற்பல பதவிகள் வழங்கிக் கொண்டு வருவதால், நீர் நிலைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைக்கு அவர்களிற் சிலரை மேற்பார்வைக்கு அமர்த்தலாம். நீர் மாசடைவதால் சுற்றுச் சூழலும் மாசடைகிறது. தொழிற்சாலைகள் பெருகிக் கொண்டு வருவது நல்ல விடயம். ஆனால் அவற்றிலிருந்து வரும் கழிவுகளை நீர் நிலைகளிற் போடுவதைத் தவிர்த்து மனித சஞ்சாரமற்ற இடங்களிற் போட்டு எரித்து விடலாம். அல்லது சேதனப் பசளைகளைத்தயாரிக்கலாம். இதற்குச் சுற்றாடல் அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையோடு சிலரை நியமித்து உரிய நடவடிக்கை எடுக்கலாம்.

மேடைகளிலும் பத்திரிகைகளிலும் வார்த்தைகளை மட்டும் பாவித்து மோதுவதால் எந்தப் பயனுமில்லை. செயற்பாட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரம் கைக்கொள்ள வேண்டும். பூமியில் சம நிலையாகப் பேணவேண்டிய மூன்று முக்கிய அடிப்படைக் கருவிகளான, காற்று, நிலம் என்பவற்றுடன் நீரும் ஒன்றாகிறது. ஆதலால் நீரின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதனை மாசு படுத்தாமலும் விரயமாக்காமலும் பாதுகாப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உணர்வு பூர்வமான அறிவை வளரச் செய்ய வேண்டும்.

நீரைப் பாதுகாக்கும் துண்டுப் பிரசுரங்களை ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்கலாம். மழைக்காலங்களில் தாராளமாகப் பெறும் நீரைச் சேமிப்புக்குட்படுத்தும் நவீன வழிகளைக் கையாளலாம். மாரி காலம் வருவதற்கு முன்பாக முன்கூட்டியே உணவுகளைச் சேமித்து வைப்பதற்கு எறும்புகள் தெரிந்து வைத்திருக்கின்றன. அதற்கேற்ப தொழிற்படுகின்றன. எறும்புகளிலிருந்து நாம் எத்தனையோ படிப்பினைகள் பின் பற்றவுள்ளன. உழைத்து உழைத்துப் பணத்தைத்தான் சேமிக்க விழைகிறோம். அத்தியாவசியமான நீருக்கு யாசகம் கேட்கிறோம்.

குழாய் நீர் விநியோகம் இலங்கை முழுவதும் பரவலாகக் காணப்படுகிறது. மத்திய மலை நாட்டுப் பிரதேசங்களின் சில இடங்களில் கிணற்று நீர் பெற வாய்ப்பில்லாததால் முழுமையாகக் குழாய் நீரை மட்டும் பாவித்து வாழ்கிறார்கள். ஆனால், ஏனைய இடங்களிலும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களிலும் ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு கிணற்றைஅமைத்துக் கொண்டு கிணற்று நீரைக் குளித்தல், கழுவுதல், பயிர்களுக்குப் பாய்ச்சுதல் போன்ற பாரிய நீர்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

288284

தேவைகளைக் கையாண்டு, குழாய் நீரைக் குடிப்பதற்கும், சமைப்பதற்கும் மாத்திரம் பாவிப்பதால் நீர்த் தட்டுப்பாடும், மாசுபடுத்தலும் இன்றி நீண்ட நாட்கள் நிம்மதியாய் வாழலாம்." என்று நீண்டதொரு பேச்சைப் பேசி நிறைவு செய்தார். வருகை தந்திருந்த, வருகை தராத அனைவருக்கும் இது பயன்பாடானதொரு படிப்பினையாயிருந்தது.

அளவுடன் செலவிட்டுச் சேர்க்கும் பொருள்
அதிக பெறுமதி வாய்ந்தது.

01. எள்ளளவு - சிறிதளவு
02. ஊதாரித் தனம் - வீண் செலவுத் தன்மை
03. மாசடைதல் - அழுக்கடைதல்
04. சஞ்சாரம் - நடமாட்டம்

—*—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

# நவீனமும் நாட்டு மக்களும்

காலம் கடந்து கொண்டிருக்கிறது. அதனுடனிணைந்து சனத்தொகையும் விரிவடைந்துதான் வருகிறது. ஆனால், நாட்டின் பொருளாதாரம் தேவையான அளவுக்கு இன்னும் முன்னேற்றமடையவில்லை. இது இவ்வாறென்றால், வெளி நாட்டுப் பண்டங்கள் மீது மோகங் கொண்டு அவற்றை மக்கள் நுகர்வதால் நாடு இன்னும் பாரிய பொருளாதார வீழ்ச்சியை நோக்கிச் செல்வது வருந்தத் தகு விடயமாகும்.

ஒரு நாட்டின் அபிவிருத்தி, அந்த நாட்டின் விவசாயம், தொழிற்துறை முதலியவற்றின் விருத்தியிலேயே பெரிதும் தங்கியுள்ளது. இயற்கை வளங்கள், இயந்திரக் கருவிகளின் வளங்கள், சக்தி போன்றவற்றை நாம் முழுமையாக உபயோகிக்கும்போது பொருளாதார அபிவிருத்தியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தலாம். துரித அபிவிருத்தியை நோக்கிய செயற்றிட்டம் எம் நாட்டுக்கு அவசியம்.

தொழிநுட்பவியலாளர்களும், பொறியியலாளர்களும் மட்டும் பெற்றிருந்த கல்வியைத் தற்போது இலட்சக் கணக்கான தொழிலாளர்களும் பெற்றிருக்கிறார்கள். அதனால், விவசாயம், கைத்தொழில் போன்ற எல்லாத் துறைகளிலும் நவீன முறையைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்கினால், நம் நாட்டில் போதிய பொருட்களை நவீன வகையிற் பெறலாம். இதனால் வெளிநாட்டுப் பொருட்களில் நாட்டு மக்களுக்கு நாட்டமிராது.

உற்பத்தித் துறையில் அதிக உற்சாகங் காட்டப்படாததும், தரத்தை விடத் தொகை ரீதியான உற்பத்தியில் முயற்சி கொள்வதும் வெளிநாட்டுப் பொருட்களில் மக்கள் மோகங் கொள்வதற்கு முக்கிய காரணம். தரம் மிக்க பொருட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்ய வேண்டும். புதிய பொருளதார வளர்ச்சி மக்களை ஈர்க்கும். உற்பத்தியின் சகல துறைகளும் முன்னேற்றங்காண வேண்டும். அதற்காக உழைக்க வேண்டும்.

இந்த இலக்குகளை ஈட்டுவதற்கு உறுதியான அபிவிருத்தியை நோக்கி நாட்டின் பொருளாதாரம் தொடர்ச்சியாய்த் தொழிற்பட வேண்டும். தூர்ந்த நிறுவனங்களைப் புனரமைக்கலாம். போக்கு வரத்து வசதிகள் தற்போது இலங்கையில் நவீனங் கண்டு வரும் தருணத்தில் நவீன உற்பத்தியையும் தொடக்கி அதனையும் அபிவிருத்திப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையில் முன்னேற்றங்காணச் செய்யலாம். எனவே, மக்கள் தேவையான அளவில் தாராளமாகக் கொள்வனவு செய்வார்கள்.

நவீன உற்பத்தி என்பது, மக்களுக்கு விருப்பத்தையும் கவர்ச்சியையும் ஏற்படுத்தவல்ல திறனுள்ள சாதனங்களை உருவாக்குதலாகும். மக்கள் தம் வாழ்க்கைத் தரங்களை வளப்படுத்தி வருகிறார்கள். அதற்கேற்றதும் அவசியம் தேவையானவற்றையும், சிறந்த தேர்வையும் அறிந்து உற்பத்தியைப் பெருக்க வேண்டும். தட்டுப்பாடு ஏற்டாத அளவுக்கு அந்தப் பொருட்கள் ஊற்று நீர்போல தொடர்ந்து விருத்தியாகிக் கொண்டிருந்தால், மக்களின் முழுக் கவனமும் கொள்முதலும் உள்நாட்டுப் பொருட்களிலேயே தங்கிவிடும்.

சீனா, ஜப்பான் போன்ற நாடுகளின் உற்பத்தி வளங்களை நாமும் பின்பற்றித் தொழிற்பட வேண்டும். இதனால் மக்கள் வேற்று நாடுகளிலிருந்து இறக்குமதியாக்குபவற்றை எதிர்பார்க்க மாட்டார்கள். பொருளாதாரமும் வீழ்ச்சி காணாது. நாடு தன்னிறைவையும் நோக்கி நகரும். நாளைக்கு என்று பின் போட்டால் நம்மைத் தொடர்ந்து கெடுதிவரும். அதனால் இன்றே முயன்று உற்பத்தித் திறனை உபயோகித்துச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். பொருட்களில் வளம் ஓங்கிவரும் உணவுப் பொருட்கள் நுகர்ச்சிப் பொருட்கள் போன்றவற்றைச் சீராக விநியோகிக்க வழியமைக்கவும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாய உற்பத்தியைத் தொகை ரீதியாகவும், தர ரீதியாகவும் அதிகரிக்க வேண்டும். உணவுப் பொருட்கள் கிடைக்காத காலங்களில் விநியோகத்தில் விடுவதற்காக உணவுகளைப் பதனிடல் முறையில் அமைத்துக் கொள்வதை இலங்கை செய்து கொண்டிருக்கிறது. இதை இன்னும் விரிவாக்கி மக்கள் சக்தியைப் பயன்படுத்தி வளத்தைப் பெருக்கும் போது தொகையதிகரித்து விலை குறைவடையும். இதனை மக்கள் பெரிதும் விரும்புவர். ஆதலால். இதனையே கொள்வனவு செய்ய விரும்புவர். ஆர்வமும் தூண்டப்படும். தொழில் வளமும் பன்மடங்கு அதிகரிக்கும்.

இவ்வாறு நாட்டின் அபிவிருத்தி நவீனமாய் உயர்வுறும் போது உள்நாட்டு உற்பத்திப் பொருட்களையே பேரளவில் மக்கள் கொள்வனவு செய்வர். இறக்குமதிப் பண்டங்கள் மீது மோகமிருக்காது. நாடும் பொருளாதார வீழ்ச்சியின்றித் தொடராய் முன்னேறிச் செல்லும், உள்ளூர்ப் பொருட்களை மக்கள் விரும்பிக் கொள்வனவு செய்து வருவதைக் காணும் இலங்கையின் உற்பத்தியாளர்களுக்கு இது ஒரு படிப்பினையாகவும் இருக்கும்.

தெளிவான அறிவிருந்தால்
எளிதாகக் காரியமாற்றலாம்.

01. நாட்டம் - விருப்பம், பார்வை
02. ஈர்க்கும் - இழுக்கும், கவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. இலக்கு - குறி, குறிப்பொருள்
04. ஈட்டுதல் - சம்பாதித்தல்
05. தூர்ந்த - அடைத்த
06. நுகர்ச்சி - அனுபவித்தல்

—*—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

# கொரோனா வைரஸ் மானிட சமூகத்துக்குப் படிப்பினை

பல்லாண்டுகளுக்கு முன்பிருந்தே, சீனர்களும் இன்னும் சில நாடுகளும் பாம்பின் மாமிசத்தை உணவாக உண்டு வந்தனர். மட்டுமல்ல, பன்றி மாமிசத்தையும் பரவலாகப் பல நாட்டினர் உண்கின்றனர்.அண்மையில் இவ்வாறு, பாம்பு அல்லது வெளவால் மாமிசத்தை உண்ட சீனர்கள் படாத பாட்டுக்குட்பட்டு வருந்தியதுடன் முப்பத்திரண்டாயிரத்துக்கு மேற்பட்டோர் இறந்துள்ளனர். எண்பதாயிரத்துக்கு மேற்பட்டோர் இந்த வைரசால் தாக்கப்பட்டுள்ளனர்.

இவ்வைரசால் தாக்கப்பட்டோரைக் கண்டறிய நோயேற்பட்டு இரு வாரங்கள் கழியுமென வைத்தியர்கள் கூறுகின்றனர். இது சுவாசத் தொகுதியைப் பாதிக்கச் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறப்பை ஏற்படுத்துகிறது. ஆராய்ச்சிகளை ஆரம்பித்த வைத்தியர்கள், கொவிட் 19 என்பதுதான் இத் தொற்று நோயின் பெயரெனக் குறிப்பிட்டனர். இந்த வைரசால் பாதிக்கப்பட்ட சீனர்களைத் தொடர்ந்து அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், ஸ்பெயின் பிரேசில், பிரான்ஸ், இந்தியா, இத்தாலி, ஜப்பான், ஆபிரிக்கா, துருக்கி, போன்ற 213 நாடுகள் இதனால் பாதிக்கப்பட்டதால் இலங்கை மக்களுக்கும் பெரும் பீதி ஏற்பட்டது.

இலங்கைக்கு வந்த சீனப் பெண்களில் ஒருவருக்கு இந்த வைரஸ் இருந்ததால், உடனுக்குடன் உரிய வைத்திய சிகிச்சை முறைகளை எமது வைத்தியர்கள் கடைப்பிடித்து,தனிமைப்படுத்திக் குணமடையச் செய்தனர். இலங்கை எடுத்த நோய்ப் பராமரிப்பு, முற்காப்பு நடவடிக்கை போன்றவைகளை உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டியது. அது மட்டுமல்ல, எமது நாட்டிலிருந்து சீனாவுக்குச் சென்றிருந்த முப்பத்து மூன்று மாணவர்களை மீள் எடுப்பதற்கு மிகுந்த சிரமப்பட்டது எமது நாடு. சீனாவை விட்டு வெளியாக்க முடியாதென்ற சீனாவிடம் அந்நியோந்நியமாகப் பேசி மீட்டிக் கொண்டது எமது நாடு.

சீனாவில் தென்கொரிய விமானமொன்று மட்டுமே அப்போது தரையிறக்கப்பட்டிருந்தது. வேறு எந்த நாட்டுப் போக்குவரத்துக்களும் தம்பித்திருந்தது. சீனாவிலிருந்து வந்த 33 மாணவர்களையும் விமானத்திலிறங்கியதிலிருந்து அவர்கள் எவ்வாறு உடை அணிய வேண்டும். எவ்வாறு நடந்து கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும், சுவாசக் கவசம், கைக்கவசம் அணிதல் போன்ற ஆக்க பூர்வமான நடவடிக்கைகளைக் கையாண்டது முதல், தியத்தலாவ இராணுவ முகாமில் தங்க வைத்து முற்தடுப்பு முறைகளையெல்லாம் எமது சுகாதார அமைச்சு, பயிற்சி கொடுத்துப் பராமரித்தது. துறை முகத்திலும் முற்காப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனால், இலங்கை மக்களின் பீதி ஓரளவுக்குக் குறைந்தது. என்றாலும் சீனாவில் படித்த 33 மாணவர்களில், மொனறாகலையைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு இந்த வைரஸ் இருந்து அதுவும் குணமடைந்தது. இந்த வைரசுக்கு மருந்து கண்டுபிடிக்க ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த உலக நாட்டு வைத்தியர் ஒருவருக்கும் இது ஏற்பட்டது. இந்த வைரசின் தன்மை பற்றி எச்சரிக்கை விடுத்த வைத்தியரும் மரணமடைந்தார். கிட்டத்தட்ட உலகில் 94 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் மரணித்தனர். ஏனென்றால், அந்தளவுக்கு உயிர்களைப் பணயம் வைத்து அந்த வைத்தியர்கள் நோயாளர்களைப் பராமரித்தனர்.

உலகில் சனத்தொகை அதிகமுள்ள நாடு சீனா. இந்த வைரசால் அதிர்ச்சியடைந்த சீனா, "சீனாவை ஓரங் கட்டிவிட வேண்டாம்." என்று ஏனைய நாடுகளைக் கேட்டுக் கொண்டது. சீனாவின் கவனயீனமான உணவுப் பழக்கங்களால் எத்தகைய உயிரழிவுகளை, பொருளாதாரச் சிதைவுகளை எதிர்கொண்டது. சீனாவின் வர்த்தக சந்தை வீழ்ச்சி கண்டது. சீனாவுக்கு வரும் உல்லாசப் பிரயாணிகளும், சீனாவிலிருந்து ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளுக்குச் செல்லும் உல்லாசப் பிரயாணிகளும் தடை செய்யப்பட்டனர். விமான ஊழியர்களுக்கு மூன்று வாரக் கட்டாய விடுமுறை வழங்கப்பட்டது. ஹொங்கொங்கிலுள்ள வைத்தியசாலைகளில் தொற்றாளர்கள் நிரம்பி வழிந்தனர். ஒரு வாரத்திற்குள் உடனே நூறு வைத்தியசாலைகள் கட்டப்பட்டு அதில் நோயாளர்களைத் தனிமைப்படுத்தினார்கள். அதனால் ஹொங்கொங் நகருக்கு மக்கள் வருவதை இரு வாரங்களுக்குத் தடுத்தும் வைத்தனர்.

தாய்லாந்துக்குச் சென்ற சீனர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். அதனால் அவர்களுக்கிடையில் அதிகாரப் போட்டியும், சவாலும் ஏற்பட்டது. இவ்வாறு மனித தொடர்பாடல் நன்கு குறைந்திருந்தது. சீனா முழுவதும் துண்டுப் பிரசுரம் விநியோகித்து முன்னெச்சரிக்கை பண்ணினாலும் நாள்தோறும் தொண்ணூறு, நூறு, இருநூறு.... என்றும் அதற்கு மேற்பட்டோரும் இறந்த வண்ணமே இருந்தனர். பீஜிங் மருத்துவ மனை தொற்று நோயாளர்களால் நிரம்பி வழிந்தாலும் இந்த வைரசைச் சரியான முறையில் பரீட்சித்தறிந்து அதற்குத் தக்கபதிலடி கண்டு பிடிக்க முடியாமற் போனது. தீர்க்கமாகக் கண்டுபிடித்து மனித இழப்பை உடன் சீர் செய்ய முடியாதவாறு, சிக்கலான ஒன்றாக இது காணப்பட்டது. சரியான எதிர்ப்புச் சக்தி வக்சீனைக் கண்டு பிடிக்க ஒரு வருட காலமாகும் என்று ஆராய்ச்சி செய்த வைத்திய அதிகாரிகளும் கையை விரித்தனர்.

அதனால், சீன நாட்டு வைத்திய அதிகாரிகள் பதவி இடைநிறுத்தம் செய்யப்பட்டனர். இதனிடையில், உலக சுகாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தாபனம், இதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறும், ஆக்கிரகமாய்ப் போராட வேண்டும் என்றும் எச்சரிக்கை விடுத்தது. சீனாவின் தொழிற்சாலைகள் மூடப்பட்டன. சில நிறுவனங்கள் சீல் வைக்கப்பட்டன. அந்தச் சந்தர்ப்பத்தில் சீனப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் நாடுகள், சீனப் பொருட்களை இறக்குமதி செய்யவில்லை.

போர் நஷ்டங்களால் பொருளாதாரம் வீழ்ச்சியடைவது போல் வைரஸ் தாக்கத்தினால் ஏற்பட்ட பேரிழப்பு பொருளாதார வீழ்ச்சியைக் கொணர்ந்தது. சீனாவில் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இது உலக பொருளாதார வீழ்ச்சிக்கும் கால்கோளானது. உலக சந்தையும் வீழ்ச்சி கண்டது. சீனாவின் கப்பலில் இருந்த சுற்றுலாப் பயணிகளில் மூவாயிரத்துக்கு மேற்பட்டோருக்கு இந்நோய் தொற்றியது. இதுபற்றி அமெரிக்கா குற்றஞ்சாட்டியது. வல்லரசாகவும் நவீனமான பொருட்களை அதிகமதிகம் உற்பத்தி செய்து உயர் நிலையிலிருந்த சீனா இவ்வாறு பின்னடைவையடைந்தது கவலைக்குரிய விடயம். இப்போது சீனாவில் சுமுகமான சூழ்நிலை உருவானாலும் மீண்டும் தொற்றுக்கள் தொடரத் தொடங்கியுள்ளது. எவ்வாறாயினும், தொழிற்துறைகளை மீண்டும் ஒவ்வொன்றாய் ஆரம்பிக்கிறது சீனா.

மத்திய சீனாவில் ஆரம்பித்த இந்தக் கொரோனா வைரஸ் தாக்கம், ரஷ்யா போன்ற நாடுகளில் அதிகளவான மரணங்களை ஏற்படுத்தியுள்ளது. சீனாவைக் குற்றஞ்சாட்டிய அமெரிக்காதான் உலகில் அதிகமான தொற்றாளர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருக்கும் துரதிஷ்ட நாடாகவும், உலகிலே மிக அதிகளவான ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மரணங்கள் ஏற்பட்ட நாடாகவும் முன்னிலையிலுள்ளது. இதற்கு அமெரிக்காவிலும், தடுப்புமருந்து இல்லாமல் இந்தியாவிடம் கையேந்தியது. மட்டுமல்ல பாரிய பங்குச் சந்தை வீழ்ச்சி கண்டது. உலக சுகாதாரத் தாபனத்துக்கு வழங்கி வரும் உதவிப் பணத்தையும் தற்காலிகமாக அமெரிக்கா நிறுத்திக் கொண்டது.

அமெரிக்கா இதற்கு முன் எத்தனையோ பிரபலமான உலகப் பெரியார்களைக் கொன்று குவித்திருக்கிறது. தொடர்ந்தும் அதைச் செய்து கொண்டுதானிருக்கிறது. ஆனால் தனது நாட்டு மக்கள் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோரை அதறப் பதற ஆண்டவன் அழித்துவிட்டான். தொடர்ந்தும் அழியலாம். ஏன் என்று சிந்தியுங்கள். இருட் கங்குலில் ஒழித்திருக்கும் இரகசியம் இறைவனின் செயல் என்றே ஏற்க வேண்டும்.

"எல்லாப் பலமும் என்னிடமே உள்ளன." என மார்பு தட்டும் அமெரிக்கா, தனது நாட்டு மக்களையே அழித்துக் கொண்டிருப்பதிலும் முதலிடத்தை வகிக்கின்றது. ஒரு இலட்சத்து முப்பதாயிரத்துக்கு மேற்பட்டோரை அழித்துக் கொண்டு இருபத்தேழு இலட்சத்து அறுபதாயிரத்துக்கு மேற்பட்ட தொற்றர்களை இன்று வரை (2020.06.21) உருவாக்கி வைத்திருக்கிறது. இந்த அழிவைப் படிப்பினையாய்க் கொண்டாவது இனிமேல், உலக மனித உயிர்களை வதைப்பதை நிறுத்தட்டும். அநியாயப் பாகுபாடு காட்டாமல் நீதியை மட்டும் நிலைநாட்ட அமெரிக்கா முன்வந்தால் உலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளும் அதனுடன் உடன்பாடு கொள்ளும். இறையும் அதை ஏற்கும்.

பிரித்தானியாப் பிரதமர், அவர்களின் சுகாதார அமைச்சர், ஸ்பெயின் பொதுச் செயலாளர், பிரான்ஸ் கலாசார அமைச்சர், இத்தாலி காற்பந்து வீரர், என்று இன்னும் எத்தனையோ பிரபலங்களைக் கூட கொவிட் 19 தொற்று, விட்டு வைக்கவில்லை. தொட்டுச் சென்றது. உலகில் மொத்தமாக ஒரு கோடி இரண்டு இலட்சத்திற்கும் அதிகமானோரைத் தொட்டுள்ளது. காற்பந்து வீரரைக் கொண்டு சென்றது. இலங்கையிலும் பத்துப் பேரை எடுத்துக் கொண்டது. அமெரிக்காவில் ஒரு இலட்சத்து முப்பதாயிரத்துக்கு மேற்பட்டோர், பிரிட்டனில் 36,000க்கு மேற்பட்டோர், ஸ்பெயின், ரஷ்யா தலா 28 ஆயிரத்துக்கு மேற்பட்டோர், இத்தாலியில் 30 ஆயிரத்துக்கு மேற்பட்டோர், பிரேசில், பிரான்ஸ் தலா 23 ஆயிரத்துக்கு மேற்பட்டோர், இந்தியாவில் பதினெட்டாயிரத்துக்கு மேற்பட்டோரை அதாவது இன்றுவரை (2020.06.21) போரின்றி சத்தமின்றி இரத்தமின்றி, கொண்டு சென்றது கொரோனா வைரஸ். இது உலக மக்கள் அனைவருக்கும் ஒரு படிப்பினையாய் அமையவேண்டும்.

பாம்பு மட்டுமல்ல, பாதிப்பை ஏற்படுத்தும் பன்றி, எலி, நாய், உடும்பு போன்றவற்றின் மாமிசங்கள், கரப்பான், வெட்டுக்கிளி, தாவரப் புழு, போன்றவற்றையும் உணவாகக் கொள்வதை முற்றாக நிறுத்த வேண்டும். உணவின் தன்மையை அறியாது உண்பதால், உடலில் எமக்குப் புரியா நோய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றும் உணவை அறிந்து உண் அதனை அளவோடு உண். பாங்கு பரிசனம் அறியாது உண்போர்க்குத் தீங்கு தரிசனமாயிருக்கும். நோயற்ற வாழ்வை வாழ விரும்பினால் தேவையற்ற உணவைத் தவிர்க்க வேண்டும். எனவே, மனித உடலுக்குத் தீங்கு தரும் எதனையும் ஆவல் கொண்டு உண்ணாதிருக்க வேண்டுமென்பதை உலக நாடுகள் முழுவதும் இதனையொரு படிப்பினையாய்க் கொண்டு உணர வேண்டும்.

இறைவா! உன் சீற்றம் அடங்கி
உலக நாடுகளைச் சீர் பெறச் செய்வாயாக!

01. அந்நியோந்நியம் - ஒற்றுமை
02. தம்பித்தல் - அசையாதிருத்தல்
03. ஆக்கிரகம் - விடாப்பிடி
04. கால்கோள் - தொடக்கம், ஆரம்பம்
05. கங்குல் - இரவு, இருட்டு
06. உடன்பாடு - இசைதல்
07. பாங்கு - தன்மை
08. பரிசனம் - சுற்றம்
09. தரிசனம் - தோற்றம், காண்கை

—✶—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

# தேசிய ஒருமைப்பாடும் சமாதானமும்

ஒரு தேசத்தில் வாழும் மக்கள், யுத்தங்களாலும், எதிர்ப்புக்களாலும் போராடும் நிலையை ஒழித்து நீண்டகால அமைதியை ஏற்படுத்துவதால் மட்டுமே சமாதானம் நிலைக்கும். இதனால் தோன்றுவதுதான் தேசிய ஒருமைப்பாடு. நாட்டில் யுத்தத்தையுருவாக்கி அழிவுகளை உண்டாக்கும் சக்திகளின் செயற்பாடுகள் தூண்டப்படாதிருப்பதற்கு, நாட்டு மக்களின் நலன்களிலும் தேவைகளிலும் அரசு பிரதான அக்கறை காட்ட வேண்டும். மக்களின் விருப்பு வெறுப்புக்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

குடி மக்கள் எந்தளவுக்குத் திருப்திகொண்டு, தம் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்களோ அது, சுமுகமான மக்களாட்சி முறையிற்தான் தங்கியுள்ளது. சர்வதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியிலுங் கூட சமாதானத்தைப் பாதுகாப்பதை விட அதிக முக்கியத்துவம் பெற்ற செயற்பாடுகள் எதுவுமே இருக்க வாய்ப்பில்லை. சமூகங்கள் தத்தமது தேவைகளுக்கும் நாட்டின் சூழ் நிலைகளுக்கு மேற்ப முன்னேறும் வழிகளை முன் வைக்கின்றன. அவை நற்பயன் தர வல்லனவாவென்பதை ஆராய்ந்து அவற்றுக்கு அரசாங்கம் வழியமைத்துக் கொடுக்க வேண்டும்.

பிரயோசனமான செயற்பாடுகளுக்கு வழிவிடாது, அதனை நடைமுறைப் படுத்தப் போதிய பலமில்லாத விடத்து, அந்த விடயங்களின் கவனிப்பை உதாசினப்படுத்தும் போது சமுகமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் நாட்டு மக்கள் கிளர்ந்தெழுகின்றனர். அதைக் கண்டுகொள்ள முடியாத அரசாங்கம் இராணுவத்தைப் பயன்படுத்தி அக் குழுக்களின் பாதகச் செயற்பாடுகளை முறியடிக்கும் நடைமுறையை ஏற்படுத்த முற்படுகின்றது. எனவே, இவ்விரு சாராரும் சேர்ந்து நாட்டில் பெரும் போரொன்றை ஆரம்பித்து விடுகின்றனர். இதனால் நாடு அமைதியிழக்கிறது. பூகம்பம் மிதக்கிறது. நிம்மதி குலைகிறது, பொருட்சேதம் உயிர்ச் சேதம் கூடுகிறது. இருந்த பொருளாதார நிலை இன்னும் வீழ்ச்சியுற்றுப் பின் தள்ளப்படுகிறது.

இவற்றுக்குத் தீர்வு காண்பதாயின் பொருத்தமான மாற்றுச் செயற்பாடொன்று அவசியம் ஆற்றப்பட வேண்டும். இச்செயற்பாட்டைப் பேச்சு வார்த்தையின் மூலம் எல்லோரும் புரிந்து ஏற்றுக் கொள்ளும் விதத்தில், தீர்வுகளை அரசாங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் வைக்க வேண்டும் இதனால் தேசிய பொருளாதாரச் சிதைவைக் கட்டுப்படுத்தலாம். இவ்வாறு செய்வதால் பொருளாதார வளர்ச்சி மேலோங்கி மக்கள் திருப்தியான வாழ்க்கையை வாழ்வர். நாடு அமைதி பெறும். நாமும் நலன் பெறுவோம். தேசியம் ஒருமைப்படும். சமாதானம் செழிதலுறும்.

இது தவிர ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி பாதிப்படைவதன் முக்கிய காரணி, நாட்டினுள் நடைபெறும் யுத்தமும், அழிவுகளும் தொற்று நோய்களும். இவை மாறி நாடு அமைதிபெறும் நிலையில் ஒவ்வொரு துறையிலும் அமோக வளர்ச்சிகள் ஏற்பட்டு அபிவிருத்தி அடையும். மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து செல்லும்.

உணவுப் பொருட்கள், நுகர்ச்சிப் பொருட்கள் என்பவற்றின் சீரான விநியோகம், விவசாய உற்பத்தியினை அதிகரித்தல்,தொழிலாளர் அரச ஊழியர்கள் ஆகியோரின் நியாயமான சம்பளம், உற்பத்திப் பொருட்களால் ஏற்படும் ஏற்றுமதி அதிகரிப்பு என்றெல்லாம் சகல துறைகளும் முன்னேறிக் கொண்டே செல்லும். நாட்டு மக்களைச் சமாதானம் எந்தளவு அமைதியான சூழ் நிலைக்குக் கொண்டு வருகிறதோஅந்தளவு அவர்களிடமிருந்து கடின உழைப்பையும் இதமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

நாடு சமாதானமாகும் நிலையில் மனித உள்ளமும் சாந்தி பெறும். அதனால் தத்தமது திறனுக்கேற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பதற்கான உந்துதலும் ஒவ்வொரு சிந்தையிலும் உருவெடுக்கும். மக்களிடம் கூட்டுறவுகள் உதயமாகும். சகல இனத்தவருக்கும் சக வாய்ப்பு வசதிகள் கிடைப்பதால் சமுதாயம் முன்னேறிப் படிப்படியாகப் பிரச்சினைகளும் தீரும். படிப்பினைகளும் உருவாகும். அதன் பின் நாட்டு மக்களிடையே பகையென்ற ஒன்றைத் தேடித்தான் கண்டு கொள்ள வேண்டும்.

இவ்வாறான முன்னேற்பாடுகளை முன்னெடுத்துச் செயற்பட்டாலேயொழிய பித்துப் பிடித்த யுத்தங்களாலும் பிதற்றும் எதிர்ப்புக்களாலும் எந்தவொரு நாட்டையும் சமாதானமான அமைதியான நிலைக்குக் கொண்டுவர முடியாது. பீறிட்டெழும் தீச்சுவாலையை அடக்கிவிட்டாலும் அங்கே நீறுபூத்த நெருப்பாகயிருந்து இடையிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தலாம். நிரந்தர சமாதானமே பயன்தரும் பாலனமாகும்.

நேர்மையாய் வாழ்பவனுக்கு
நிம்மதி தொடரும்.

| | | |
|---|---|---|
| 01. ஒருமைப்பாடு | - | ஒன்றி நிற்கை, ஒற்றுமை |
| 02. உதாசினம் | - | இகழ்வு, அவமதிப்பு |
| 03. செழிதல் | - | வளர்தல் |
| 04. உந்துதல் | - | எழும்புதல், தள்ளுதல் |
| 05. நீறு | - | சாம்பல், விபூதி |
| 06. பாலனம் | - | பாதுகாப்பு |

—∗—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

## அநர்த்தங்களை முறியடிக்க...

இன்று உலகில் கால நிலை மாற்றங்களால் பல அநர்த்தங்கள் ஏற்படுகின்றன. நிலச்சரிவு, கடற்சீற்றம், வெள்ளப்பெருக்கு எனப் பலவாறாகும். இவை நடைபெறுவதற்கு இயற்கைதான் காரணமாயினும் நாமும் ஒரு காரணமாயிருக்கின்றோம். இயற்கை அழிவுகள் ஏற்படுவதற்குப் பிரதான காரணம் வெப்ப நிலையதிகரிப்புத்தான் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். வெப்ப நிலை அதிகரிப்பதற்கு ஏதுவான காரணி மரங்களை அழிப்பதுதான்.

சட்ட விரோதமான முறையில் மரங்களைக் காலந்தோறும் வெட்டுவது காடழிப்பை ஏற்படுத்தும், அத்தியாவசிய தேவைகளுக்கு மரங்களை வெட்டினால், உடனுக்குடன் மர நடுதலும் நடைபெற வேண்டும். மரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காபனீரொட்சைட்டைச் சுவாசிப்பதால், சூழலிலுள்ள அசுத்த வளி சுத்தமாக்கப்படுகிறது. அவை ஒட்சிசனை வெளிவிட்டு எம்மைச் சுத்தமாகச் சுவாசிக்க வைக்கிறது. சூழலைக் குளிர வைக்கிறது. மட்டுமல்ல, மண்ணரிப்பை அவை கட்டுப்படுத்தி நிலச் சரிவுகளை இல்லாமற் செய்கிறது.

நிலச் சரிவை ஏற்படுத்தும் சரிவான பகுதி நிலங்கள் எனத் தெரிந்திருந்தும் அந்த **அநந்தரமான** நிலங்களில் வீடுகளை அமைத்துக் குடியிருப்பது எமது மடமையல்லவா. அவ்வாறான நிலங்களுக்கருகாமையில் பிரதான பாதைகளை அமைக்கும் போது சரிவாயுள்ள நிலத்தில் கற்களை அடுக்கிக் கொங்க்றீற் போடவில்லையாயின் அங்கு நிலச் சரிவு ஏற்படும். இதுவும் மனித மடமைதான். அங்கே பேரநர்த்தம் ஏற்பட வாய்ப்பதிகம்.

கடற் சீற்றம் ஏற்படுவது இயற்கையின் மாற்றமானாலும் அதனாலுண்டாகும் அநர்த்தங்களைக் காக்க, கடலை அண்மித்த பகுதிகளில் கட்டிடங்களமைத்துக் குடியிருப்பதையும் தவிர்க்க வேண்டும். முன் யோசனையில்லாமல் முட்டி மோதிய பிற்பாடு தட்டிவிட்டதெனத் தடவுவது திட்டவட்டமான அறிவீனம். குடியிருக்க இடவசதியற்று, இவ்வாறான சரிவு நிலங்கள், கடலையண்மித்த நிலங்களில் அறிவின்றி வீடமைப்பதை அரசாங்கம் முற்றாகத் தடை விதிக்க வேண்டும்.

இலங்கையிலிருக்கும் எத்தனையோ தரிசு நிலங்களில் நீர், மின் விநியோக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியமர்த்துவதை விடுத்து, கட்டிய கட்டிடங்களிலே குடியிருக்க வாய்ப்பையேற்படுத்திக் கொடுக்காது ஆற்றறுத்தல் செய்யும் ஆட்சி அதைவிடப் பெரிய அசட்டைத் தனமானது. இதெல்லாம் நாம் விடும் பாரிய தவறுகள். பழி ஒரு பக்கம் பாவம் மறுபக்கம். இவ்வாறான அரச பிளவுகளால் முடங்கிப் போகும் வாழ்வு ஏழை மக்களையும் மத்திய தரக் குடும்பத்தினரையுமே வந்தடைகிறது. பணம் படைத்தவர்களாய், பட்டம் கிடைத்தவர்களாய் வாழ்ந்து சாதித்தது வறிய இலங்கையைத்தான்.

இது சிங்களவருக்கிருக்கும் நிலம், இது தமிழரின் நிலம், இது முஸ்லிம்களின் நிலம் என்று இடம் பிடித்துத் தடம் பதிக்கப் போராடி முடிவதற்குள் பூதலமே அழிந்துவிடும். போராட்டங்களைப் போர்த்திப் போவித்து, போதனைகளை நிறுத்தி, மக்கள் குடியிருப்பு நிலங்களுக்குள் ஊடறுத்துக் குடியமர்த்துவதைத் தவிர்த்து, தரிசு நிலங்களைப் பயன்பாடாக்கி, மக்களைக் குடியிருக்கச் செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதாற்தான் சகல மக்களின் வாழ்வும் சம நிலைப்படும். அநர்த்தங்களற்ற அழகான இலங்கையை உருவாக்கலாம்.

இலங்கையில் வருடந்தோறும் வந்து கொண்டிருக்கிறது பெரு வெள்ளம். இதையறிந்தும் முன்னேற்பாடான சில விடயங்களை முன்னெடுக்கத் தவறிவிடுகிறோம். யார் ஆள்வது, யார் வீழ்வது என்பதைத்தான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறோம். யானைகளிரண்டும் போராடித் தொலைகிறது. ஆனால் இடையில் அகப்பட்ட பற்றைகளுக்குத்தான் சேதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுகின்றது. இவ்வாறுதான் நாடும் சேதப்படுகிறது. ஆழும் தகுதியாருக்கிருக்கிறது. என்பதை நாளும் நாம் துருவாமல் நாட்டில் ஏற்படும் அநர்த்தங்களை முறியடிக்க முன் கூட்டியே செயற்பாட்டிலிறங்க வேண்டும்.

வெள்ளம் பிரவாகம் எடுப்பதற்கு முன்பாகவே எச்சரிக்கையான இடங்களுக்கு மக்களை இடம் பெயரச் செய்ய வேண்டும். இதனால் உயிரிழப்புக்களையும், பொருட்சேதத்தையும் தவிர்த்துக் கொள்ளலாம். வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டும். ஏற்கனவே ஏற்பட்ட பெரு வெள்ளங்களாலும், கடற்சீற்றத்தாலும் மக்கள் துடியாய்த் துடித்ததையும், மரணித்ததையும் யாம் நன்கு அறிவோம். எனவே, அதனைப் படிப்பினையாய்க் கொண்டு முன்னெச்சரிக்கையுடன் அநர்த்தங்களுக்கு முகங்கொடுக்க முன்னின்றுழைப்போம்.

இவ்வாறான பேரநர்த்தங்களை எதிர்வு கொள்ளும் ஆள்வினைகளைக் கையாண்டு இலங்கை எமக்குக் கையடையாய்த் தந்த இயற்கையின் சொத்துக்களைப் பாதுகாப்போம், பயன் பெறுவோம், படிப்பினையாய்க் கொள்வோம்.

கண் இருப்பது பார்ப்பதற்கல்ல அறிவதற்கு.
காது இருப்பது கேட்பதற்கல்ல புரிவதற்கு.
வாய் இருப்பது பேசுவதற்கல்ல பேணுவதற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 01. அநந்தரம் | - | தீமை, மேல் |
| 02. தரிசு | - | பயிர்செய்யா நிலம் |
| 03. ஆற்றறுத்தல் | - | இடையில் கைவிடுதல் |
| 04. அசட்டை | - | பராமுகம் |
| 05. போவித்து | - | போக்குதல் |
| 06. பற்றை | - | குறுங்காடு |
| 07. துருவாமல் | - | தேடாமல் |
| 08. ஆள்வினை | - | உற்சாகம், இடைவிடா முயற்சி |
| 09. கையடை | - | பாதுகாக்க ஒப்பித்த பொருள் |

—*—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

# விண்வெளியும் மனித சாதனையும்

விண்வெளிக்குச் சென்ற யூரி ககாரின் தொடக்கம், அண்மையில் 2011 - ஏப்ரலில் ரஷ்ய "சொயுஸ் ரி.எம்.ஏ.21 ஏவுகணை - 3 விண்வெளி வீரர்களுடன் விண்ணுக்கு வெற்றிகரமாக ஏவப்பட்டுள்ளதுடன் மிக மிக அண்மையில் 2019 - மார்ச்சில் விண்கலச் சோதனைக்காக, மனிதர்களற்ற "ட்றகன் 2" ஏவுகணையை அனுப்பிச் சாதனை படைத்தது வரை இன்னும் எத்தனையோ எண்ணிலடங்காத விண்வெளிச் சாதனைகளை இன்று வரை மனித இனம் சாதித்திருக்கிறது.

இவ் விண்வெளி யாத்திரையை முதன் முதலாகச் செய்த பெருமை நபி மணி (ஸல்) அவர்களையே சாரும். "அல்லாஹ்" அவர்களை அங்கே அழைத்திருந்தான். அப்போது தன் அடியார்களுக்காகப் பெறுமதிமிக்க சில பரிசுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளித்திருந்தான். கண்ணை மூடித் திறப்பதற்குள் நபி மணி (ஸல்) அவர்கள் அன்றிரவு நித்திரை செய்திருந்தபோது அழைத்தான். நித்திரை செய்த இடத்தின் சூடு ஆறுவதற்குள்ளாக விண்வெளிப் பயணத்தில் எத்தனையோ சாதனைகளை இறையுதவியால் முடித்துக் கொண்டு மீண்டும் உலகுக்குத் திரும்ப வைத்தான் இறைவன். இவ்வாறான அதிசயம் மிக்க சாதனையை நபி மணி (ஸல்) அவர்கள் செய்து முடித்தார்.

விண்வெளி பரந்து விரிந்த ஒரு எல்லையற்ற இடம். எனவே, அங்குள்ள முழுமையான விடயங்களையும் அறிந்து கொள்வது கடினமானதொன்றாகும். விண் வெளியை ஆய்வு செய்வதன் காரணத்தால், வானியல் எனும் துறை உருவானது. 1929ம் ஆண்டு ஜுலை 17ம் திகதி கலாநிதி ரொபர்ட் எச் கொட்டாட் என்பவர் வானிலைத் தரவு சேகரிக்கும் "ரொக்கெட்" இயந்திரத்தை விண்வெளிக்கு அனுப்பி, பரசூட்டின் உதவியுடன் மீண்டும் தரையிறக்கி அவர் சாதனை படைத்தார்.

1940ல் சோவியத் ரஷ்யப் பொறியியலாளரான சர்ஜி கொரல்ட் என்பவரின் தலைமையில் பொறியியலாளர் குழுவொன்று ரொக்கெற்று மூலம் விண்வெளிக்கு அனுப்பப்பட்டு சாதனை படைக்கப்பட்டது. 1957ல் இதே நாட்டினால், ஸ்புட்னிக் - 01 எனும் செய்மதி விண்வெளிக்கு ஏவப்பட்டு வலம் வரச் செய்து வெற்றிகண்டதால் அது முழு உலகையும் விண்வெளி உலகத்திற்கு இட்டுச் செல்ல வாய்ப்பளித்தது. இதுவும் மனிதனின் பெரும் சாதனையாகவே திகழ்கிறது. இதே ஆண்டு நவம்பர் 3ம் திகதியும் அவர்கள் ஸ்புட்னிக் - 2 எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்மதியை "லைக்கா" என்ற நாயுடன் அனுப்பிச் சாதனை படைத்தனர்.

1958ல் அமெரிக்கர் "எக்ஸ்புளோரர் - 1", "வன்காட் - 1" என்ற செய்மதிகளை விண்வெளிக்கு அனுப்பி, புவியைச் சுற்றி வலம் வரச் செய்து சாதனை படைத்தனர். மட்டுமல்ல இவர்கள் அவ்வாண்டில் ஒக்டோபர் 01ம் திகதி நாசா எனும் நிறுவனத்தையும் அமைத்து அவர்களது விறத்தலான விண்வெளிச் செயற்திட்டங்களைத் துரிதப்படுத்தினர். 1961ல் விண்வெளி சென்ற முதல் அமெரிக்கர் என்ற பெருமை அலென் ஷெப்பர்ட் என்பவரையே சாரும். அமெரிக்கர் அப்பலோ செயற்றிட்டத்தை ஆரம்பித்து 17 வகையான ஓடங்களை விண்வெளிக்கு அனுப்பினார்கள். அப்பலோ - II எனும் ஓடத்தில் 1969 - ஜுலையில் சென்ற நீல் ஆம்ஸ்ட்ரோங் என்ற அமெரிக்கரே சந்திரனில் தரையிறங்கி சாதனை படைத்தவர். இவரும் இவரோடு சென்ற மைக்கல் கொலன்ஸ் என்பவரும் அமெரிக்கக் கொடியைச் சந்திரனில் ஏற்றியுள்ளனர்.

விண்வெளிக்குச் சென்ற முதல் பெண்மணியான ரஷ்ய நாட்டு வலன்ரீனா தெரஸ்கோவா, பெண்களில் சாதனையாளராகத் திகழ்கிறார். வொஸ்ரொக்ஸ் - 6 என்ற விண்வெளி ஓடத்தில் பயணித்து 71 மணித்தியாலங்களில் 48 முறைகள் புவியை வலம் வந்தது இவர் படைத்த சாதனையாகும். உயிர்காப்பு உபகரணங்கள், தரவு நிரைப்படுத்தும் உபகரணங்கள் கொண்ட அறையொன்றும், ஆய்வு கூடம் கொண்ட அறையொன்றும் அமைந்த விண்வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ச்சிக் கூடங்கள் மூன்றை விண் வெளிக்கு அனுப்பி, காலநிலை, வானிலைத் தரவு போன்ற பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு மனிதன் சாதனை படைத்துள்ளான்.

2005 - ஜுலை மாதம் விண் வெளிக்கு அனுப்பப்பட்ட "டிஸ்கவரி" என்ற ஓடத்தில் ஏற்பட்ட பழுதை விண்வெளியில் வைத்தே சீர் செய்திருக்கிறார்கள். இது விண்வெளி வரலாற்றில் முதற் தடவையாகச் சாதித்த சாதனையாகும். இவ்வாறு மனிதன் சாதித்த விண் வெளிச் சாதனைகள் ஒன்றிரண்டல்ல.... அடுக்கிக் கொண்டே போகலாம். இனிமேலும், இவற்றைவிடச் சிறந்த நுட்பங்களோடு கூடிய விண்வெளிச் சாதனைகளை மனிதன் படைப்பான் என்று நம்புவதில் எவ்வித ஐயமுமில்லை. இவையெல்லாம் இனிமேலும் பல உயர்வான கண்டு பிடிப்புக்களை உருவாக்கிச் சாதனை படைப்பதற்கு நல்ல படிப்பினையாய்த் திகழட்டும்.

புத்துணர்ச்சி பெறும் மூளையிற்தான்
புதியவை உருவாகும்.

01. விறத்தல் - வெற்றி பெறுதல், மிகுதல்
02. ஐயம் - சந்தேகம்

—✶—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

# ஊடகமும் சமூக உணர்வும்

அன்றையக் காலந் தொட்டு இன்றைய நாள் வரை நாம் சந்தித்து வரும் சகல விடயங்களையும் உணர்வு பூர்வமாக அறிந்து கொள்ளவும், தகவல்களைப் பரவச் செய்யவும், சமூக அபிப்பிராயத்தை உருவாக்கவும் வாய்ப்பளிப்பதுதான் ஊடகம். இது சமூக உணர்வை முன்னெடுக்க உதவுவது மட்டுமல்ல, பல பங்கங்கள் ஏற்படவும் காரணியாயமைகிறது. கருவிகளின் வாயிலாகக் கைகளாலாற்றி வந்த செயற்பாடுகள் படிப்படியாக முன்னேறி, இன்று தொழிநுட்பத்துடன் தொடர்பினை இணைத்துத் துரிதகதியில் இயங்க மனிதர்களுக்கு வழியமைத்திருப்பதும் ஊடகம். இதில், தொலைபேசி, தொலை நகல், தொலைக்காட்சி கணனி, “செற்ல் லைற்” போன்ற தொலைத் தொடர்பு ஊடகங்களடங்கும்.

மனித ஆற்றலின் திறமையை எதிர்பாராத அளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவாக்கி முன்னேற்றங்காணச் செய்வதற்குத் காலாக அமைந்ததே ஊடக உணர்வுதான். ஏனெனில் ஊடகம் உலகளாவிய அறிவியல்களை உள்ளடக்கி உணர வைக்கிறது. ஊடகம் சார்ந்த உணர்வுகள் மனித வாழ்வில் பெரும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி அதிலிருந்து அறிவியலையும் தொழிநுட்பங்களையும் உருவாக்கிக் கொடுத்தன. அதன் பயன்பாட்டால் பல கண்டுபிடிப்புக்களையும் இன்று கண்டு பிடித்துள்ளனர். மக்களிடையே அபிப்பிராயங்களை உருவாக்கும் தொடர்புச் சாதனமாக ஊடகங்கள் விளங்குவதால் கருத்துப் பரிமாற்றங்களை ஏற்படுத்தும் **உன்னத** உணர்வாக அவை கருதப்படுகின்றன.

வானொலி, தொலைக்காட்சி வலைப்பின்னல் போன்ற இலத்திரனியல் ஊடகங்களினால், இன்று பரந்து கிடக்கும் உலக விடயங்களை நொடிப் பொழுதில் உணர்ந்து கொள்ள முடியும். இன்றைய நவீன காலத்தில் பாடசாலைகளிலே பயிலும் மாணவர்களுக்கு அங்கே கணனி ஊடகம், மாணவர்களின் கல்வியறிவோடு கலந்து, அளப்பரிய சேவையை வழங்கி, உணர்வுகளுக்குப் புத்தூட்டம் கொடுக்கிறது. பாடங்களிலிருக்கும் **கலை** விளக்கங்களைத் தெளிவாகத் தெரிந்துகொள்வதற்குக் கணனி உடனிருந்து உதவுகிறது. மாணவ சமூகத்தைக் கவரும் வகையில் இவ்வூடகங்கள் கல்வி சார்ந்த அறிவு நிகழ்ச்சிகளை ஒலி, ஒளிபரப்புச் செய்து வருவதால் உணர்வுக்குப் பத்திவிருப்பத்தை ஊட்டிச் செல்கின்றன. அவர்களுக்கு இந்த வழியிற் கற்பதற்கு ஆசையையும் அது தூண்டிவிடுகின்றது.

அச்சக ஊடகமான, தினசரி, வார, மாத இதழ்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவகாலச் சஞ்சிகைகள் போன்றவை வெளிவருவதால் மாணவ சமூகத்தினரைக் கவர்ந்து அவர்களின் உணர்வுகளை உயர்வடையச் செய்கின்றன. மாத்திரமல்ல, ஏனைய சகல மட்டங்களிலுமுள்ள படித்த, பாமர மக்களின் உள்ளங்களைக் கூட அவை ஊடறுத்துச் சென்று உணர்வுகளைத் தெளிவாக்குகின்றன. எழுத்தாளர், இலக்கியவாதிகள், நூலாசிரியர்கள் தத்துவ ஞானிகள் போன்ற சிந்தனையாளர்களை உருவாக்குவதில் இவ்வூடகங்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன. தற்போதெல்லாம் சாதாரண வர்த்தகக் கடையிலோ, தனியார் நிறுவனங்களிலோ அல்லது அரச துறைகளிலோ எதுவாக இருந்தாலும், நிருவாக வேலைக்கு அத்தியாவசியமாகத் தொழிற்பட்டுக் கொண்டிருப்பது இந்தக் கணனி ஊடகமென்றே கூறலாம்.

எவ்வாறிருந்தாலும் இன்று தொழிற் பிழைப்புக்காக எத்தனையோ வர்த்தகத் துறையினர், தவறானதும், வேண்டத் தகாததுமான காட்சிகளையும், நிகழ்ச்சிகளையும் ஊடகங்களினூடாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் கணக்கில் அடங்காதோரைக் கண்கூடாகக் காண்கின்றோம். சமூகத்தின் ஒழுக்க விழுமியங்களைச் சீரழிக்கின்ற ஒப்புரவற்ற காட்சிகளை ஒளிபரப்புச் செய்யாது அவற்றை ஒடுக்குதல் வேண்டும். இவை எமது எல்லாக் குழந்தைகளையுந்தான் பாதிப்புக் குள்ளாக்குகின்றன. இதனை வெளியிடுபவர்களின் குடும்பங்களிற்கூட குழந்தைகள் இருக்கத்தான் செய்யும். இது அவர்களுக்குக் கூச்ச உணர்வை ஏற்படுத்தவில்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையிலேயே உலக மக்களுக்கு இது வெறுப்பூட்டுவதாக உள்ளது.

அசிங்கமான காட்சிகளைப் புதுப்புது வடிவமாக்கித் தொடர்ந்து காட்சிப்படுத்துவது, சமூகச் சீர்கேட்டுக்குத் தூண்டு கோலாயிருக்கிற தென்பதை எல்லோரும் படிப்பினையாய்க் கொண்டு அந்த நிகழ்ச்சிகளை அடியோடு அகற்றுவதற்கு முயற்சியெடுக்க வேண்டும். இவ்வாறான இழிவான நிலைகளை விளைவிக்கின்ற தொழில் முயற்சிகளை முற்றாக அகற்றுவதற்கு அரசு முழுக் கவனமெடுக்க வேண்டும்.

எந்த இக்கட்டான சந்தர்ப்பமென்றாலும் வழிகெடுக்கும் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதையும் கேட்பதையும் தவிர்த்துக்கொள்வதே சாலச் சிறந்ததாகும். எவ்வாறாயினும் எதிர்காலத்தில் இவ்வூடகத் துறை இன்னும் வியக்கத் தக்க வகையில் முன்னேறுவது **திண்ணம்**. அவ்வாறெனின், ஊடகங்களுடன் ஒன்றித்திருக்கும் தீய விடயங்களைத் தவிர்த்து நல்லவைகளை மாத்திரம் கவர்ந்து கொண்டால், அவை மாணவ சமூகத்திற்கு ஒரு **வரப்பிரசாத**மாயமையும்.

**ஊடகத்தை ஊடுருவி உணர்வுகளை உயர்த்த வேண்டின்**
**கேடகற்றி ஊடறு.**

*01.* பங்கங்கள் - கெடுதிகள், பழுதுகள், அவமானம்
*02.* துரித கதி - விரைவு
*03.* காலாக - பிறப்பிடமாக, முயற்சியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. உன்னதம் - உயர்ச்சி, மேன்மை

05. கலை - கல்வி

06. பத்தி விருப்பம்- ஆர்வம்

07. ஊடறுத்து - ஊடுருவி, நடுப்புகுந்து

08. ஒப்புரவு - உலகவொழுக்கம்

09. ஒடுக்குதல் - அடக்குதல், குறைத்தல்

10. சால - மிகவும்

11. திண்ணம் - நிச்சயம்

12. வரப்பிரசாதம் - அருட்கொடை

13 உணர்வு - அறிவு, உணர்கை

—★—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

# வனவளம் உயிரினங்களுக்கு வளம்

இறைவனின் படைப்புக்களில் மிக உன்னதமாயிருப்பவையும் அதிகமாயுள்ளவையும் உயிரினங்கள்தான். மனிதன், மிருகம், பறவை, ஊர்வன, மரங்கள் எல்லாமே உயிரிகளாகும். இவற்றில் அசையா உயிரிதான் மரம், என்றாலும், இடம் விட்டு இடம் மாறிக் கொள்ளத் தருக்களுக்கு முடியாது போனாலும் எல்லா உயிரிகளையும்போல் வளர்ச்சிடையவும், இனப் பெருக்கமடையவுங்கூடியது. மரத்தைத் தவிர்ந்து ஏனைய உயிரினங்களால் சில நேரம் தீங்கேற்பட்டாலும் மரங்கள் எந்தத் தீங்குமிளைக்காமல், நூறு வீதம் எமக்குப் பயன்பாட்டை மாத்திரமே தருக்கள் தருகின்றன.

பூமியைச் சமநிலை யாகப் பாதுகாத்துக் கொண்டிருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமும், நீரும், காற்றுமாகும். நாம் சுவாசிக்கின்ற வளியைச் சுத்தமாக்கிச் சலித்துத் தரும் இயற்கையின் சக்திதான் மரங்கள், வளியிலுள்ள அசுத்த ரகமான காபனீரொட்சைட்டை மரங்கள் சுவாசிப்பதால், வளி தூய்தாகிறது. மரங்கள் வெளிவிடும் ஒட்சிசன் எமது உயிர் வாழ்வுக்கு அத்தியாவசியமாகிறது. அவ்வாறான மரங்களைச் சேதமாக்குவது அறிவீனம். அவற்றை அழியாது கட்டிக்காப்பது அனைவர் மீதும் கடமையாகும்.

அண்மைக் காலத்தில் பல தினங்களாக அமேசன் காடு தொடர்ந்து எரிந்தது. அதனால் அளவற்ற மரங்கள் அங்கே அழிந்து சாம்பலாயின. வன விலங்குகள் மடிந்தன. சுற்றுச் சூழல் மாசடைந்து மக்களைத் திக்குமுக்காட வைத்தது. அமேசன் காட்டிலிருந்து எத்தனையோ வகையான தாவரங்கள் மனிதனுக்கு மருந்தாக உபயோகப்படுகின்றன. இத்தகைய வளம் மிக்க வனங்களின் சிதைவு மனிதனாலேற்படுத்தப்பட்ட பாதிப்புக்கள்.

அவுஸ்திரேலியாவின் நியு சவுத் வேல்ஸ் மாநிலத்தில் ஏற்பட்ட காட்டுத் தீ அணைக்க முடியாதளவுக்கு ஒரு மாதத்துக்கும் கூடுதலான நாட்கள் எரிந்து கொண்டிருந்தது. அதனைத் தொடர்ந்து அடுத்த மாநிலத்தையும் சேர்த்து எரித்தது காட்டுத் தீ. காட்டிலே ஏற்பட்ட தீயை அணைப்பதென்பது இலகுவான காரியமல்ல. அது ஏற்படுவதற்கு முன்பாகக் காப்பதற்கு வழியமைக்க வேண்டும். இவற்றை அறிந்த எல்லா நாடுகளுக்கும் இது ஒரு படிப்பினையாய் இருக்க வேண்டும். வெள்ளம் வரு முன் அணை கட்டவேண்டும். அன்றேல் அது



288284
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடையைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கையில் அணை போட்டால் நின்றுவிடுமா? வருமுன் காப்பவனே குரு. வாழ்க்கையின் சீவராசி தரு.

பூமியின் சம நிலைத் தன்மையில் மாற்றமேற்படும்போது உயிரழிவு, பொருட் சேதங்களெல்லாம் கூடிச் செல்லும். அதனால், மரங்களை நட்டிப் பசுமையை இன்னும் அதிகரிக்கச் செய்ய வேண்டும். உணவுக்காகப் பயன்படும் பயிர்களையும் பயிரிடலாம். இயற்கையழிவுகளுக்குப் பிரதான காரணி வெப்ப நிலையதிகரிப்புத்தான். அடர்ந்த வனங்களிலிருக்கும் மரங்களை வெட்டியழித்து வீடுகள், தளபாடங்கள் அமைப்பதற்காகப் பயன்படுத்துவதைக் குறைத்து, அதற்குப் பதிலாக கல்வனைஸ், இரும்பு போன்றவற்றை உபயோகித்து வீட்டுக் கூரைகளமைக்கலாம். பிளாஸ்ரிக்கில் இப்போது தேவையான அளவு தளபாடங்களைத் தயாரிக்கிறார்கள். இவை பாரம் குறைவாயிருப்பதால் பாவனைக்கும் இலகுவானது. அதனால், மரங்களை வெட்டுவதைக் குறைத்துக் கொள்ளலாம். சட்ட விரோதமாக மரங்கள் கடத்துவதையும் நிறுத்தலாம்.

ஒவ்வொரு வீட்டுத் தோட்டத்திலும் மரங்களை வளர்த்துக் கொள்வதால், வெப்பத்தை ஓரளவு கட்டுப்படுத்தலாம். நாட்டின் வெப்ப நிலையைச் சமப்படுத்தி மழையைக் காலந்தோறும் பெற்றுத் தருவதற்கு வனம் ஒரு வளமாக இருக்கிறது. அத்தகைய வன வளத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். அழலாய்க் காயும் வெயிலை ஐதாக்கி நிழலாய் வழங்குவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகரில்லாத் தரு. தெரு வழியின் இரு சாரலிலும் இருக்கும் தருக்கள் பிரயாணிகளுக்குப் பிரதான கரு.

மனித வாழ்வின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் வெவ்வேறு வடிவமாய் வருகை தந்து உதவும் மரங்கள் நிறைந்த வனவளம் எல்லா உயிரினங்களுக்கும் வளம். உணவாக, உடையாக, உறையுளாக மட்டுமல்ல, மருந்தாகவும் மாறி மாறிப் பல விடயங்களுக்கும் கைம்மாறு கருதாமல் கைகொடுக்கும் மரம், அவை அடங்கிய வனங்கள், அழிந்துவிடாமற் பாதுகாத்தால் பொழிந்து வழங்கும் மழையை.

பயிர்களை வளர்ப்பது உயிர்களைக் காப்பதற்குச் சமனானது. மனிதன் கொடுப்பதை இடைநிறுத்தினாலும், மரங்கள் நிறுத்தாமற் கொடுக்கும். மனிதன் கொடுக்கும்போது மனம் கோணலாம் ஆனால் மரங்கள் மனம் கோணாமலே கொடுக்கும். மரங்களின் கொடை மகத்துவம் மிக்கவை. பறவைகள் வீடமைக்கவும், பள்ளி கொள்ளவும் அடைக்கலம் வழங்குகின்றது.

வனங்கள் அழிவதால் வன விலங்குகளும் அழிகின்றன. வன விலங்குகள் மாத்திரமல்ல வளர்ப்பு மிருகங்களையும் சுட்டுக் கொல்லும் நிலையையும் உருவாக்கினர். நாட்டில் ஏற்பட்ட காட்டுத் தீயினால் நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டதும் ஒட்டகைகளைக் கொல்லும் முயற்சிக்குத் தள்ளப்பட்டனர். எனவே, உயிர்களை வதைக்கும் நிலை உருவாகாமற் தடுப்பதற்கு முன்னெச்சரிக்கையுடன் வன வளங்களைக் காப்போம். தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டிருக்ம் தன்னிகரில்லாத் தருக்களைப் பாதுகாப்போம், பயிரிடுவோம், பயன்பெறுவோம்.

எம்மை மனிதமாய் வளர்ப்போம்
எல்லா உயிர்களையும் மதிப்போம்.

01. வளி - காற்று
02. மடை - நீரணை
03. குரு - அறிவுள்ள ஆசான்
04. கைம்மாறு - பிரதியுபகாரம்
05. சீவராசி - உயிர்த் தொகுதி
06. அழல் - நெருப்பு

—✶—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18

# அழுக்ககற்றுவோம்

இன்று நம் நாட்டில் கழிவுகள் அதிகரித்துச் செல்கின்றன. இதனால் பாரிய எதிர்விளைவுகள் ஏற்படுகின்றன. இதற்குப் பிரதான காரணம், கழிவுகள் கிரமமான முறையிலும் பூரணமாகவும் அகற்றப்படாததே, இன்று நாளுக்கு நாள் குப்பைகள் கூடிக்கொண்டே வருகின்றன. அவற்றையகற்றும் வழிகள் குறைந்து கொண்டே வருகின்றன. இதனால் சூழலின் பல இடங்களிலும் பரவலாகக் குப்பைகள் கொட்டப்படுகின்றன.

அதனால், கால் நடைகள், உயிரினங்கள் குப்பைகளில் உள்ளவற்றை உண்பதால், நுண்ணுலங்களாற் பாதிக்கப்பட்டு உயிரிழக்கும் நிலையையடைகின்றன. மனிதர்களும் சுற்றுச் சூழலின் அழுக்கால் மாசுற்ற காற்றைச் சுவாசித்து நோயுற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்கின்ற சந்தர்ப்பங்கள் ஏராளம். இதனை நிவர்த்திக்க முறையாகக் கழிவகற்றும் நிலை துரிதப்படுத்தப்பட வேண்டும்.

வீடுகளிற் சேரும் கழிவுகளைப் புதைத்தும் சுத்தமாக்கலாம். அரசாங்கத்தால் குப்பைகளை ஏற்றுவதற்கு அனுப்பப்படும் குப்பை வண்டிகளில் போட்டும் சுத்தமாக்கலாம். தற்போது பிரதேச சபை, நகர சபை, மாநகர சபைகளிலிருந்து குப்பை வண்டிகளை உபயோகித்துப் பாதையோரக் கழிவுகள், வீடுகளிற் சேருங் கழிவுகளை ஒழுங்கு முறையாக அகற்றுகிறார்கள். ஆனால் கழிவகற்றும் தொழிலாளர்களின் அசிரத்தையால் (கவனயீனத்தால்) குப்பைப் பொதிகள் வீதியோரத்தில் கவனிப்பாரற்றுக் கிடப்பதால், பொதிகளைக் கால் நடைகள், நாய்கள் குதறி அவ்விடத்தையே அசுத்தமாக்கி விடுகின்றன. அதிலிருந்து துர்நாற்றம் எடுக்கிறது. இதற்கு நகர சபை மேலதிகாரிகள் மேற்பார்வையிட்டுச் சீராகக் கழிவகற்றல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, இக் கழிவுகளை எடுத்துச் சென்று குவிக்கும் இடமும் அந்தச் சூழலும் பாதிக்கப்படுகின்றன. மனித சஞ்சாரமற்ற தாழ்வான நிலங்களிற் குவித்து உடனே மூடி விடலாம். அல்லது இதற்கெனக் கழிவெரிக்கும் கட்டிடமொன்றை ஒவ்வொரு மாநகர சபை அமைப்பின் கீழும் அமைத்து புகை மேற்செல்லக்கூடிய உயரமான புகைக்குழாய்களை அதில் அமைத்துத் தினமும் சேரும் கழிவுகளை உடனுக்குடன் எரித்துவிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபோன்று இரசாயனக் கூட்டுப் பசளை தயாரிக்கும் முறையிலும் கட்டிடங்களை அமைத்து வழிவகைகளை ஏற்படுத்தலாம். கழிவகற்றும் தொழிலாளர்கள் தேவையான அளவு நியமிக்கப்பட வேண்டும். குறைந்த தொழிலாளர்களை மட்டும் நியமித்தால் பூரணமாக வேலை முடிந்திராது. சுழற்சி முறையாகத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவதால் வேலைகளை முடிக்கலாம். ஆனாலும் அவசியம் மேற்பார்வை தேவை.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கழிவகற்றல் முறை எவ்வாறு நடைபெறுகிறதோ, அந்த வழிகளை நம் நாட்டிலும் நடைமுறைப்படுத்தலாம். குடியிருப்பற்ற பள்ள நிலங்கள் எவ்வளவோ நம் நாட்டில் காணப்படுகின்றன. அவற்றில் இக்கழிவுகளையிட்டு நிரப்பி மேலால் மணலிட்டுக் குடியிருக்கும் தரையாக ஆக்கி மக்களைக் குடியிருக்க வைக்கலாம். இதனால் நெருக்கமான குடியிருப்பு இடங்களிலிருப்போர்க்கு ஏற்றதும், செறிதலற்றதுமான இடப்பரப்பு வசதியும் தோன்றும். மக்களின் குடியிருப்பு நாடு முழுவதும் பரவலாகியிருக்கும். கைத் தொழிற்சாலைகளையும் அங்கே அமைத்து வேலை வாய்ப்புக்களையும் ஏற்படுத்தும் போது மக்கள் சுமுகமான வாழ்க்கையை வாழ்வர். அழுக்ககற்ற எடுக்கும் நடவடிக்கை அருகிலுள்ள மக்களையும் வாழவைக்கும்.

எமது செயல் முறைகள் சீராய் அமைகின்றபோது அழுக்குகள் அதிகம் வந்து சேர்வதற்கு வாய்ப்பிருக்காது. முரண்பாடான முறைகளைக் கையாண்டு வாழும்போது முடிவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து குவிவதெல்லாம் அழுக்காகத்தானிருக்கும். எம்மைச் சூழவுள்ளவர்களுக்குத் துர்நாற்றம் வீசக்கூடிய, அழுக்குகளை நாம் சேகரிக்கும் போது முதலில் பாதிப்படைவது, அழுக்கை உருவாக்கிச் சேமித்து வைத்திருப்பவர்கள்தான். எனவே,அனாவசியமாக உருவாக்கும் அசிங்கங்களை முற்றாகத் தவிர்த்துக் கொள்ள முயல வேண்டும்.

சேகரித்த அழுக்கைச் சீராக அகற்றுவதற்கு எமது வீட்டுக்காணியில் பெரிய குழியொன்றை அகழ்ந்து வைக்கலாம். அதில் குப்பைகளையிட்டு, வாரமொருமுறை எரித்துவிடலாம். அதனிடையில் கிருமி நாசினியைத் தினமும் குழியில் தெளிக்கலாம். சூழலிலுள்ள அழுக்குகளிலிருந்துதான் கிருமிகள் பெருகி, மலேரியா, டெங்கு, சுவாச நோய்கள் போன்றவை உருவாகி மரணங்களையும் ஏற்படுத்துவதை நாம் தெளிவாகக் காண்கிறோம். எனவே, இவற்றைப் படிப்பினையாய்க் கொண்டு இருக்கும் இடங்ளையும், சூழலையும் சுத்தமாக வைத்திருப்போம்.

சுற்றமும் வீடும் சுத்தமாயிருந்தால்
சுகத்துக்கு ஈடு ஏது.

01. கிரமமான - ஒழுங்கான
02. மாசு - அழுக்கு
03. குதறுதல் - கிண்டுதல், சிதறுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. செறிதல் - நெருங்குதல்
05. குவிதல் - ஒரு முகப்படுதல்
06. அகழ்ந்து - தோண்டி
07. ஈடு - ஒப்பு

—★—

13930 cc



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19

# இளஞ் சிறாரும் இரட்சிப்பும்

உலகின் நாடுகளிலுள்ள வீடுகளில் தொண்ணூறு வீதமானோரின் இல்லங்களில் சிறுவர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சிறுவர்கள் மனைகளில் மட்டுமல்ல எல்லா மனங்களிலும் வாழ்பவர்கள். இன்றிருக்கும் சிறுவர்கள் நாளை, தலைவர்களும் பெரியோர்களுமாக ஆகிவிடுவார்கள். விதைக்கப்படும் விதைகளில் மாசு மறுவற்ற தூய்மை காணப்பட வேண்டும், அதிற் களங்கங்கள் தொற்றிக் கொள்ளாமற் காத்தெடுக்க வேண்டும். அன்றேல், அது வளரும்போதே பங்கமேற்பட்டு, நேர்த்தியான பூரணத்தன்மையற்றுக் காணப்படும். அதிலிருந்து பெரும் பயன்களும் முற்றாக மழுங்கி விடும். சிறுவர்களின் வாழ்க்கையும் இதே தன்மை வாய்ந்ததுதான். அதனால், சிறுவர்களின் பராமரிப்பு மிக மிக அவதானமாயமைய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளந் தளிரை எப்பக்கம் வளைத்துத் திருப்பி அமைத்து விடுகிறோமோ அப்பக்கம் வளைத்த திசை மாறாமல் அது வளர்ந்து வரும் இது போன்று ஏதுமறியா இளஞ்சிறார்களை நல்வழிகாட்டித் தொழிற்படவைப்பது நம் பெரியவர்களின் கடமை. எந்த நாட்டிலும் சிறுவர் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்கான உரிமைகள் ஒருபோதும் மறுக்கப்படக் கூடாது. அதற்காக அவர்கள் நடந்து கொள்ளும் வழிமுறை கேடானதாகவிருந்தால்,அதற்கும் உரிமை கொடுக்க வேண்டும் என்பதல்ல.அவ்வழிகேட்டிலிருந்து அவர்களை நன்னெறிப்படுத்தி அழைத்துச் செல்ல வேண்டும்.

உரிமையென்பது அவர்களது கல்வி,விளையாட்டு போன்றவைகளாகும். அவர்கள் கல்வியை எந்தத் துறையில் கற்பதற்குக் கரிசனமும் திறமையுங் காட்டுகிறார்களோ, அதற்குத் தடை போடாமல் அவர்கள் விரும்பும் துறைகளிலேயே விட்டு விட வேண்டும்.அத்துறைக்கு ஏற்றவாறு ஒத்துழைப்பை வழங்கி அதில் உயர்வடையச் செய்ய வேண்டும்.இது தான் நாம் அளிக்கும் ஊக்கம்.இது போல விளையாட்டுக்களில் ஒவ்வொருவருக்குமுள்ள திறமை எந்த விளையாட்டைச் சார்ந்திருக்கும் என்பது எமக்கு விளங்கும்.பிள்ளைகளால் முடியுமானதையே சுமக்க முற்படுவார்கள்.அதற்குத்தான் நாமும் ஆதரவு வழங்க வேண்டும்.அவர்களால் முடியாததைச் செய்யுமாறு கட்டாயப்படுத்தும் போது அவர்களுக்கு அதில் விரக்தி ஏற்பட்டு விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழையான வழிகளைப் பக்குவமாக எடுத்துரைத்து நேர்வழியை நாடிச் செல்லத் தக்கதாய் அவர்களை உருவாக்க வேண்டும். அன்புடன் அரவணைக்கும் பெற்றோரும் ஆசான்களும் பண்புடன் பல நல்லறிவுகளைப் புகட்டலாம்.பாசமும்,நேசமும் அரவணைப்பும் தேடிப் பரிதவிக்குஞ் சிறார்களை நாங்கள், கடின வேலைக்குட்படுத்துதல், கொடிய செயல்களால் துன்புறுத்துதல், துர்நடத்தைகட்குத் திசை திருப்புதல் போன்ற கொடுந் துயர்களை அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது.

துஷ்பிரயோகம் என்ற பதம் துஷ்ட ஆளுகை என்பதாகும். அதனால் துஷ்டர்கள் கையாளும் துஷ்ட ஆளுகையைத் தூர விலக்கித் தூய பார்வையோடு சிறுவரை நோக்க வேண்டும். அவர்களுக்காகப் பரிதாப உணர்வு கொண்டு பக்குவமாய் நடந்து கொள்ள வேண்டும். சின்னஞ் சிறியவர், சிட்டாய்ச் சிறடிகத்து வண்ணமாய் மலரும் அரும்புகள். நல்லவை, தீயவை அறியாத பருவங்கள். அதனால் அவர்களுக்கு அன்பையுங் கருணையையும் அள்ளி வழங்கி நலமாய் நடாத்துவோம்.

அடைக்கலமாய்த் தந்த இறையின் குழந்தைகளவர்கள்; படைப்பினங்களில் உயர்ந்த மழலைகள், பாதுகாத்து வளர்க்கும் பருவப் பிஞ்சுகள்; எனவே பேணிக்காப்பது பெரியோரின் கடமைகள். பசுமை தவழுகின்ற பச்சிளம் பாலகரைப் பார்க்கையில் கொடியவரின் கடிய மனம் நொடிப் பொழுதில் நெகிழ்ச்சி பெற்று மனமிரங்கத் துணிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளஞ்சிறார்களைத் துன்பத்துக்குட்படுத்தாது இரட்சிப்புக் கொடுக்க வேண்டும்.

"உண்மைகள் பேச வேண்டும், நன்மைகள் செய்ய வேண்டும், உள்ளத்திற் தூய்மை வேண்டும்." என்று கூறி ஊக்கப்படுத்தவும் வேண்டும். "நேர்மைகள் எல்லாச் செயல்களிலும் இருந்து வந்தால், நாளை நல்லோர் வரிசையில் நாட்டில் போற்றப்படுவீர்கள். அதனால் வீண் வேலை விட்டு விலகி, வேண்டாதவைகளை விலக்கி வாழப் பழக வேண்டும். என்பதையெல்லாம் சிறார்களுக்கு ஏற்ற விதத்தில் சாதுரியமாய்க் கூறி விளக்கலாம். அவ்வாறு கூறும்போது அவற்றை விளங்கி ஏற்று நடக்கும் தன்மையை நிச்சயம் அவர்களிற் காணலாம்.

இதை விடுத்து, அவர்களின் வாழ்க்கையுயர்வுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் செயல்களைத் தவிர்த்துக் கொள்வதே நாம் அவர்களுக்குக் கொடுக்கும் சுதந்திரம். எதிர்காலத்திற்குப் பொருத்தமானவர்களாக இளையோரை உருவாக்கியதாற்தான் இன்று எத்தனையோ நற்பெரியார்கள் நம் சமூகத்தில், நாடு போற்றும் நல்லவர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மானிடவியல் செயற்பாடுகளுக்கு மகத்தான படிப்பனையாக இதனைக் கருதினால், இன்றையச் சிறார்களை எதிர்காலத்தின் நற் பிரஜைகளாக ஆக்கி விடலாம் என்பதே உண்மை.

சிறியோரையும் வறியோரையும்
சிந்தை கனிந்து நோக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. இரட்சிப்பு - காப்பாற்றுதல், உய்வித்தல்
02. மாசுமறு - குற்றங் குறை
03. நன்னெறி - நல்லொழுக்கம், நல்வழி
04. கரிசனம் - சிரத்தை
05. சாதுரியம் - சாமார்த்தியம்
06. இடைஞ்சல் - தடை

—∗—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20

# இளமையின் இரகசியம்

மனிதன் எந்தச் செயற்பாட்டிலிறங்கவேண்டுமோ, அங்கே உடற்றொழிற்பாடு அவசியம் தேவைப்படுகிறது. உடல் ஆரோக்கியமாக இருந்தாற்தான் ஒழுங்காகத் தொழிற்படும். உடற்பயிற்சி செய்து உடலை ஆரோக்கியமாய் வைத்திருங்கள் என்று எல்லா வைத்தியர்களும் கூறுகிறார்கள்தான் ஆனால், எம்மில் ஒரு சிலரைத்தவிர ஏனையோர் எந்த உடற்பயிற்சியையும் உடன் கொள்வதில்லை அதற்குப் பதிலாக நித்திரையை நிரம்புதலாய் வைத்திருக்கிறார்கள்.

இவர்கள் ஐம்பது வயதைத் தாண்டிவிட்டால் நிலத்தில் கால் மடித்து உட்கார இவர்களால் முடிவதில்லை. கதிரை தான் தேவைப்படுகிறது கதிரையிலும் சிறிது நேரம் உட்கார்ந்தால் உடனே எழுந்து நிற்க முடியாமல் இடுப்பை



288284

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிர்த்துவதற்குத் தடுமாறுவார்கள். ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் செய்யும் வேலைகள் போல் சிறு சிறு வேலைகளை மட்டுந்தான் அவர்களால் செய்ய முடியும். அப்பப்பா! அவர்கள் படும் வேதனை ஒன்றிரண்டல்ல. பார்ப்பதற்கே பரிதாபம்.

உடற்பயிற்சியைப் பழக்கப் படுத்திக் கொள்வதன் இரகசியம் என்னவென்பதை அவர்கள் அறிவதில்லை. நாம் உட்காரும்போதோ, நடக்கும் போதோ எமதுடலில் ஏற்படும் சடிதியான ஒரு அசைவின்போது திடீரென உடலின் பாகங்களில் தாக்கம் ஏற்படுகிறது. அப்போது தசைப்பிடிப்புக்கள் அல்லது நரம்புத் தாக்கங்கள் ஏற்படுகின்றன. ஆனால் வழமையாக நாம் உடற்பயிற்சி செய்வதன் நன்மையால் உடலைப் பல பக்கங்களுக்கும் சுழற்றிக் கொள்வது இலகுவாயிருக்கும். எனவே, சடிதியாக உடலின் பாகங்களைத் திருப்பிக் கொள்ள, மடிக்க நிமிர்த்த முடியுமாயிருக்கும். சிரமம் தோன்றாது.

அதுபோன்றுதான், வேலைகள் செய்யும் வேளையிலும் கை, காற் பிடிப்புக்கள், உடற்பயிற்சி செய்து வருபவர்களுக்கு ஏற்படாது குனிந்து பொருட்களைத் தூக்குதல், குனிந்து நிமிர்ந்து வேலை செய்தல் போன்ற செயற்பாடுகளின் போதும் சிரமம் இருக்காது. உடற்பயிற்சி செய்யாதவர்கள் இவ்வாறான செய்கைகளின் போது மிகுந்த சிரமப்படுவதுடன் முற்றாக இவ்வேலைகளைச் செய்வதிலிருந்து விலகியிருப்பார்கள். அறுபது எழுபது வயதானவுடன் இருந்த இடத்திலே உட்காந்து கொள்ளல், அல்லது படுக்கையிற் கிடத்தல் போன்ற வற்றுக்குத் தள்ளப்படாமல், தத்தமது தேவைகளைத் தாமே செய்து கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமாயின் முன்கூட்டியே உடற்பயிற்சி செய்து உடலைப் பழக்கப்படுத்தி வைத்திருங்கள்.

தேகாப்பியாசம் செய்வதுதான் உடற்பயிற்சி என்பதல்ல, தினமும் அரை மணித்தியாலம் நடக்கலாம், அல்லது தினமும் நாலைந்து தடவை மாடிப்படி ஏறி இறங்கலாம். அல்லது, தினமும் அரை மணித்தியாலம் தரையை விளக்குமாறால் கூட்டலாம். அல்லது வீட்டுத் தோட்ட வேலைகள் செய்யலாம். இவை உடல் சமநிலை அப்பியாசங்களாக அமையும். இதுபோன்று முழு உடலும் தொழிற்படக் கூடியவாறு வெவ்வேறு வேலைகளில் ஈடுபடலாம். இதனால் உடலுறுப்புக்கள் பயிற்றப்பட்டு நன்கு குனிந்து நிமிர்ந்து வேலை செய்ய உடல் வளைந்து கொடுக்கும்.

உடலைத் தொழிற்படுத்தாது சொகுசாக வைத்துக் கொண்டு தேவைக்கதிமான உணவு வகைகளையும் உண்டு வருவதால் உடல் புசு புசு வென்று கொழுத்துவிடுகிறது. இதனால் நடமாடுவதற்கும் சிரமம். அதுதான் வயதானவரைப் போல் தெரியும். வழமையான உடற்பயிற்சியுள்ளவன் இளமையான தோற்றங் கொண்டிருப்பான். அதற்காக அளவுக்கதிகமாகவும் அதில் ஈடுபடக்கூடாது. அளவு கடந்த உடற்பயிற்சி உருக்குலைந்த உடலை உருவாக்கும்.

வளர்ந்தவர்கள் மாத்திரமல்ல, எல்லா வயதினரும் ஆண், பெண்களும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். மூட்டுக்களில் அல்லது உடற்தசைகளில் சுழுக்கு அல்லது வேறு அசாதாரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையேற்பட்டால் வைத்தியரிடம் செல்கிறோம். அவர்கள் இந்த உறுப்பை இலகுவாக அசைக்க முற்படும் போது நாம் பயிற்சி செய்து வந்த பழக்கத்தால் அது இலகுவாகி விடுகிறது. அன்றேல், பெரும் அவஸ்தைக் குள்ளாக வேண்டி வரும் "ரோபோ"வை விட மோசமானவர்களா நாம். முயலுங்கள் முன்னேறலாம்.

ஆரோக்கியமான வாழ்வுக்கு அத்தியாவசியமானது உடற் பயிற்சியும், போசாக்குள்ள உணவு வகைகளுந்தான். இது நான் சொல்லாமலே நீங்கள் தெரிந்த விடயந்தான். சரிதானே! அதனால் உடற்பயிற்சி செய்யுங்கள். உடற்பருமனாகயிருப்போரும் வயிறு தொந்தியாயிருப்போரும் உடற்பயிற்சி செய்யச் சற்றுமே விரும்பார். அதிகமானோர் இருபத்தைந்து முப்பது வயதுவரை அளவான பருமனுடன் உடற்கட்டாய் நல்லாரோக்கியத்துடன் உலவுவர். திருமணப் பருவ வயதல்லவா அது. மணம் முடித்துக் கொண்டால் மட்டுக்கு மேற்பட்ட விஷேட உணவுகள் வந்து குவியும். மகிழ்ச்சியாய் உண்டு முடிப்பார்கள் எண்ணெய்வகை, இனிப்புவகை உணவுகள், ஒருசேர உடற் பருமனடைந்து, படிப்படியாகத் தொந்தியும் வளர்ந்து, ஓமோனும் சுரப்பதால், உருப்படுதலாய் இருந்த உடற்கட்டு உருண்டோடி விடுகிறது.

அலங்காரமும் உருசியும் தென்பட்டாலும் அளவோடு உண்ணுங்கள், கண்ட கண்ட பொழுதெல்லாம் கவர்ச்சியாய் உணவுவரும். "உண்டவன் உரம் செய்வான்" என்று உற்சாகமூட்டுவார்கள். ஜாக்கிரதை! ஒன்றிரண்டை உண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதியை ஒதுக்கி விடுங்கள். அந்த வயதில் உங்களுக்குத் தேவையான கலோரி 2400 தான் அதற்கதிகமாய் உட்கொள்ளாதீர்கள். இதயம் உணவின் ஆவலை வளர்த்தால் வயிறு தொந்தியை வளர்த்துவிடும். கவனம்! ஆசை இருக்க வேண்டும் அளவோடுதான். அதனை மீறினால் அழிவுதான். அழகாயிருந்த கட்டுடல் அழிந்து அம்மிபோல் ஆகிவிடுகிறது. ஐயோ! அளவோடு உண்ணுங்கள், அதைப் போசாக்குள்ளதாய் உண்ணுங்கள்.

காணும் தேவையற்ற உணவுகளையெல்லாம் ஆவல் கொள்ளாமல் இதயத்தைப் பேணிப் போசிப்பதாலும், இனிமையாய் எல்லோரையும் நேசிப்பதாலும் ஆரோக்கியத்துடன் இளமையாய் வாழலாம்.

எண்ணெயில் பொரித்த உணவுகளையும் இறைச்சி வகைகளையும் குறைத்துண்ணப் பழக வேண்டும். அதற்குப் பதிலாகப் பழவகைகளையும், மரக்கறி வகைகளையும் அதிகமாயுண்ணலாம். உடலுக்குத் தீங்கு தரும் கொழுப்புக்களான (HDL) பொரித்த உணவுகள், மாஜரின், சீஸ், பீட்சா, கிறீம், இறைச்சி போன்வற்றை 20%மும், நன்மை தரும் கொழுப்புக்களான (LDL) நிலக்கடலை (கச்சான்) மீன்கள், அவகாடோ போன்றவை 80% மும் சேர்க்கலாம். ஆனால் நாம் உண்ணும் உணவின் முழுப் போசனைப் பெறுமான வீதங்களில் கொழும்புணவு 15% மட்டுமே இருக்க வேண்டும். நாம் உண்ணும், தேவைக்கு மேலதிகமான காபோவைதரேற்றும் கொழுப்பாக மாறுகிறதென்பதையும் மறந்து விடக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவான கொழுப்பு உடல் அழகையும், ஆரோக்கியத்தையும் தரும்.

சாதாரண உடல்நிறை சற்றுக் கூடும் அறிகுறி தென்படும்போதே உடனுக்குடன் குறைத்துக் கொள்ள வேண்டும். பின்போட்டால் தசை பிடித்து, உடல் பருத்துக் குண்டாக வரநேரும். அதற்கு, வழமையாய்ச் செய்யும் பயிற்சிகளைச் சற்றுக் கூட்டிக் கொண்டு கொழுப்புணவைக் குறையுங்கள். ஒரு மாத எல்லையினுள் முன்பிருந்த கட்டுடலைப் பெறுவீர்கள். குண்டர்களைப் பார்க்கும் போது படிப்பினை பிறக்கட்டும். உடல் ஆரோக்கியமான இளமையின் இரகசியம் உடற்பயிற்சியும், பழங்களும், மரக்கறிகளுமே என்பதை மறந்துவிடாதீர்கள்.

அகம் இழுக்கின்றி இருந்தால்
முகம் இளமையாய் இருக்கும்.

01. நிரம்புதல் - நிறைதல், மிகுதல்
02. மட்டு - அளவு, மிதம்
03. ஒரு சேர - ஒப்பற்றுச் சேர
04. உருப்படுதல்- சீர்படுத்தல்
05. கலோரி - உடல் உஷ்ணத்தின் மூல அளவை அலகு
06. இழுக்கு - பொல்லாங்கு, இகழ்ச்சி, குற்றம்

—*—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21

# ஒரு இலக்கிய கர்த்தாவின் எண்ணக்கரு

பூமிநாதன் : வணக்கம்,நான் பூமிநாதன் சுருக்கமாக என்னை நாதன் என்றழைப்பார்கள். க.பொ.த சாதாரண தரம் படிக்கிறேன். யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவன். உங்களது இலக்கியத்துறை பற்றிச் சற்று நேர்காண வந்திருக்கிறேன்.

வரதராசன் : அப்படியா? வணக்கம் நான் வரதராசன். என்னை வரதன் என்று சுருக்கமாக அழைப்பார்கள். என்னிடம் அறிந்து கொள்ள வந்ததைக் கேளுங்கள்.

பூமிநாதன் : நீங்கள் மிக்க ஆற்றலும், பிரபலமும் வாய்ந்ததோர் இலக்கிய கர்த்தா, இலக்கிய உலகில் நிறைந்த பங்காற்றியுள்ளீர்கள். இதுவரை நூற்றை அண்மித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களை எழுதிச் சாதனை படைத்துள்ளீர்கள். உங்களது தொழிலையுஞ் செய்து கொண்டு இலக்கியத்துறையிலும் மிக ஆர்வமாய் ஈடுபடுகிறீர்கள். இதற்கு முக்கிய பங்களிப்புச் செய்தவர்கள் யார்? எப்போதிருந்து இலக்கியத் துறையில் ஈடுபாடு தோன்றியது? என்பதையெல்லாம் கூறுங்கள்.

வரதராசன் : நான் க.பொ.த சாதாரண தரத்திற் படிக்கும் போதே எழுத ஆரம்பித்தேன். எனது எழுத்தின் ஆரம்பம் கவிதையாகத்தானிருந்தது. ஏனென்றால், எனது தந்தையும் ஒரு பிரபலமான கவிஞராக இருந்ததால், அவரடியொற்றி எனக்கும் எழுத வாய்ப்பேற்பட்டது. இப்போதவர் இறையடி சேர்ந்து விட்டார். கவிதையிலே ஆரம்பித்த என் எழுத்து, கவிதை நூல்களையும், சிறு கதைகள், கட்டுரைகள், தொகுப்பு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் எனத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

பூமிநாதன் : உங்களது எழுத்துக்களின் கருப்பொருள் என்ன? எவ்வகையான நூல்களை எழுதியுள்ளீர்கள் என்பதைக் கூறுங்கள்.

வரதராசன் : என்னிதயத்தினடி நாதமே சமூகச் சீர் திருத்தந்தான். நேர்மையை மதிக்க வேண்டும் சமூகம்; நீதிக்காய் ஒலிக்க வேண்டும் மனித நாதம்; உயிர்களைத் தொட வேண்டும். அவர் நேயம். என்பதை மையமாக வைத்துச் சமூகம் தம் வாழ்வியலைத் தொடர வேண்டும் என்பதுதான் எனது முக்கிய குறிக்கோள். பாடசாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி பயிலும் மாணாக்கரிலிருந்து, பாமர மக்கள் வரை வாசித்து, நன்குணர்ந்து வாழ்வோடதனைச் செயற்படுத்தக்கூடிய வழியில் அவற்றை எழுத்தாக்கம் செய்திருக்கிறேன்.

பூமிநாதன் : பேராற்றலோடு தொழில் புரிந்தால் பெரிய வளம் திரண்டுவரும் என்பதால், இலக்கியத் துறையிலிருக்கும் அதிகமான எழுத்தாளர்கள், இன்று பணம் சம்பாதிக்கும் நோக்கத்தோடுதான் பல் நூல்களை ஆர்வமாய் எழுதி வெளியிட்டு விற்பனைக்குட்படுத்துகிறார்கள். இவ்வாறிருந்தும் இலக்கிய உலகின் இன்றையப் போக்கைச் சீர் தூக்கிப் பார்த்தால் அநேகர், வாசிக்கும் பழக்கத்தையிழந்துவிட்டனர். படித்தவர்களில் அதிகமானோர் கூட இப்போது வாசிப்பதில்லை. ஏனென்றால் இலத்திரனியல் ஊடகங்களின் தொழிற்பாட்டால், அதிலிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். தகவல்களைப் பரவச் செய்கிறார்கள். இந்த நவீன சாதனங்கள் உருவாகியிருக்கின்ற காலத்தின் மத்தியிலும் எவ்வாறு நூல் வாசிப்புச் சாத்தியமாகும்? கூறுங்கள்.

வரதராசன் : இலக்கிய உலகின் இன்றையப் போக்கு ஊடகங்களால் வீழ்ச்சி பெறலாம் என்ற நோக்கு சிலரிடத்திலிருக்கலாம். ஆனாலும், எழுத்துத் துறை எப்போதும், தம்பித்து நிற்குந் தன்மை வாய்ந்தது. புதிது புதிதாகவும், வேகமாகவும், விவேகமாகவும் எழுதி வெளியிட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள். மட்டுமல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுப்புது எழுத்தாளர்களும் தலைமுறைகளைத் தக்க வைக்கும் விதமாக எழுதிக் கொண்டுதானிருக்கின்றனர்.

ஊடகங்களிலுள்ள தகவல்களைப் பாதுகாத்து வைப்பதில் பாரிய பொறுப்புணர்ச்சி தேவை. ஆனால்,நூல்கள் வடிவம் மாறாமல், தகவல் மாறாமல், அழியாமல் எத்தனை வருடங்களுக்கும் சேமித்து வைக்கலாம். விளக்கங்கள் விபரமாய்த் திரட்ட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும் போது நூல்கள்தான் நூறு வீதம் உதவுகின்றன. ஊடகங்கள் அவ்வாறல்ல. சுருக்கமான தன்மை கொண்டிருக்கும். எனவே, மானுட வர்க்கம் பெருகிக் கொண்டு வரும் இன்றைய உலகில் இலக்கியச் செழுமையும் பெருக்கெடுத்துப் பாய்வது எவராலும் தடுத்து நிறுத்த முடியாதது. என்பது இன்றும் உணரப்படுகிறது. இனிமேலும் உலகம் உள்ளளவும் இலக்கியம் மங்காது. மடியாது, மேலும் பிரவாகமாய்ப் பீறிட்டுப்பாயும்.

பூமிநாதன் : இது வரையில் இலக்கியத் துறையில், நீங்கள் சாதித்தவைகளைக் கூற முடியுமா?

வரதராசன் : ஆறடிக் கவிதையோடு ஆரம்பித்த என் எழுத்து ஆல்போல் கிளை பரப்பி சில கவிதை நூல்களையும் வெவ்வேறு துறைகள் சார்ந்த பல நூல்களையும் மொத்தமாகத் தொண்ணூற்று நான்கு நூல்கள் எழுதியுள்ளேன். இன்னும்எழுதிக் கொண்டுதானிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு சாகித்திய விருதுகள் கிடைத்துள்ளன. சர்வதேச எழுத்தாளர் பேரவை இந்தியாவில் நடந்த போது அதில் கட்டுரை வாசித்துவிருதும் கிடைத்தது. இன்னும் பற் பல அநேக விருதுகள் பெற்றுள்ளேன்.

பூமிநாதன் : இவ்வளவு நேரத்தையும் பொறுமை கொண்டு என்னிடம் உரையாற்றியமைக்கு மிக்க நன்றி. இலக்கியத்துறையின் மகிமை பற்றி நீங்கள் தந்த விரிவான விளக்கம், அதனை நாங்களும் பின்பற்றுவதற்கு, எனக்கு மட்டுமல்ல ஏனையோருக்கும் இது சிறந்த படிப்பினையாகவும், முன்மாதிரியாகவும்இருக்குமென நினைக்கிறேன். மீண்டும் சந்திப்போம்.

ஒரு விடயத்தைப் பகிரங்கப்படுத்திக் கூறமுன்
அவ்விடயத்தின் உண்மை
நிலையை உறுதிப்படுத்திக் கொள்.

01. தம்பித்து - அசையாது
02. செழுமை - வளம்
03. மடியாது - சாகாது, கெடாது, முயற்சியறாது
04. பிரவாகம் - வெள்ளம்

—*—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22

# எழுத்துக்கு, இலக்கியமா, பேச்சு வழக்கா சிறந்தது.

படித்தவர், பாமரர் என எல்லோராலும் எளிதாக விளங்கக் கூடியதாக இருப்பது மொழியின் பேச்சு வழக்கு. ஆனால் இலக்கியம் அவ்வாறல்ல. இலக்கண இலக்கிய நடைகளை நன்கு ஆழமாகக் கற்றறிந்த படித்தவர்கள்தான், பெரும்பாலும் அதனைத் தெளிவாக விளங்கிக் கொள்பவராய் இருப்பார்கள். உணர்ச்சிச் செறிவு, சொல் அலங்காரம், கற்பனை, உட்பொருள் போன்றவை இலக்கிய நடையில் அதிகம் நிறைந்திருக்கும். ஆனால், தர்க்க முறைமை, பகுப்பாய்வு, நேர்பொருள் ஆகியவைகள் பேச்சு வழக்கிற் கலந்திருக்கும்.

எளிமையாகவும், தெளிவான முறையிலும் சகலரும் விளங்கிக் கொள்ளக் கூடியதுதான் பேச்சு வழக்கு. இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலும் உரை நடை வழியாகவே அமைந்திருக்கும். ஆனால், அவற்றிற் சில புதுக் கவிதையுருவில் இடம்பெற்றுமிருக்கின்றன. நாவல், சிறுகதை, நாடகம், உரையாடல் போன்ற இலக்கிய வடிவங்களெல்லாம் இன்று, பேச்சு வழக்கில் எழுதப்படுகின்றன. அது போல் ஆரம்ப காலப் பேச்சு வழக்கிலுள்ள பல சொற்கள் இலக்கிய மொழியாகவும் அமைந்து காணப்படுகின்றன. உதாரணமாக "அயர்த்துப் போய்விட்டது" என்று பேசும் போது "அயர்த்தல்" என்ற ஆழம் நிறைந்த இலக்கிய மொழிக்கு மறத்தல்" என்று பொருளுள்ளது." "கிறுகிறுப்பு" என்ற பேச்சு வழக்கு மொழி, தலைச் சுழற்சி, என்று பொருள்படுகிறது. இவ்வாறு அதிகமான பேச்சு வழக்கு மொழிகள் இலக்கிய மொழிகளாக மறைந்துகிடப்பதை நாம் அவதானிக்கிறோம்.

அறிவை, மொழியை நுணுக்கமாகக் கற்றவர்கள் பேசும் போது அவர்களின் பேச்சுக்களில் இலக்கிய மொழிகளும் இலக்கிய வசன நடையும் குழைந்து கரைபுரண்டோடும். இலக்கியமும் பேச்சு வழக்கும் இணைந்து கலந்து இணைபிரியா இரட்டையர் போல் பிணைந்து காணப்படுவதால் என்றென்றும் அவை சங்கமித்தே உயிர் வாழும். தொடர்பாடலுக்குப் பேச்சுத் தமிழையே உபயோகிக்கின்றனர். பேச்சு மொழி வலிமையும், உயிர்ப்பு முடையது. என்று மொழியியலாளர்கள் கூறுகிறார்கள். அதனால், இன்று பேச்சு வழக்கு மொழி இலக்கியங்களில் தனித்துவமானதொரு இடத்தைப் பிடித்திருப்பதைக் காண்கிறோம்.

மாணவர்களின் இலக்கியப் பாடத்திற்குரிய நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்புக்களிலும் பேச்சு வழக்கைக் கையாண்டு சிறுகதைகள், புதுக் கவிதைகள் எழுதப்பட்டிருப்பதைக் கவனிக்கிறோம். இலக்கண வரம்புகளுக்குட்பட்டுக் காணப்படுபவற்றைப் பெரும்பாலும் இலக்கியங்களாக நாம் கருதுகிறோம். ஆனால் தனிப் பண்புகளைக்கொண்டு பேச்சு வழக்கிலும் ஒரு சில இலக்கியங்கள் இருக்கத்தான் செய்கின்றன. இலக்கிய நயமுள்ள கவிதைகளில் இலக்கணத் தேர்ச்சி பெற்றிருப்பதை நாம் கவனிக்கிறோம். ஆனால் பேச்சு வழக்கு மொழியிலமைந்த ஆக்கங்களைப் படிக்கும் போது தங்கு தடையின்றி நேரடியாகவும், வேகமாகவும் அதன் அர்த்தம் விளங்கிக் கொள்ளக் கூடியதாகவும் அமைந்திருக்கிறது. ஏனென்றால், அவ்வாக்கங்களை எழுதும் எழுத்தாளர்களின் கலையாற்றலும் கற்பனைத் திறனும், சொல்லாட்சியும் இலக்கண வரம்புகளை விடவும் ஒரு படி உயர்ந்திருக்கும்.

இலக்கியத்துறைக்கு முன்னோர்களின் செல்வாக்கும், பேச்சு வழக்குத் துறைக்குப் பின்னோர்களின் செல்வாக்கும் நிறைந்து காணப்படுகின்றது. தொல்காப்பியம் தொடங்கி இன்றைய இலக்கியங்கள் வரை இதற்குச் சான்று பகர்கின்றன. அன்று, உழவுத் தொழிலில் ஈடுபட்ட உழவர்கள் கூட ஏரெழுபது போன்ற இலக்கியப் படைப்புகளில் மிகுந்த அக்கறை காட்டி வந்துள்ளனர்.

சங்க இலக்கியம் தொடங்கி, காவியங்கள், பாட்டியல் நூல்கள் குறவஞ்சி, பள்ளு, பரணி எனப் பலவிதப் பாடல்களும், தாலாட்டு, பிள்ளைத் தமிழ் போன்றவற்றிலும் இலக்கணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து முக்கிய பங்கை வகித்தது. என்றாலும் ஆறு மாசம் ஒரு வருசம், "அன்னக் கிளி ஒன்னத் தேடுதே", "தண்ணி கறுத்திருச்சிபுள்ளே தவளச் சத்தம் கேட்டிருச்சி" என்று வரும் தொடர்களெல்லாம் மிகவும் பிரபல்யமான தற்போதுள்ள பேச்சு வழக்கு மொழியில் அமைந்ததாகவே உள்ளன.

இப்போதுள்ள மாணவ இலக்கியங்களிலும், "கொழுந்து வெத்தில போடயில கைபுடி லேஞ்சி கண்டு கள்ள மாம் துள்ளுதையா" என்று தொடரும் பாடல்கள் போன்றனவும் பேச்சு வழக்கிலேதான் எழுதப்பட்டுள்ளன. இவ்வாறு எழுதப்படும் பேச்சு வழக்கு மொழியிலமைந்த இலக்கியங்கள் சுவாரசியப் போக்குடையதாகவும், கவனத்தை ஈர்க்கக் கூடியதாகவும் அமைந்திருக்கும்.

இலக்கண இலக்கிய நடையில் வரும் இனிய தமிழ் மொழிகள் காண்பதற்குக் கனமாகத் தென்பட்டாலும், அவற்றின் கருத்துக்களை ஆழமாகச் சிந்திக்கும் போது அது இலகுவான அர்த்தமுள்ள கதைகள் பல கூறிக் கொண்டிருக்கும். ஆழமாக இலக்கணம் படித்தவர்களுக்கு இதுதான் சுவாரசியமாயிருக்கும்.

வெறும் பேச்சு மொழியுடன் செல்லாமல் இலக்கண இலக்கியமும் இடையிடையே புகுந்து வளர்ந்து கொண்டிருந்தால், அது எழுத்துக்கு எழில் பெறும். வாய் மொழிச் சொற்களை மட்டும் கையாண்டு எழுதுவதால் ஆழமான இலக்கியச் சொற்கள் எம்மை விட்டுத் தூரமாகி விடலாம். அதனால் பேச்சு வழக்காக எழுதுவதாயிருந்தாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியச் சொற்களையும் இணைத்து அனுபவித்து வருவதுதான் மொழித் திறனுக்கு வழியமைக்கும். மெருகூட்டும். எழுத்துத் துறைக்குக் காலடியெடுத்து வைக்கும் புதிய எழுத்தாளர்களும் இதனையொரு சிறிய படிப்பினையாய்க் கொண்டு எழுத்துக்களுடன் செறிந்து தொடரட்டும்.

எழுத்தை வளமாக்கும் இனிய தமிழே!
எம்மோடிணைந்து இலங்கு.

*01.* சங்கமித்து - கூடி
*02.* சான்று - சாட்சி
*03.* எழில் - அழகு
*04.* மெருகூட்டுதல் - பிரகாசிக்கச் செய்தல்
*05.* செறிந்து - நெருங்கி, கலந்து
*06.* இலங்குதல் - துலங்குதல், விளங்குதல், சிறத்தல்

—✶—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23

# கட்டிளமைப் பருவமும் இலத்திரனியல் ஊடகங்களும்

சத்யா : "ஆ! அருண் வணக்கம், எப்படி சுகமா?

அருண் : வணக்கம்டா, சுகமாயிருக்கிறேன். அவசரமாய்ப் போய்க் கொண்டிருக்கிறேன். முக்கியமான தொரு வேலை. என்னோடு சேர்ந்துவா! கதைத்துக் கொண்டே போகலாம்.

சத்யா : "சரி. என்னென்று சொல்லு."

அருண் : "இன்றைக்குப் பள்ளிக்கூடத்தில் ஒரு பிரச்சினை நடந்திருக்கு பின்னேரம் பெற்றோரையெல்லாம் சேர்த்துக் கூட்டம் நடாத்துவதற்கு அதிபர் என்னிடம் "போனில்" சொன்னார். எனது மகனின் வகுப்பில் படிக்கும் இரண்டு மாணவர்கள் அடிக்கடி பாடசாலைக்குப் போகாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்பார்களாம். இவர்களின் நடவடிக்கைகளை நேற்று நேரில் கண்டு பிடித்தார்களாம்."

சத்யா : "ஆமா. நானும் இப்படியான செய்திகளைக் கேள்விப்பட்டிருக்கிறேன் மாணவர்களிடையில் செல்லிடப் பேசி, கணனி முதலான இலத்திரனியல் கருவிகளின் பாவனை அதிகரித்த காரணத்தால், குறுஞ் செய்தி, மின்னஞ்சல், முகநூல், இணையம் ஆகியவற்றினூடாக அவர்கள் விரும்பியவர்களுக்கு எல்லாம் வீணான முறையில் விரைவாகத் தகவல்களைப் பரப்புகிறர்கள். பெற்றுக் கொள்கிறார்கள். இதனால் மேலை நாட்டுக் கலாசாரங்களைக் கண்ட நம் நாட்டுப் பிள்ளைகளும் அதில் ஈர்க்கப்பட்டு அதுபோல் நடக்கத் தூண்டப்படுகின்றார்கள்."

அருண் : இந்த இலத்திரனியல் ஊடகங்களால், மாணவ சமூகத்துக்கு நல்ல வரப்பிரசாதமும் இருக்குத்தான். இப்போதுள்ள நவீன உலகில், விஞ்ஞான ரீதியானவை, பொது அறிவு விடயங்கள், உலக நாடுகள் ஏற்படுத்தும் நவீன திறன்கள் போன்ற எல்லாத் துறைகளையும் உடனுக்குடன் இருந்த இடத்திலேயே மாணவர்கள் அறிந்து கொள்கிறார்கள். இதனால் எத்தனையோ மாணவர்கள் பாடசாலைக் கல்வி நிலையின் போதே பற்பல கண்டு பிடிப்புக்களையும் நம் நாட்டிலேயே உருவாக்கியிருக் கிறார்கள்."

என்றாலும், இவ்வாறான நல்ல விடயங்களில் ஈடுபாடுடையவர்களின் மத்தியில், இரண்டொரு வீதத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கற்ற காட்சிகளைப் பார்த்துவிட்டு வழிகேட்டில் தம்மை வீழ்த்திக் கொள்கிறார்கள். துஷ்பிரயோகங்களைத் தொடர்கிறார்கள். விஷேடமாக இந்த மாணவர்களிடம் ஆசிரிய சமூகமும் அதி முக்கியமாகப் பெற்றோரும் கூடிய கவனஞ் செலுத்த வேண்டும். வாழ்வியலுக்குத் தேவையான அறிவியலை மாத்திரம் கற்றுத் தேற வேண்டும்.

சத்யா : "அறிவை வளர்க்கும் வழிமுறைகளை மட்டும் கவர்ந்துகொண்டு அடுத்தவற்றை ஒதுக்கிவிட மாணவருக்கு அறிவுரை வழங்க வேண்டும். படிக்கும் போது கட்டிளமைப் பருவத்தினருக்கு வழிகள் சறுக்கும், வழுக்கும், வீழ்ந்துவிடக்கூடாது. தன்னிடமுள்ள நிதானத்தைப் பாவித்து நேர்வழியில் நடந்து செல்ல வேண்டும். படிக்கும் பருவத்தில் வழி தவறி வீழ்ந்துவிடுவார்களானால் அது ஆழத்தில் எறிந்த கல்போன்று ஆகிவிடும். அதிலிருந்து ஒருபோதும் மீட்சி பெற முடியாமல் வாழ்க்கையில் தோல்வியுற்று விரக்தியடைந்து விடுவார்கள்.

அருண் : "இதனால், மாணவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடுமல்லவா. படிக்கும் மாணவர்களின் சிந்தனைப் பாதை குறுக்கு வழியை நோக்காது அறிவு வழியை நோக்கி அடியெடுக்க வேண்டும். பருவத்திற் பயிர் செய்யப் பழக்கங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டால், படிப்பின் வெற்றியை நிச்சயம் ஈட்டலாம். நல்லவன் என்ற நற்பெயரோடு வல்லவனாய் வளர்வதற்கான நல்வழிகளை மாத்திரம் இந்த இலத்திரனியல் ஊடகங்களில் தேடிக் கற்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் பத்திரிகைகளின் குறுந்தகவல்கள், சேவைகளைத் தமிழிற் பெறலாம். முகநூல், இணையம், மின்னஞ்சல்களினூடாக மாணவர்களுக்குத் தேவைப்படும் அனைத்துக் கல்வித் தேவைகளையுமறிந்து அத்தகவல்களைப் பெற்றுக் கற்று உயர் நிலையையடையலாம். பல கண்டுபிடிப்புக்களை மேற்கொள்வதற்கும்இந்த இலத்திரனியல் ஊடகங்கள் பெரும் பங்காற்றுகின்றன. மாணவர்களின் ஆற்றற் திறன்களை வளர்ப்பதால்,எதிர்பார்ப்பை விடவும் எதேச்சையாக முன்னேறலாம். எனவே, இந்த இலத்திரனியல் ஊடகங்களை நல்லவற்றுக்காகவும், அறிவுக்காகவும் அறிவு விருத்திக்காகவும் மட்டும் கையாண்டால் மாணவர்களின் எதிர்காலம் உயர்வடையும்."

சத்யா : "பற்றுவைத்துக் கற்றாலேயன்றி, படிப்புத் தளிர்விட்டு வளரா. ஊடகங்களின் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஊறிக் கிடக்காது, பாடங்களின் ஆய்வுக்கும், பொது அறிவுக்கும் மட்டும் அவற்றைப் பயன்படுத்திக் கொண்டால், கட்டிளமைப் பருவத்தினர், வாழ்வின் அழிவிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதை இதிலிருந்து ஒரு படிப்பினையாகக் கொள்ளட்டும். சரி, நேரமாகிறது. வருகிறேன்."

அருண் : "நல்லது சென்று வா"

தரமாகப் படித்தவனல்ல தகுதியானவன்
தகுந்த பண்பும் ஒழுக்கமுமுள்ளவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. ஈர்க்ப்பட்டு - இழுக்கப்பட்டு
02. வரப்பிரசாதம் - அருட்கொடை
03. வழக்கற்ற - ஒழுக்கமற்ற
04. ஈட்டலாம் - சம்பாதிக்கலாம்
05. எதேச்சையாக - விருப்பத்தின்படி
06. தளிர் - முளையிலை

—*—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24

## வாசிப்பு நிரந்தரப் பதிவை ஏற்படுத்தும்

தயான் : என்ன தீபன், உனக்குக் கடும் வேலைப்பழு போல் தெரிகிறது. உன்னைச் சந்திக்கலாமென்றுதான் இந் நேரத்தில் வந்தேன்.

தீபன் : வாசிப்பு மாதம் அடுத்த வாரம் ஆரம்பிக்கிறதல்லவா. பத்திரிகைக்கு அதற்கொரு "ஆட்டிக்கல்" கொடுக்கலா மென்றுதான் முனைகிறேன் தயான்.

தயான் : பத்திரிகையை விட இணையத்தில் வரும் இவ்வாறானவைகளை வாசிக்கலாமல்லவா. ஏன் உனக்கிந்தச் சிரமம்.

தீபன் : வாசிப்பு ஒரு வரப்பிரசாதம், அது தெரியுமா உனக்கு? குறுகிய வட்டத்திற்குள்ளிருந்து பேசாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோம்பேறிகளாயிருப்போர்தான் இணையத்தை மட்டும் எதிர்பார்க்கிறார்கள். இணையம், கணனி முதலியவற்றில் போட்டிருக்கும் விடயங்கள் குறிப்பிட்டதொரு தலைப்பின் கீழ் வரவேண்டிய சகல குறிப்புக்களையும் அடக்கியிராது. முக்கியமான சிலதை மட்டுமே போடுவார்கள். ஆனால் பத்திரிகை, சஞ்சிகை, பாடப்புத்தகங்கள் என்பவற்றில் விரிவாக எழுதித் தெளிவாக விளக்கி வாசித்தறியும் விதத்தில் அமைத்திருப்பார்கள்.

நூல்களை அயர்வின்றி வாசிப்பவன் நுண்ணறிவைப் பிழையின்றிப் பெறுவான். நூல்களை அதிகம் வாசிக்காதவன் நுட்பமாய் எதையும் பேசமாட்டான். பாடசாலையில் படிக்கும் மாணவர்களோ, பல்கலைக்கழகத்திற் பயிலும் இளைஞர்களோ, அல்லது அதனைப் பற்றி அறிவூட்டும் ஆசான்களோ யாராயினும் முழு விபரம் திரட்டிக் கொண்டால் மாத்திரமே முழுப் பயனையும் அடையலாம்.

வினாப் பத்திரங்களுக்கு விடையளிக்கும் போது, இணையம், கணனியிலிருப்பவற்றைப் படித்து எழுதிவிட்டு வருபவர்களை விட விபரமாகவும், தெளிவாகவும் அனைத்து விடயங்களையும் தொகுத்து எழுதியவர்களுக்குத்தான் அதிக புள்ளிகளை வழங்குகிறோம். ஏனென்றால், பரந்தளவில் அவன் விடயத்தை விளங்கியிருக்கிறான் என்பதால், அறிவு விருத்திக்குத் தான் முன்னுரிமை வழங்க வேண்டும்.

இணையத்திலோ, கணனியிலோ எல்லாமிருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டுச் சேமித்திருப்பது மட்டுந்தானிருக்கும். ஆனால், பத்திரிகை, சஞ்சிகை பாடப் புத்தகங்களில் விரிவான முறையில் எல்லாத் தகவல்களும் இணைந்திருப்பதால் வாசிக்கும் போதே இலகுவாய் விளங்கிக் கொள்ளலாம். சிறுவரிலிருந்து எல்லா வயதினரும் தெளிவாய் அறிந்து கொள்வர். அதிலுள்ள ஒவ்வொரு விடயமும் பல்வேறு வடிவில் விபரமாய் அமைக்கப்பட்டிருக்கும்.

தயான் : இப்போது கையில் எடுத்துச் செல்லும் செல்லிடத் தெலைபேசியில் இவற்றை அறிந்து கொள்ளக்கூடியதாயிருக்கிறதல்லவா. கொண்டு செல்லும் இடத்திலேயே பார்த்துக் கொள்ளலாமே.

தீபன் : ஆம் கொண்டு செல்லும் இடங்களிலும் பார்க்கலாம். ஆனால் விடயங்களை மூளையில் கொள்கலமாய் வைத்திருக்க முடியாது. ஒரு விடயத்தைப் பற்றித் தெரிய வேண்டிய பொழுதெல்லாம் இணையமும் கணனியும்தான் தேவைப்படுமே தவிர, இவ்விடயங்களை மூளையிலிருந்து பெற வாய்ப்பிருக்காது. ஆனால், பத்திரிகை, சஞ்சிகை, நூல்களில் வாசித்த அறிவு ஏற்கனவே மூளையிற் பதியப்பட்டிருக்கும். எங்கு சென்றாலும் அங்கு தொலைபேசியையோ, கணனியையோ உபயோகப்படுத்தாமல், தன் மூளையிற் பதிந்திருப்பதைப் பயன்படுத்தலாம். தேவையான சந்தர்ப்பத்துக்கு; தேவையான இடத்திற்கு; தேவையான காலங்களுக்குத் தேடற் கருவிகளின்றித் தேர்வில் தேறிவிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையத்தையும், கணனியையும் மட்டும் எதிர்பார்த்துக் காத்திருப்போர் வாசிக்கும் திறமையை முற்றாக இழந்து விடுகிறார்கள். தமிழோ, சிங்களமோ அல்லது ஆங்கிலமோ எந்த மொழியாயினும் சரளமாக வாசிக்கப் பழக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் இணையத்திற் பதிந்திருப்பவை தமிழை விட ஆங்கிலத்தில் அதிகமிருக்கும். எல்லா மொழிகளையும் இலகுவாய் வாசித்தறிய மொழிவாசிப்புத் திறன் அவசியம். அதற்கு நூல்கள்தான் பொருத்தமானது. உலகிலே உலவும் **உன்னதமான** எல்லா நூல்களையும் தேடி ஆராய்ந்து வாசிப்பதால், பொது அறிவுகளைப் போதியளவு சேர்த்து மூளையிற் களஞ்சியப் படுத்தலாம்.

தயான் : இணையம், கணனி போன்றவற்றில் இருப்பவற்றை எல்லாக் காலங்களிலும் பார்க்கக் கூடியதாய் இருக்குமா தீபன்

தீபன் : நல்லதொரு கேள்வியைக் கேட்டீர்கள் தயான். இதைத்தான் கூற வந்தேன். நீங்கள் முந்திக் கொண்டீர்கள். இணையம், கணனி போன்றவற்றில் இருப்பவை சில நேரம், கொள்ளவில் அதிகமான தகவல்கள் வந்தடையும் போது அவற்றின் கொள்ளளவு முழுமையாகிவிட்டால் அதில் சில தகவல்களை அழித்துத்தான் அடுத்து வரும் தகவலைப் பதிய வேண்டும். ஆனால், மூளை அவ்வாறல்ல. நாம் உயிர் வாழும் காலம் முழுவதும் உணர்ச்சியுள்ள ஒவ்வொருவரின் மூளையிலும் வாசித்த தகவல்கள் பதிவாயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயான் : நன்கு விளக்கினாய் தீபன், இனிமேல் நானும் வாசிக்கும் பழக்கத்தை முன்னெடுக்கப் போகிறேன். இது எனக்கு நல்லதொரு படிப்பினை.

யோசித்து உணர்ந்து கொள்ள முடியாததை
வாசித்து அறிந்து கொள்ளலாம்.

01. ஆட்டிக்கள் (Article) - செய்தித் தாளில் வெளியாகும் கட்டுரை
02. அயர்வு - மயக்கம்
03. கொள்கலம் - பண்டம் இடும் கலம்
04. தேர்வு - ஆராய்ச்சி, பயிற்சி
05. தேறி - தேறுதல், தெளிதல்
06. சரளம் - சுலபம், ஒழுங்கு
07. உன்னதம் - சிறப்பு, உயர்ச்சி, மேன்மை

—✶—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25

# திருந்திய உள்ளம்

சதீர் : காலை வந்தனம். ஆஹா! எப்பிடியிருக்கிறீர்கள். ஜினாஸ் நீண்ட நாட்களுக்குப் பிறகு உங்களைச் சந்திக்கிறேன்.

ஜினாஸ் : வந்தனம்டா. நல்லாயிருக்கிறேன். நீங்களெப்படி?

சதீர் : நானும் நலமய்த்தானிருக்கிறேன். எப்படி உங்க மனைவியைப் பொருள்தேட சில வருடங்களுக்கு முன் வெளிநாட்டுக்கு அனுப்பியிருந்தீர்களே. வீட்டுக்கு இன்னும் வந்து சேரவில்லையா? உங்க குழந்தைகள் எல்லோரும் பாடசாலை செல்கிறார்களா?

ஜினாஸ் : ஆம், பிள்ளைகள் பாடசாலை செல்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், மனைவி வரவில்லை. பிள்ளைகளைப் படிக்க வைத்துப் பெரியவர்களாக்கப் போதிய பணம் தேவைப்படுகிறது. இப்போதே மூத்தவள் எட்டாம் வகுப்பும் மற்றவள் ஆறாம் வகுப்பும், மகன் ஐந்தாம் வகுப்பிலும் படிக்கிறார்கள். காலம் கடந்து செல்லும் போது இன்னும் பெரியவர்களானால் அதிகளவு பணமல்லவா தேவைப்படும். அதுதான் மனைவியை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தேன். நான் சம்பாதிக்கிற பணத்தில் நாளாந்தச் செலவுகள் ஒரு வாறாய்ப் போய்க்கொண்டிருக்கிறது.

அது மட்டுமல்ல மனைவி அனுப்பும் பணத்தில் பிள்ளைகளின் படிப்புச் செலவு போக, மிகுதியைச் சேமித்து வீட்டைப் பெரிதாக்கி மாடி வீடொன்றைக் கட்டிக் கொண்டிருக்கிறேன். அதற்குள் தேவையான பெறுமதியான தளபாடங்களையும் ஒவ்வொன்றாக வாங்கிப் போட வேண்டுமல்லவா. எல்லாவற்றுக்கும் பணம்தானே தேவை.

சதீர் : எப்படித்தான் பெரிய பொருளாதார வசதி படைத்திருந்தாலும் தமது அந்தஸ்து இதனால் உயர்ந்து கொண்டுதான் சென்றாலும் வீட்டிலிருந்து நம் குழந்தைகளைப் பராமரிக்கத் தாய்தானே முக்கியம். வளர்ந்து கொண்டு வரும் குழந்தைகள் அவர்கள் ஆண்களாயிருந்தாலும் பெண்களாக இருந்தாலும் ஒரு ஒழுக்க வரையறைக்குள் வளர்த்தெடுக்க வேண்டும். பிள்ளைகளின் நேர்மையான எதிர்காலந்தான் பெற்றோரின் மகிழ்ச்சியும். நான் சொல்வது சரிதானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் வழி தவறி இடர்ப்பாடுகளைச் சந்திக்க நேரும் போது அதனால் பெற்றோர்க்குந்தான் நிம்மதியற்ற வாழ்வு. நாட்டு நடப்பைப் பற்றி நான் உங்களிடம் ஒன்றும் கூறத் தேவையில்லை. இளம் வயதிலேயே பிள்கைள் பராமரிப்பற்றுக் காணப்படுவதால் அவர்கள் நினைத்த படி வாழத் தொடங்குகிறார்கள். அத்துடன் தற்போதையக் காலத்தில் இலத்திரனியல் தொடர்பாடற் சாதனங்கள் நவீனமடைந்த போது அதனைப் பாவித்து அதிலுள்ள ஒழுக்கக் கேடான நெறிகளைப் பின்பற்றி இவர்களும் தவறான வழிகேட்டில் தள்ளப்படுகிறார்கள். அதனால், தாய்தான் உடனிருந்து பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டும். ஒரு தந்தை வெளிவேலைகள் பார்ப்பதுடன் தனது உழைப்பிலும்தான் கவன மெடுக்கலாம். இன்றையச் சிறார்களைக் கண்ணுங் கருத்துமாய்க் கவனிக்க முக்கியமானவள் தாய்தானே.

ஜினாஸ் : நீங்கள் கூறுவது சரிதான். ஆனால் ஒருவர் உழைத்து உருப்படியாய் ஒன்றும் செய்யப் போதாது. சமூக அந்தஸ்தும் பொருளாதாரமும் முன்னேறிக்கொண்டு செல்வதற்குப் போதிய பணந்தான் தேவை. பணமில்லாதவன் பிணம் போன்றவன். இருவரும் உழைத்தாற்தான் இந்நாளில் விடிவு வரும். சமூகமும் எம்மை மதிக்கும். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்.

சதீர் : நீங்கள் எதைத்தான் கூறினாலும் நான் அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்பாடில்லை. ஆசை இருக்க வேண்டும். அளவோடுதான் அதனை மீறினால் அழிவுதான் தேவைக்கு மேற்பட்டது ஆசை. ஆசைக்கு மேற்பட்டது அவா. தேவையில் நீதியும் நேர்மையும் பொதிந்திருக்கும். ஆசையில் அநீதியும் கெடுதியும் நிறைந்திருக்கும். அதிக ஆசையுள்ளவன் வறுமையானவனைப் போன்றவன். அளவு கடந்து ஆசை வைத்தால் அவமானத்தைச் சுமக்க நேரும். அதனால், போதுமென்ற மன நிலையை உருவாக்கிப் பொருந்துதலாய்ப் பொருள் தேட முனைய வேண்டும்.

உள்ளதைக் கொண்டு நல்லதைக் கையாண்டு வாழ்வதே திருப்தியும் தியாகமுமாகும். அற நெறி தவறாத பிள்ளைகளாய், அறிவும் அன்பும் நிறைந்து வாழ்வு வளம் பெற்றிருக்கும். ஒழுக்கமும் ஒற்றுமையும் ஒருங்கு சேர்ந்து ஒழுங்கான எதிர்காலம் கிட்டும். உண்மையும், நேர்மையும் பெற்று ஊரில் வாழ்பவனுக்குத்தான் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்த்தும் நற்பெயருமுண்டு. இருப்பதைக் கொண்டு திருப்தியாய் வாழ்வது மனத்துக்கு நிறைவையும நிம்மதியையும் தரவல்லது. என்னால் முடிந்ததைக் கூறுகிறேன். ஏற்பதும் மறுப்பதும் இனி உங்களைப் பொறுத்தது.

ஜினாஸ் : என் அறிவுக் கண்ணைத் திறந்து விட்டீர்கள் சதீஸ். இம் முறை என் மனைவி வீடுவந்தால், மீண்டும் வெளிநாட்டுக்கு அனுப்பாமல், வீட்டையும் பிள்ளைகளையும் பராமரித்துக் கொண்டு இருக்குமாறு கூறுவேன். தூரத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சியென நம்பித் தம் வாழ்வை அடைமானம் வைப்பவர்களுக்கு இது ஒரு படிப்பினையாகவாவது இருக்காதா? நல்லதைக் கூறினாய். நன்றி சதீஸ்! மீண்டும் சந்திப்போம்.

நல்லவரோடு கொள்ளும் நட்பு
தீய வழிக்கு இட்டுச் செல்லாது.

01. இடர்பாடு - இடையூறு, துன்பம்
02. நெறி - வழி, ஒழுக்கம்
03. உடன்பாடு - இசைதல்
04. அவா - பேராசை
05. பொருந்துதல் - பொருத்தமாகுதல்
06. ஒருங்கு - முழுமை

—*—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26

## சுய கட்டுப்பாடு தேவை

மயூரன் : "என்ன சாந்தன் புது வருடப் பிறப்புக்கு லீவில் ஊருக்கு வந்தாயாக்கும். எப்படி சுகமாயிருக்கிறாயா? உனக்கென்ன நகர வாழ்க்கை பெரும் குதூகல மாய்த்தான் போகும்.

சாந்தன் : நீ சொல்வது சரிதான். என்றாலும் சொந்தக் கிராமத்தைப் போல இருக்குமா? இயற்கையினழகு இங்கேதான் குடியிருக்கு. நகர வாழ்க்கை கெடுபிடியானது. பல ரகமான மனிதர்கள், அதோடு உல்லாசப் பயணிகள். அதுவேறு சன நெருக்கமான சஞ்சாரம்.

மயூரன் : "உல்லாசப் பயணிகள் எனும் போதுதான் நினைவு வருகிறது. இங்கே பார் சாந்தன் உல்லாசப் பயணிகளால் நாட்டின் பண்பாடு சீரழிந்து, போதைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் பாவனை, போதைப் பொருள் கடத்தல், அது மட்டுமல்ல, தொற்று நோய்களுமல்லவா நம் நாட்டவருக்கும் ஏற்படுகிறது. இது பெரிய பயங்கரமாய்ப் பங்கம் விளைவிக்கிறதே!"

சாந்தன் : "இவ்வகையான தீமைகள் இருந்தாலும், உல்லாசப் பயணிகளின் வருகையால், நாட்டின் வருமானம் அதிகரித்து நாடு முன்னேற்றமடையுமல்லவா. அதுதான் வெளிநாட்டவரை உல்லாசப்பயணிகளாக எடுப்பது வர வரக் கூடிக் கொண்டே போகிறது. நம் நாடு இயற்கை வளமும், எழிலும் நிறைந்ததாய் இருப்பதால் கவரப்பட்டு அதிகமானோர் இதை அனுபவிக்க வருகிறார்கள்."

"எமது மக்களைப் போலல்லாமல் எம் நாட்டுப் பொருட்களை அதிக விலை கொடுத்துக் கொள்வனவு செய்கிறார்கள். நம் நாட்டுக் கைத்தொழிற் பொருட்களுக்குத்தான் அதிக கிராக்கி இதில் அவர்களுக்குக் கவர்ச்சியுமிருக்கிறது. தங்கும் விடுதிகளுக்கும் தரமான பணங்களைத் தாராளமாய் அள்ளி வீசுவார்கள். வாரக் கணக்கிலும் மாதக் கணக்கிலும் இங்கு தங்குகிறார்களே. அவற்றால் அதிக வருமானமல்லவா"

"புனிதத் தலங்கள் வேண்டுமா? புராதனச் சின்னங்கள் வேண்டுமா? இயற்கையின் எழில் கொஞ்சும் எல்லா இடங்களையும் அவர்கள் தரிசிப்பதால் அங்கெல்லாம் உல்லாசப் பயணிகளின் வருமானம் கொட்டிக் கிடக்கிறதல்லவா. அதுதான் எமது அரசாங்கம் எங்கிருந்தாலும் உல்லாசப் பயணிகளை இங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வத்துடன் வரவேற்கிறது."

மயூரன் : இதெல்லாம் முற்றிலும் உண்மையானதுதான். ஆனால், அவர்களின் பண்பாட்டையும், நடைமுறைகளையும் பார்த்துக் கவரப்பட்ட நம் நாட்டு நகரவாசிகளும் அதுபோன்று நடக்க முற்படுகிறார்கள். நகரவாசிகளைப் பார்த்துக் கிராமவாசிகளும் பின்பற்றுகிறார்கள். இதனால் தலை கால் தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறார்களே நம் நாட்டவரும். நம் நாட்டுப் பண்பாடுகளுக்கு இது முற்றிலும் மாறானதல்லவா. அத்துடன் நின்று விடுகிறதா? உல்லாசப் பயணிகளால் நம் நாட்டவருக்கும் எத்தனையோ தொற்று நோய்கள் எயிட்ஸ் நோய், கொவிட் 19 என்றெல்லாம் பரவுவதற்கு அவர்களும் ஒரு காரணிதான். நீ என்ன சொல்கிறாய்.

சாந்தன் : "முற்றாக அவர்களாற்தான் தொற்றுக்கள் ஏற்படுகின்றதெனக் கூற முடியாது. ஏனென்றால் இங்கு வரும் உல்லாசப் பயணிகளை அவர்களின் சொந்த நாட்டில், தொற்று நோய் பற்றிப் பரீட்சித்துத்தான் அனுப்புகிறார்கள். அத்துடன், எமது நாட்டுக்கு அவர்கள் வந்திறங்கியதும் தொற்று நோயைக் கண்டு கொள்ளும் இயந்திரத்தை உபயோகித்து, கட்டு நாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கியதும் அவர்களைப் பரீட்சித்துப் பார்க்கிறார்கள். எமதரசாங்கம் முதலில் அவர்களின் தொற்று நோய்ப் பரிசீலனையைச் செய்து அதற்கேற்ற தடை மருந்துகளையும், வக்ஸீன்களையும் செலுத்திய பின்புதான் நாட்டில் நடமாட இடமளிக்கின்றது. தப்பித் தவறிச் சந்தர்ப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ் நிலையால் ஏற்பட்டாலே யல்லாமல் வேறு தவறு நடக்காது."

"அது மட்டுமல்ல, எம் நாட்டு மக்கள் வெளிநாடுகளி லிருந்தவர்கள், அல்லது தேவைகாரணமாகச் சென்றவர்கள் தாய் நாடு திரும்பும் போது இந்தத் தொற்றுக்களையும் சேர்த்துக் கொண்டு வருகிறார்கள். அதனால் சுற்றுலாப் பயணிகள் மட்டும் காரணமல்ல. அடுத்தது, நீ சொன்னாய் பண்பாடுகளைப் பற்றி. அது உண்மைதான். ஆனால், எமது நாட்டு மக்களுக்கு ஒவ்வொரு சமூதாயத்தவருக்கும் வெவ்வேறு கலாசாரம் பண்பாடுகள் உள்ளதல்லவா. அவ்வாறு நடந்து கொள்ளாமல், பிற சமூகப் பண்பாட்டைப் பின்பற்றி எதற்காக நடக்க வேண்டும். அது அறியாமையான சிறு தொகை மக்கள்தான் அவ்வாறு செய்கிறார்கள். எம்மக்களின் அஞ்ஞானம் அகல வேண்டும். கலாசாரம் மதத்தை விழுங்கி விடக்கூடாது. அவ்வாறு அந்நிய கலாசாரங்களைப் பின்பற்றுபவர்கள் வழிகேட்டில் தள்ளப்படுகிறார்கள். என்பதைப் பார்த்து எமது மக்கள் படிப்பினையாய்க் கொள்ள வேண்டும்.

மயூரன் : "போதைப் பொருள் பாவனை, போதைப்பொருள் கடத்தல் போன்றனவும் உல்லாசப் பயணிகளிலிருந்துதான் உதயமானது."

சாந்தன் : "ஏன் நம் நாட்டு மக்களும்தான் அதில் ஈடுபடுகிறார்களே. போதை என்பது தீது. அது பாதை தடுமாறும் போது என்பதை உணர்ந்தால் அதனை யாருமே நாடார். தன்னைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானேதான் துணிய வேண்டும். அதனால் நாமும் நாடும் பாதிப்படைய வாய்ப்பிருக்காது. எம் ஒவ்வொருவருக்கும் சுய கட்டுப்பாடு அவசியம் தேவை. இல்லையென்றால் அதல பாதாளத்திற் தள்ளப்படுவோம். அதனால், சிந்தித்துச் செயற்படுவதே நம்மெல்லோருக்கும் சிறந்தது மயூரன் சென்று வருகிறேன்."

மயூரன் : "சரி சாந்தன் நாளை உன்னை மீண்டும் சந்திப்வேன். வருகிறேன்."

சரிகள் நிறைந்துள்ள இடத்தில்
பிழைகள் நுழைய வாய்ப்பிருக்காது.

01. சஞ்சாரம் - நடமாட்டம், யாத்திரை
02. பங்கம் - கெடுதி
03. அஞ்ஞானம் - அறியாமை
04. நாடார் - விரும்பார், தேடார்

—*—

13930 CC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***நூலாசிரியர் பற்றி...***

தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் மொழித் துறைக்கு இடையிடையே வருகை தருவதன் மூலம் எனக்கு அறிமுகமானவர் மதீனா உம்மாஹ் அவர்கள். இவர், அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர். ஓர் ஆசிரியர். ஊரிலும், அக்கரைப்பற்றிற்கு வெளியேயும் நீண்ட காலம் கற்பித்த அநுபவமிக்கவர். 34 வருடங்கள் ஆசிரிய சேவை புரிந்து சுயவிருப்பின் பெயரிலே 57 வயதில் ஓய்வு பெற்றவர். பிரபலமான ஆயுர்வேத யூனானி வைத்தியர் முஹம்மது இப்றாலெப்பையின் புதல்வி.

ஆசிரிய சேவையிலிருந்து விலகினாலும் எப்படியாவது மாணவர்களுக்குப் போதிக்க வேண்டும் என்ற அவா அவரை விட்டு விலகவில்லை என்பதற்கு அவர் எழுதிய நூல்களே ஆதாரமாகும். இவ்வனைத்து நூல்களும் சமூக, கல்வி நோக்கம் கருதியவை.

15இற்கு மேற்பட்ட நூல்களை எழுதியவர். இவ்வருடம் (2020) மாத்திரம் ஆறு நூல்களை எழுதியுள்ளார். ஆங்கில, சிங்கள அடிப்படை அறிவினைத் தருகிற மூன்று நூல்களும், சித்திரம், கட்டுரை அறிவு முதலானவற்றை தருகிற மூன்று நூல்களும் உள. ஒரு நூலினையே எழுதிப் பதிப்பிக்க முடியாமல் திணறுகின்ற போது ஆறு நூல்களை ஆறு மாதங்களுக்குள் எழுதிப் பதிப்பித்து வெளியிடுவது என்பது அபாரத் திறமைதான். அதே நேரம் ஒரு பெண் இத்தகைய முயற்சியில் ஈடுபட்டிருப்பது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி தருகின்றது.

பாட நூல்களையும், சிறியோரும் பெரியோரும் வாசித்து அறிவு பெறும் ஆக்கபூர்வமான நூல்களையும் தந்த மதீனா உம்மாஹ் மிகுந்த பாராட்டுக்குரியவர். இது போன்ற நூல்களை இன்னும் பிரசுரித்து, கல்வியுலகுக்கு அவர் சேவை புரிய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி ஸாதியாபௌசர்,
தலைவர்,
மொழித்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.



ISBN : 978 955 38622 3 5
978-955-38622-3-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org